286

Vol. VI

உ

# THE
# TEN AVATARS OF VI

# தசாவதாரம்

BY

**T. P. NARAYANASWAMI PILLAI,**
*Assistant, Chatram Secondary School, Urttanad.*

SECOND EDITION

OFFICE OF THE REGISTRAR
No.
14 JAN 1929
MADRAS

REVISED AND MODIFIED
BY

**T. V. SADASIVA PANDARATHAR,**
*Tamil Pandit, B. H. School, Kumbakonam.*

PUBLISHED BY
**T. K. SUBRAMANIAM & SON,**
**Educational Publishers,**
**KUMBAKONAM.**

*All Rights Reserved.]*
**1928**
**[Price As. 8.**

28

உ

# TEN AVATARS OF VISHNU

# தசாவதாரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
14 JAN 1929

BY
T. P. NARAYANASWAMI PILLAI,
*Assistant, Chatram Secondary School, Urttanad.*

SECOND EDITION

REVISED AND MODIFIED
BY
T. V. SADASIVA PANDARATHAR,
*Tamil Pandit, B. H. School, Kumbakonam.*

PUBLISHED BY
T. K. SUBRAMANIAM & SON,
Educational Publishers,
KUMBAKONAM.

*All Rights Reserved.*] 1928 [Price As. 8.

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

183883

தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பக நூலகம்
183
சென்னை-600 008

# PUBLISHERS' PREFACE.

Ever since we began to publish "Mahangalin Charitham" with a view to improve Piety, Patriotism and Morality in the minds of our school children, we have had a longing to publish the story of the Ten Avatars of Maha Vishnu. By the grace of Lord Sri Krishna, we obtained for sale the Complete copy-right of the book "The Ten Avatars of Vishnu" from Mr. V. Subramaniam who in herited the copyright of the same from his grand-father the late Mr. T. Krishnaswami Aiyer, proprietor of the Hindu Educational Trading Company as per his will along with his other publications. The book was originally written by Mr. T. P. Narayanasami Pillai then at Urttanad, now Tamil Pandit of the Board High School Tiruvalur. To suit the modern times, we have omitted the poetical selections, added ten illustrations for the Ten Avatars and revised it with the assistance of Mr. T V. Sadasiva Pandarathar, the Tamil Pandit of the Banadurai High School Kumbakonam. We hope this book of ours will also be much appreciated by the Educationists as our other books had been. Our thanks are due to Mr. T. V. Sadasiva Pandarathar who gladly undertook to revise the book in spite of his multifarions duties.

T. K. SUBRAMANIAM & SON.

# பொருளடக்கம்.


| எண். | | | பக்கம். |
|---|---|---|---|
| | கடவுள் வணக்கம் | | |
| 1. | மச்சாவதாரம் | ... | 1 |
| 2. | கூர்மாவதாரம் | ... | 7 |
| 3. | ஆதி வராகாவதாரம் | ... | 19 |
| 4. | நரசிம்மாவதாரம் | ... | 23 |
| 5. | வாமனுவதாரம் | ... | 41 |
| 6. | பரசுராமாவதாரம் | ... | 51 |
| 7. | இராமாவதாரம் | ... | 60 |
| 8. | பலராமாவதாரம் | ... | 102 |
| 9. | கிருஷ்ணுவதாரம் | ... | 105 |
| 10. | கற்கியவதாரக் கதை | ... | 143 |

# கடவுள் வாழ்த்து.

---

மீனாமை கோலநெடு நரசிங்க மாகிநிலம்
விரகா லளந்த குறளாய்
ஆனாது நின்றமழு வில்லுங்கோல் வேல்லுமுனை
அலமுற்ற செங்கை யவராம்
வானாடர் வந்துதொழ மண்ணாடர் ஐவரையும்
வாழ்விக்க வந்த வடிவாம்
நானாவி தங்கொள்பரி ஆளாகி நின்றருளும்
நாராய ணாய நமவே.

—வில்லிபுத்தூரார்.

ஸ்ரீ:

# தசாவதாரம்.

## மச்சாவதாரம்.


மச்சாவதாரமாவது, திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் விஷ்ணு பகவான், வேதத்தைக் கவர்ந்து ஒளித்த அயக்கிரீவன் என்னும் அசுரனை வதைத்து வேதத்தைக் கொண்டு வரவும், அப்போதுண்டான பிரளயத்தில் உலகத்திலுள்ள வித்துக்களையும் நல்லோர்களையும் காத்தருளவும் தமதிச்சையால் எடுத்தருளிய மீனுருவாகும்.

அக்கதையின் சுருக்கம்.

பிரமருக்கு விதிக்கப்பட்ட பகற் காலத்தின் முடிவில் ஒரு பிரளயம் உண்டாகும் என்று பெரியோர் கூறுவர். அப்பிரளய காலம் கிட்டியதையறிந்த திருமால் அப்போது தாம் செய்யக் கருதிய திருவிளையாடல்களுக் கேற்ப மீனுருக் கொள்ளக் கருதினர்.

அந்நாளில், நம் இந்தியாவில் சிறப்புற்றோங்கிய தென்னாட்டில் ஒரு பாண்டியன் அரசு

செலுத்தி வந்தான். அவன் பெயர் சத்திய விரதன். அவன் திருமால் திருவடிகளையே தனக்குற்ற துணையெனக் கருதி அல்லும் பகலும் மறவாது அன்பு பூண்டு செங்கோன் முறை தவறாது தன்



நாட்டை ஆண்டு வந்தான். அதனால் அவன் குடிகள் அவனைத் தமது தந்தையெனக் கொண்டாடினார்கள். அப்பாண்டியன் ஒரு நாள் அர்க்கியங் கொடுப்பதற்காக வைகையாற்றில் நின்றுகொண்டு

கையிற்கொண்ட ஜலத்தில் வைகுண்ட நாதர் ஒரு சிறு கெண்டைமீன் உருவாக விளங்கினர்.

அம்மச்சத்தைக் கண் ணுற்ற அரசன் அருள் மிகுதியால் அதை ஆற்றின் ஜலத்தில் விட்டான். அப்போது அது அவனை நோக்கி, "அருள் மிகுந்த அரசனே, உன்னை அடைக்கலமாகப் புகுந்த என்னை, என்னிடத்தில் பகைமை கொள் ளும் பெரிய மீன்கள் நிறைந்துள்ள இவ்வாற்றில் விட்டுப்போவது உன் கருணைக் கழகாகுமா? என்னை எடுத்து ஒரு பாத்திர ஜலத்திலாவது சுனை நீரிலா வது விட்டு எனக்கு எவ்வித இடையூறும் நேரி டாதவண்ணம் காப்பது உன் கடமை" என்றது. இவ்வற்புத வேண்டுகோளைக் கேட்ட அரசன் வியப்படைந்து, அம் மச்சத்தைத் தான் செய்த தவப்பயனுல் இரு கரங்களாலும் எடுத்துச் சென்று தன் அரண்மனையில் நீர் நிறைந்த ஒரு பெரும் பாத்திரத்தில் விட்டான். உடனே அது அப்பாத்திரம் சிறிதாகும்படி பருத்தது. மறு படியும் அரசன் அதை எடுத்துப்போய் ஒரு தடாகத்தில் விட்டான். அருட்கடலாகிய நம் பெருமானுக்கு அத்தடாகமும் போதாததாயிற்று. அப்புதுமையைக் கண்ட அவ்வேந்தன் அதைக் கொண்டுபோய் கடலில் விடுத்தனன். தனது எண்ணத்தின்படி பெரிய கடலையடைந்த மச்சம், அரசனது பக்தியையும் அருளையும் வியந்து

அவனது ஐயத்தையும் மனக்குழப்பத்தையும் நீக்கக் கருதி, "அரசே, என்னைப் பெருந்துன்பத்துக்கு ஆளாக்கிவிட்டாய். இந்த இடத்தில்தான் எனக்குக் கணக்கற்ற பகைவர் இருக்கிறார்கள். அவர்கள் யானையையும் விழுங்கும் வலிமையுடையரென்றால் யான் அவர்களுக்கு எவ்வாறு ஈடாவேன். அவர்கள் என்னைக் கண்டவுடன் எள்ளளவும் இரக்கமின்றி விழுங்கிவிடுவர். ஆகையால் இவ்வித ஆபத்தில் நீ என்னைத் தனியே விட்டுப்போவது உனக்கு அழகாகுமா?" என்று கூறிற்று.

பேரறிவும் பெருந்தன்மையும் வாய்ந்த அரசன், அம்மச்சத்தின் தெய்வீகத் தன்மையை அறிந்து, உலகமே விஷ்ணுமயம் என்பதை நன்குணர்ந்து, அதை மாயவனெனவே மதித்துப் பயபக்தியுடன் நோக்கி, "பெருமானே, தங்களை நான் சாதாரண மச்சமென்று நினைக்கவில்லை. படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிற்கும் முதல்வனை கடவுள் என்றே வணங்குகின்றேன். தாங்கள் இத் திருவுருக்கொண்ட காரணத்தை எனக்கு அறிவித் தருளவேண்டும்" என்று துதித்தான்.

அதற்கு அந்த மாட்சிமை பொருந்திய மச்சம், "மன்னா, உன் அன்பும் ஞானமும் உலகமெல்லாம் புகழத் தக்கவை. இன்றைக்கு ஏழாம்நாள் பிரளயம் உண்டாகப் போவதால் எழுகடல்களும்

ஒன்றுகூடிப் பொங்கி எல்லா உலகங்களையும் மூழ்குவிக்கும். அப்போது அன்பர் சிகாமணியாகிய உன்னையும் உலகிலுள்ள வித்துக்களையும் முனிவர்களையும் ஒரு தோணியிலிட்டுச் சுமந்து காப்பதற்கும், ஒப்பற்ற வேதங்களைக் கவரும் அசுரனைக் கொன்று பிரமன் தூங்கி விழித்தவுடன் அவற்றை அவனிடத்தில் சேர்ப்பித்தற்கும், இவ்வுருக் கொண்டனன்" என்று திருவாய்மலர்ந்து அப் பெருங் கடலிற் புகுந்து மறைந்தது.

அரசன் அதனைக் கேட்டதுமுதல் அப்பெருமானது கருணையை நினைக்குந்தோறும் மனங் கனிந்து அவர் புகழைப்போற்றி வாழும்நாளில், அம்மச்சம் அருளியவாறு ஏழாம்நாள் ஏழு சமுத்திரங்களும் ஆகாயத்திற் சென்று கவிழ்ந்தாற் போல மேகங்கள் யானைத் துதிக்கையெனத் தாரை தாரையாக மழை பெய்ய இரவெனும்படி எங்கும் இருண்டது. மலைகளெல்லாம் சாய்ந்து தரை மட்டமாயின. கடலெல்லாம் மலைபோலப் பொங்கி உயர்ந்தன. அக்காலம் பிரமருக்கு இராக்காலத் தொடக்கமாகையால் அக்கடலில் அவர் ஆனந்த நித்திரை கொண்டார். அவ்வுறக்கத்தாலுண்டாகிய பெருமூச்சோடு நான்கு வேதங்களும் வெளி வந்தன. அப்போது அங்குத் தோன்றிய அயக்ரீவன் என்னும் அசுரன் அவ்வேதங்களைக் கவர்ந்து சென்றனன். அக்காலத்தை எதிர்பார்த்

திருந்த எல்லா முணர்ந்த பகவான் மச்சவுரு வோடு அவ்வசுரனைத் தடுத்து அவனோடு கடும் போர் தொடுத்து அவனைக் கொன்று அவ்வேதங் களைத் திரும்பக் கொணர்ந்தனர்.

சத்தியவிரதன் முதலியோர் யாவரும் அவ் வெள்ளத்தில் தோன்றிய தோணியிலேறி அக் கடலின்மீது மிதந்துகொண் டிருந்தனர். பொங் கிய கடல்முழுதும் மச்சத்தின்* செலுவுட் புகுந்து ஒளித்தது. அதை அறியாமல், தோணியிலிருந்த யாவரும் பிரமித்துத் திருமாலைத் தேடியும் அவர் காணப்படாமையால் அவரை துதித்துக்கொண்டே அங்கே தங்கினர். ஏழு சமுத்திரங்களும் மற்று முள்ள சராசரங்களும் ஒரு செலுவுள் அடங்கி, இருந்த இடம் தெரியாமல் ஒடுங்குமாயின், அம் மச்சத்தின் பெருமையை எடுத்துரைப்பவர் யாவர்? அப்போது சத்தியவிரதன் முதலியோர் அங்குத் தெய்வச் செயலால் தோன்றிய ஒரு பாம்பைக் கயி றகக்கொண்டு அம்மச்சத்தின் ஒரு கொம்பில் கட் டித் தமது துன்பம் ஒழிந்து பகவானைத் துதித் துக்கொண் டிருந்தார்கள். பரந்தாமன் அவர்க ளுடைய துதிக்கிரங்கி அவர்களைச் சுமந்த வண்ண மாகவே அவர்களுக்கு உத்தம தத்துவங்களைப் போதித்தருளினர்.

* செலு = தாடை, மீன் சிறை.

பின்பு, பிரமருக்கு இராப்போது கழிந்தது. அவரும் விழித்தார். அவரிடத்தில் மச்சமாகிய விஷ்ணு மூர்த்தி வேதங்களை ஒப்புவித்துத் தம்மிடத்தில் என்றும் அன்பு நீங்காது சகல ஞான சாஸ்திரங்களையும் தமது திருவாக்கினின்றும் கேட்டுய்ந்த பரம பாகவதனை சத்தியவிரத பாண்டியனை வைவஸ்வத மனுவாக்கி யருளினர்.

இவ்வாறு மச்சமூர்த்தியாகிய திருமால் திருவிளையாடல் புரிந்து, ஜீவப்பிராணிகளின் ஆதித்தோற்றமும் அதுவேயென உலகத்துக்கு அறிவித்துத் தமது வைகுந்தத்தை அடைந்தருளினர். இது முதல் மற்ற அவதாரங்களின் உருவம் அவயவத்திலும் குணத்திலும் விருத்தியடைவது கவனிக்கத் தக்கது.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்."

---

## கூர்மாவதாரம்.

இது, தேவேந்திரன் மீது துர்வாச ரிஷிக்குண்டாகிய கோபத்தால் கடலில் மூழ்கிமறைந்த அவனுடைய செல்வங்களை மீட்டும் கொடுத்தருளத் திருவுள்ளங்கொண்ட மாயன் மந்தரகிரியை மத்தாக அமைத்துத் திருப்பாற்கடலைக் கடைந்தபோது பூமி குழிந்துபோக மத்தாக நின்ற மந்திரகிரியும் கடலில் மூழ்கிவிட்டமையால், அத்திருமால் ஓர் ஒப்பற்ற கூர்ம மூர்த்தியாகி அம்மலையைத்



தாங்கிக் கடலைக் கடைந்து செல்வங்களை வெளிப் படுத்தித் தேவர்களுக்கு அமுதூட்டின வரலாற் றைக் கூறுவதாகும்.

ஒருநாள் ஒரு கந்தருவ ஸ்திரீ உலகமாதா வாகிய இலக்குமியை வணங்கித் துதித்துப் பாடி னள். அப்பாடல்கள் முழு அன்போடு பாடப் பட்டமையால் திருமகள் மனமகிழ்ந்து எவரும் எளிதில் அடையமுடியாத தமது தெய்வப் பூமா லையை அவளுக்குப் பரிசாக அளித்தாள். அம் மாது பேரானந்தமுற்று அதை மிக்க பக்தியோடு பெற்றுக்கொண்டு தன் இருப்பிடத்திற்குச் சென் ருள். வழியில் துர்வாச மகரிஷியைச் சந்தித்து அவரை வணங்கித் தனக்கு அருமையாகக் கிடைத்த அந்த மாலையை அவருக்குக் கொடுத்து, அதன் பெருமையையும் அதை அவள் அரிதிற் பெற்ற வரலாற்றையும் அவருக்குத் தெரிவித்துச் சென்ருள். துர்வாசர் அந்தச் சிறந்த மாலையைத் தாம் பரிசித்ததிலுலேயே தமது பிறவியும் தவமும் கடைத்தேறியவெனக் களித்து அதைக் கையிலேந் திச் சென்றனர்.

அப்போது இந்திரன் சகல வைபவங்களோடு தனது அமராவதிநகரில் ஊர்வலம் வந்துகொண் டிருந்தான். அவனைக் கண்ணுற்ற முனிவர்க்கு அவன்மீது கருணை பிறந்தது. அதனுல் அத் தூய மாலையை அவனுக்களித்து அவன் அதை அணிந்துவரும் அலங்காரத்தைக் கண்டு களிக்க ஆசைகொண்டு அதை அவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தார். காமதேனு கற்பக

தரு சிந்தாமணி முதலியவற்றின் உதவியால் பெருகி விளங்கும் செல்வத்தால் கர்வமுற்ற இந்திரன், அம்முனிவரின் பெருமையை மறந்து அம் மாலையின் அருமையைச் சிறிதும் அறியாமல் அதைத் தன் வாகனமாகிய ஐராவதத்தின் தலையில் வைத்தனன். அந்த மதங்கொண்ட தெய்வயானை அதைத் தன் துதிக்கையால் இழுத்துக் கீழே போட்டு விட்டது. அப்போது, அதைக் கண்ட முனிவர் பெருங் கோபங்கொண்டு இந்திரனை நோக்கி, "வானுலக வேந்தே, உன் செல்வச் செருக் கால் யாமீந்த மாலையின் பெருமையையும் எம்மை யும் மதியாமல் அலட்சியம் செய்தமையால் உன் செல்வமெல்லாம் கடலில் விழுந்து மறையக்கட வன" என்று சபித்துச் சென்றனர். அந்த க்ஷணமே அவனுடைய செல்வங்கள் எல்லாம் கடலில் வீழ்ந்து மறைந்துபோயின. யாவுமிழந்து இந்திரனும் ஆண்டியாயினன். அதை அறிந்த அசுரர் தமக்குத் தக்க சமயம் கிடைத்ததென நினைந்து அவ்விந்திரனோடு பெரும்போர் விளைத்து அவனைத் தோற்கடித்தனர்.

அத்துன்பத்தைப் பொறுக்காத தேவேந்திர னும் தேவர்களும் பிரமரை அடைந்து அவர் பாதத்தில் வணங்கித் தமக்கு நேரிட்ட ஆபத்தைத் தெரிவித்துத் தம்மைக் காக்கவேண்டுமெனத் துதித் தனர். பிரமரும் அவர்களுக்குத் தேறுதல் கூறி

இந்திரனை நோக்கி, "அமரர் தலைவ, உத்தம பிராமணர்களை அவமதித்தவர் யாவராயினும் துன்பத்துக்குள்ளாவர். அத்துன்பம் குற்றஞ் செய்தோரையன்றி அவரைச் சார்ந்தவர்களையும் சூழ்ந்து வருத்தும். அதனால் தான் உனக்கும் உன்னைச் சார்ந்த தேவர்களுக்கும் இப்படிப்பட்ட துன்பம் உண்டாயிற்று. ஆயினும் இத்துன்பத்தை ஒழித்து இன்பத்தை அளிக்க வல்லவர் பாற்கடலிற் பள்ளி கொள்ளும் பெரியோரேயன்றி வேறு யாரிருக்கின்றார்கள்? அவரைப் போற்றித் துதித்தால் உங்கள் துயரம் நீங்கும்" என்று கூறியருளினார்.

பிறகு இந்திரனும் தேவர்களும் பாற்கடலை அணுகி அப்பெருமானைப் பல்வகையாகத் துதித்தனர்.

அநாத ரக்ஷகராகிய திருமால் அவர்களுடைய துதிக்கிரங்கி அவர்களுக்கு முன் எழுந்தருளினார். அவர்கள் மாயனது தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்கித் தமக்கு நேர்ந்த துன்பங்களை ஒழித்தருள வேண்டுமென முறையிட்டனர்.

அப்போது எல்லாம் உணர்ந்தவராகிய பகவான் அவர்களை நோக்கி, "நீங்கள் இழந்த பொருள்களை மீட்டும் அடைவதென்றால் பாற்கடலைக் கடையவேண்டும். அதற்கு மந்தரகிரியை மத்தாகக் கொள்ளவேண்டும். ஆகையால் நீங்கள் இப்

போதே அசுரரைச் சமாதானஞ் செய்து நட்புக் கொண்டு நீங்களிருதிறத்தாரும் மந்தரகிரியைக் கொண்டு வரவேண்டும்" என்று உரைத்தருளினர்.

இந்திரனும் தேவர்களும் மனமகிழ்ந்து அப்பரமனது கருணையைப் பலவாறு புகழ்ந்து அசுரரோடு நட்புக்கொண்டு தாமும் அசுரரும் மந்தரகிரியை வேரோடு பறித்தெடுத்தனர். அது எண்ணூறு மைல் உயரமும் எண்ணூறு மைல் சுற்றளவுமுள்ள பெரிய மலையாகையால், அதைத் தாங்க வலிமையற்றுத் தேவரும் அசுரரும் கீழே விழ, மலைமேலே விழுந்து அவர்களுடைய மார்பையும் தோளையும் நெரித்து அவர்களையும் மூர்ச்சையடையச் செய்தது.

அப்போது அநாத ரக்ஷகன் அவர்கள் பிழைக்குமாறு அருள்புரிந்து கீழே சாய்ந்துகிடந்த அந்தப் பர்வதத்தை ஒரு விரலாலெடுத்து அம்மலையோடு கருடன் மீது எழுந்தருளி ஆகாயத்தின் வழியே சென்று அதைப் பாற்கடலில் நாட்டியருளினர். பிறகு அம்மலையாகிய மத்துக்கு வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக்கொண்டு சுற்றி அதன் தலைப்புறத்தைத் திருமாலும் தேவரும் பற்றி நின்றனர். அதைக் கண்ட அசுரர் அதன் வால்புறத்தைப் பற்றுவது தமக்கீனமெனப் பிணங்க, விருப்பு வெறுப்பில்லாத கடல் வண்ணர் தேவர்களோடு அதன் வாலைப் பற்றி

யருளினர். அசுரர்கள் மனங்களித்து அதன் தலைப் புறத்தைப் பற்றி நின்றார்கள். அப்போது இரு திறத்தாரும் திருமாலின் உத்தரவின்படி கடலைக் கடைய அப்பாற்கடல் அலறி ஓலமிட்டுக் கலக்க முற்றது. அவர்களுடைய தோள்வலிமை முழுதும் பொருந்தக் கடைந்த வேகத்தால் கயிறாக இழுப் புண்ட வாசுகி வருத்தமுற்றுத் தனது கொடிய விஷத்தைக் கக்கிற்று. அதன் தலைப்புறத்தைப்பிடித் துப் பெருமையுற்ற அசுரரிற் பலர், அவ்விஷத் தின் வெப்பத்தைப் பொறுக்க முடியாமல் உடல் முழுதும் கருகித் தேவர்கள் நகைக்கக் கடலிற் சாய்ந்தனர். அம்மலையானது சுழன்ற வேகத்தால் கடலின் அடிப்புறம் கிடங்காகக் குழிக் கப்பட்டமையால் அசுரர்களின் கைப்பிடிப்புத் தளர்ந்தவுடன் அது கடலுக்குள் மூழ்கத் தலைப் பட்டது.

உடனே, தமது அடியாரது துன்பத்தைப் போக்குவதற்குத் தக்க திருவுருக்கொள்ளும் கருணை நிதியாகிய மாயனார் ஒரு பெரிய ஆமையாகி, அம் மலையின் அடிப்புறத்தைத் தமது முதுகிற்றாங்கி, அது சாயாதவாறு தமது திருக்கரங்களைக் கவித் திருத்தினர். பல்லாயிரம் கைகளையுடைய விராட் புருஷராகிய மாயனார், பல்லாயிரம் கடல்களை ஒரு கணப்போதில் கடைந்தளிக்க வல்லவராயினும் அச்சிறு கடலைக் கடைவதற்காக அவர் செய்தரு

ளிய திருவிளையாடலின் விந்தையை அறிந்துரைப் பவர் யாவர் ?

பிறகு திருமால் தமது திருக்கைகளால் அப் பாம்பின் வாலைப்பற்றி இழுத்து அக்கடலை மிக்க வலிமையுடன் கடைய அதினின்று எவரும் அஞ் சத்தக்க கொடிய காளகூட விஷம் முதலில் வெளிப்பட்டது. அதைக் கண்ட தேவர் முதலா னோர் அஞ்சி நடுங்கிப் பசுபதியாகிய பரமசிவ னிடத்துத் தஞ்சம் புகுந்து,

மூவுரு முறையிற் ருங்கி முத்தொழி னடாத்து முக்கண்
தேவனே யுலக மெல்லாந் திருவுரு வாகி நின்ருய்
காவென வணங்க லோடுங் கலங்கன்மி னீவி ரென்னத்
தாவரு கொடிய நஞ்சந் தானுணக் கருத்துட் கொண்டான்.

உடனே எவ்வகைப் பற்றும் இல்லாதவர் களுக்குப் பற்றிடமாகிய சர்ப்பாபரணர் அவர் களுக்கு அபயமளித்து அவ்விஷத்தை உண்டு அவர்களுடைய அச்சத்தை ஒழித்தருளினர். அவ் விஷம் அவரது திருக்கண்டத்தில் தங்கி ஓர் அழ கிய நீலமணிபோல் விளங்கிற்று. இதனுல் பரம சிவனுக்கு நீலகண்டன் என்று பெயர் வந்தது. அதினின்று சிதறிய சிறு விஷத்தைத் தேள் பாம்பு முதலானவை உண்டு விஷப் பிராணிகள் ஆயின.

மீண்டும் கடலைக் கடைய அதினின்றும் சகல செல்வங்களும் அரம்பையரும் தோன்றினர்.

அவற்றின் பின், யாவற்றையும் ஈன்று வளர்த்த உலகமாதாவாகிய இலக்குமி தோன்ற, இந்திரன் முதலியோர் வணங்கி கைங்கரியஞ்செய்து நின்றனர். அத்தேவி அவர்கள் எல்லோரையும் தன் மக்களெனக்கொண்டு சாந்த குணநிதியாய் விளங்கிய வைகுண்டநாதரை யடைந்து அவரது திருத்தோளில் தனது மணமாலையைச் சூட்டி வணங்கி நின்றனள். தம்மை அடுத்தோர் யாவரேனும் இகழாது ஆட்கொள்ளும் பெருமானுர் அத்தேவியை யங்கீகரித் தருளினர். அன்றுமுதல் அத்தேவி மகாவிஷ்ணுவின் திருவுள்ளத் தாமரையையே தனக்கிருப்பிடமாகக் கொண்டு அதில் தங்கிச் சகல பிராணிகளையும் அருளோடு காப்பாற்றி வருகின்றனள்.

பின்னும் ஒருமுறை கடைந்தபோது வாருணி தேவி உதித்தனள். அவளைத் திருமாலின் அருளால் தேவர்கள் அடைந்து களிப்புற்றனர். கடைசியாகத் தன்வந்தரி என்னும் ஒரு மகாபுருஷர் சந்திரன் போன்ற வெண்மையான அமுதத்தை ஒரு கலசத்தில் ஏந்திக்கொண்டு வெளிவந்தனர். அப்போது தேவர்களும் அசுரர்களும் ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு அந்த அமிர்த கலசத்தைச் சூழ்ந்து அதை அபகரிக்க முயலும்போது, அசுரர்கள் வலிமை மிகுந்தவராதலின் தேவர்களை ஒருபுறத்தில் தள்ளித்

தாமே அதை அபகரித்துக் கொண்டனர். தேவர்கள் அதை மீட்கும் வகையறியாது வருந்தி, அன்பர்களைக் காத்தருளும் விஷ்ணுவை அணுகி உயிரிழந்த உடல்போல் நின்றனர். அவர்கள் நிலைமையைக் கண்ணுற்ற அத்தேவதேவர், அவர்களைத் தேற்றிப் பேரழகு வாய்ந்த ஒரு பெண் வடிவங்கொண்டு தோன்றினர்.

அவ்வாறு தோன்றிய எம்பெருமான் மோகினியெனும் பெயர்பூண்டு, தமது பாதங்கள் நொந்து சிவக்க அசுரர்கள் மிக்க கோபத்துடன் ஒன்ருகக் கூடியிருக்கும் இடத்தை அடைந்தார்.

அந்த வடிவழகினைக் கண்ட அசுரர்கள் மனம் மயங்கி அவளது தாமரைபோன்ற இரண்டு பாதங்களிலும் தமது தவப்பயன் ஈடேறுமாறு வணங்கி, அமுத கலசத்தை அவளிடத்தில் ஒப்புவித்துத் தமக்கு அவள் கையால் அமுதளிக்க வேண்டினர். அப்போது மோகினியாகிய பெருமான், தமது புன்சிரிப்பையும் இனிய மொழியையும் அவ்வசுரர்கள் பல அமுதகலசங்களாகக் கருதித் தம்மைக் கண்கொட்டாது பார்த்தவண்ணமாகவே நிற்கும் நிலைமையைக் கண்டு, அவர்களுக்கு அமுதத்திலிருந்த ஆசை குறைந்து தமது வடிவழகில் அவர்களுடைய மனம் அழுந்தியிருத்தலை யுணர்ந்து, அவர்களைநோக்கி, “இன்று பட்டினிகிடந்து நாளைக்காலையில் தேவரோடு

ஸ்நானம் செய்துவந்தால் உணவளிக்கப்படும்" என்று திருவாய் மலர்ந்தருளினுர்.

அவ்வாறே அசுரர் மறுநாள் தேவரோடு ஸ்நானம் செய்துவந்து, தருப்பையைப் பரப்பித் தேவர்கள் ஒருபுறமும் தாம் ஒரு புறமுமாக வீற்றிருந்தனர். வஞ்ச மனத்தினரையும் வஞ்சிக்கும் மாயனுகிய மோகினி, தேவர்களுக்கே அமுதளிப்பதைக் கண்டு அசுரர் வெகுண்டு தமக்கும் அவ்வமுதத்தைப் பங்கிடும்படி அம்மாதை வேண்டினர். மோகினி அவர்களை வெறுத்தவள்போல் உருத்துப் பார்த்துத் தன் கட்டளையை மீறுதிருந்தால் அமுதம் அளிக்கப்படுமென்றனள். மதியிழந்த அவ்வசுரர், தம்மை மதித்துப்பேசிய அம்மாதின் மொழிகளே தமக்கு மேலான அமுதமென நினைந்து வாய்திறவாம லிருந்தனர்.

தேவர்கள் அமுதுண்ணுங்கால், இராகுவென்னும் அசுரன் உருமாறி அவர்களோடு அமுதம் புசிப்பதைச் சூரியசந்திரர்களால் அறிந்த மாயனுகிய மோகினி, தனது திருக்கரத்திலிருந்த சட்டுவத்தால் அவன் தலையை வெட்டினள். அவன் அமுதமுண்டமையால் இறக்கவில்லை. அவனது தலையும் உடலும் இராகு கேது என்னும் இரண்டு பாம்புருவங்களைப் பெற்றன. அவை பிரமரது அருளால் கிரகங்களோடு சேர்ந்து தமது சேர்க்கையால் அவற்றை ஒன்ப

தாக்கின. உண்மையை வெளிப்படுத்திய சூரிய சந்திரர்பால் இராகு பகைகொண்டு அவர்களைத் தீண்டி மறைப்பதாயிற்று.

இவ்வாறு மகாவிஷ்ணு தம்மை அடைந்தோர்க்கு எதுவும் எளிதாகுமாறு பகைவரிடத்திருந்ததையும் பிடுங்கித் தேவர்கட்கு அளித்துத் தாம் கொண்ட மோகினி உருவத்தோடு மறைந்தருளினார்.

அசுரர்கள் தாம் ஏமாற்றப்பட்ட விதத்தைக் கண்டு தேவர்களிடத்தில் முன்னிலும் பன்மடங்கு பொருமையுற்றுக் கடுஞ் சினங்கொண்டு அவர்களோடு போர் செய்யத் தொடங்கினார்கள். இவ்விரு திறத்தாரும் ஒருவர்க்கொருவர் பின்வாங்காமல் பலநாள் போர் புரிதலும், அப்போரை விலக்கத் திருவுளங்கொண்ட பிரமதேவர் நாரத முனிவரை அக்களத்துக்கு அனுப்பியருளினார். அம்முனிவர் பெருமான் இருதிறத்தார்க்கும் இனியமொழி கூறி அவர்களுடைய போரை நிறுத்தினர். தேவர்கள் அமுதுண்டமையால் தம்மவர் ஒருவரும் யுத்தத்தில் இறக்கவில்லையென்று மகிழ்ந்தனர். அசுரரில் இறந்தவர்களைச் சுக்கிரபகவான் தமது மந்திர சக்தியால் எழுப்பினமையால் அவர்களும் உவகை பூத்துத் தமதிருப்பிடஞ் சென்றனர்.

தேவர்கள் தாம் இழந்த பொருளைத் தமக்கு மீண்டும் அளித்து அமுதமும் ஈந்த தயாநிதியா

கிய திருமாலின் கருணையைப் புகழ்ந்து பாடித் தமது உலகத்தை யடைந்து மகிழ்ந்திருந்தனர்.

"பெரியாரைத் துணைக்கோள்."

## ஆதி வராகாவதாரம்.

இஃது, ஒரு பிரளயத்துக்குப் பின் பிரமரால் சிருஷ்டிக்கப்பட்ட பூமியை இரணியாக்கன் (இர



ணியாக்ஷன்) என்னும் அசுரன் எடுத்துக் கடலிலே ஒளிக்க, அவனைக் கொன்று அப்பூமியை

மீட்டுக் கொண்டு வருவதற்காக வைகுண்ட நாதர் வராகமூர்த்தியாக அவதரித்தருளிய சரித்திரம் ஆகும்.

கதையின் வரலாறு.

ஒரு காலத்தில் சனகாதி முனிவர் வைகுண்ட நாதரது திருக்கோலத்தைத் தரிசிக்கச் சென்றனர். அப்போது வாயில்காப்பாளராகிய ஜய விஜயர் என்னும் இருவர் அவர்களை உள்ளே நுழைய விடாமல் தடுத்தனர். அதனால் அம்முனிவர் நால்வரும் கோபங்கொண்டு, அவர்களை மகா பாதகர்களாகவும் பரமபதநாதருக்கு நேர் விரோதிகளாகவும் பூமியில் மூன்று ஜன்மமெடுக்கும்படி சபித்தனர். முத்தொழிலும் நடாத்தும் தவவலிமையுடைய அம்முனிவர் வாக்குப் பிழையாதெனை அறிந்த அவ்வாயில் காப்போர், தமது குற்றத்தை யுணர்ந்து அதை மன்னித்தருளுமாறு அவர்களை வேண்டிக் கொண்டனர். அது பயன்படவில்லை.

பின்னர், முனிவர் நால்வரும் ஆதிமூல நாதரை வணங்கிச் சென்ற பின் அக்காவலர் தமது தனிமுதல் நாயகரை அடுத்துத் தமக்கு நேர்ந்த விபத்தைத் தெரிவித்தனர். அதற்கு அவர், முனிவர் சாபத்தை மாற்றுதல் தமக்குத் தகாதென்த் திருவாய் மலர்ந்தருளினர். அதன் பின், அவ்விருவரும் தாயை விட்டுப் பிரியும் கன்றைப்போல் மிக்க துயரத்தோடு வைகுண்ட

நாதரை விட்டுப் பிரிந்து, பூமியில் காசிபர் மனைவியாகிய திதியின் வயிற்றில் நூறு தேவவருஷம் கர்ப்பத்திலிருந்து, பின்பு இரணியாக்கன் இரணியகசிபு என்னும் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தனர். அவர்கள் பிறந்த அந்த க்ஷணமே அறம் ஒளித்தது; அதர்மம் தலையெடுத்தது. அஷ்டதிக்குப் பாலகர்களும் நடுங்கினர். அக்குழந்தைகள் விளையாடப் புகுந்தால் அண்டங் குலுங்கும்.

இவ்வாறு அவர்கள் குழந்தைப்பருவங் கடந்து பல படைகளிலும் தேர்ச்சியுற்று வருங்கால், இரணியாக்கன் ஒரு பெருஞ் சேனையைச் சேர்த்துக்கொண்டு திக்கு விஜயம் செய்யத் தொடங்கினன்.

இஃதிப்படியிருக்கப், பிரமருக்கு ஓர் இராப்போது கழிந்து மறுபகற்போது உதித்தது. அந்த இராப்போதின் தொடக்கத்தில் பிரளயம் உண்டானதால் உலகமெங்கும் கடலாக யாவும் அழிவுற்றன. பிரமர் பகற்போதின் துவக்கத்தில் விழித்தெழுந்து பூமியைச் சிருஷ்டித்துப் பின்பு சுவாயம்புவ மனுவையும் அளித்தனர். இரணியாக்கன் எவரும் அறியாமல் அப்பூமியைக் கொண்டு போய் பொங்கிக் கொண்டிருந்த கடலில் ஒளித்துச் சென்றனன்.

இதை அறியாத சுவாயம்புவமனு பிரமரை யணுகித் தாம் தங்குவதற்குரிய இடம் யாதென

வினவினர். பிரமர் வியப்படைந்து தாம் சிருஷ்டித்த பூமி எங்குற்றதென அறிய விரும்பி விஷ்ணு மூர்த்தியைக் குறித்து யோக நிஷ்டையிலிருந்தனர். அப்போது மாயனர் அவர் நாசியிலிருந்து ஓர் அழகிய வராகமாகக் குதித்துக் கடலிற்பாய்ந்து அதைச் சேருக்கியருளினர். அவ்வராகம் பாய்ந்த வேகத்தால் கிளம்பிய ஜலம் பிரமலோகத்திலிருந்த தேவர்கள் மீதும் தெளித்தது. அத்தேவர்கள் அதைப் புனித நீரென ஏற்று மகிழ்ந்தனர்.

அவ்வாறு பாய்ந்த வராகமூர்த்தி கடலுள் மூழ்கி, மும்மதமும் பொழிகின்ற ஓர் ஆண்யானேயானது ஒரு தாமரைப் புஷ்பத்தைத் தன் துதிக்கையிற்கொண்டு ஒரு சிறு மடுவினின்றெழுந்தாற் போலக், கடலில் ஒளித்திருந்த பூமியைத் தமது ஒற்றைக் கொம்பிலேந்தி நின்றனர்.

இச்செய்தியைத் திக்குவிஜயஞ்செய்துகொண்டிருந்த இரணியாக்கன் நாரதராலறிந்து அப்பூமியைக் கைக்கொள்வதற்காக மிக்க கோபாவேசத்துடன் வராகமூர்த்திக்கு முன்னே நின்று யுத்தஞ் செய்யத் தொடங்கினன். அவனுல் தொடுக்கப்பட்ட அஸ்திரங்கள் அவ் வராகமூர்த்தியின் திருமேனியிற் பட்டுத் தெறித்தன. அதனுல் இரணியாக்கன் தனது மாயையால் ஆகாயத்தில் மறைந்து நின்று கடும்போர் தொடுத்தனன். எவ்

வகை மாயைக்கும் உற்பத்தி ஸ்தானமாகிய வராக மூர்த்தி அவன் மாயையினின்று அவனை வெளிப் படுத்தி அவனோடு போர்புரிந்தார்.

அப்போது பிரமர் வராக மூர்த்தியை வணங்கி, "யாவு முணர்ந்த ஐயனே, இந்த அற்ப னோடு இத்துணைக்காலம் போர்புரிவதும் ஒரு திரு விளையாடலோ? இப்பகற்போது மறையின் இராப் போதில் அசுரர்க்கு வலிமை அதிகரிக்குமன்றோ? ஆகையால் அவனை இப்போதே வதைக்க வேண் டும்" என்று வேண்டினர்.

இதனைச் செவியுற்ற வராகமூர்த்தி திடீரென அவன்மேற் பாய்ந்து பிறைச்சந்திரன் போன்ற தமது கொம்பால் அவன் மார்பைப்பிளக்க, இரணி யாக்கன் அஷ்ட திக்குகளும் செவிடுபடும்படி அலறிக்கொண்டு கீழே விழுந்து இறந்தான்.

பின்பு அவ்வராகமூர்த்தி, தாம் எடுத்துவந்த பூமியை ஆதிசேஷன் மகுடத்திலமைத்துத் தேவர் களும் பிரமரும் துதிக்க மறைந்தருளினர்.

"கீழோ ராயினும் தாழவுரை."

---

## நரசிம்மாவதாரம்.

இது, விஷ்ணுமூர்த்தியால் இரணியாக்கன் கொல்லப்பட்டதை அறிந்த இரணியகசிபு அப் பரமனிடத்தில் நீங்காப் பகைமை பூண்டு அவர் பெயரைக் கூறுபவரையும் வருத்தி வந்தமையால்,

அவனை வதைப்பதற்காக அப்பெருமான் அத் தீயோன் வரத்துக் குட்படாத ஒரு விநோத உருவ



மாகிய நரசிம்மமாக அவதாரஞ் செய்தருளின கதையை யுணர்த்துவதாகும்.

இரணியகசிபு, தனது சகோதரனாகிய இரணியாக்கன் வராகமூர்த்தியால் கொல்லப்பட்டதை அறிந்து மனம்புழுங்கி அப்பெரியோனை இகழ்ந்து தன்னைச் சூழ்ந்திருந்த அசுரர்களை நோக்கி, "தோழர்களே, எவ்வுயிருக்கும் தலைவனெனப் பேர் படைத்த அம்மாதவன் யாவர்க்கும் பொதுவாகக் கருணை பொழிவதை விட்டுத் தேவர்களோடு சேர்ந்துகொண்டு தேவர்களிடத்தில் கருணையும் நம்மவரிடத்தில் கொடுமையும் காண்பிப்பது அவனுக் கழகாகுமா? அவனுக்கு ஜகதீசன் என்னும் பெயர் தகுமா? அவனை நான் ஈசனென்று என் வாயால் சொல்லேன். அந்த அவச்சொல்லை என் காதாலும் கேளேன். இந்த க்ஷணமுதல் அவன் எனக்குச் சத்துரு. என் நாட்டில் அவன் பெயரைக்கூட ஒருவரும் நாவால் உச்சரிக்கக் கூடாது. இதனை மறந்து அவன் பெயரைச் சொல்லியவர்கள் யாவரா யிருப்பினும் அவர்கள் அந்த க்ஷணமே என் கை வேலாயுதத்துக் கிரையாவார்கள். தவிர, நீங்களும் இப்போதே அந்த மாயவனைக்குறித்துச் செய்யும் யாகங்களை அழித்து அவற்றை முறையுடன் செய்துவரும் அந்தணர்களையும் வதைப்பீராயின், உலகத்தில் யாகம் என்னும் பெயரே தோன்றாதவாறு அழியும்; தேவர்களும் உணவின்றி வாடுவார்கள். அந்தக் கரியவனும் வலி இழப்பான்" என்றனன்.

இதைக் கேட்ட சம்பரன் முதலியோர் மிக்க குதூகலத்துடன் யாகம் முதலியவற்றை அழித்து, விண்ணுலகிற் புகுந்து தேவரை நையப்புடைத்து வருத்தி, உலகிலுள்ள சகலரும் அழியும்படி வீடுகளையும் கொளுத்தினுர்கள். மற்றுஞ் சிலர், நாடு நகரங்களையும் மரங்களையும் அழித்து மாட மாளிகைகளையும் கூடகோபுரங்களையும் இடித்துக் கடலைக் கலக்கி அட்டகாசஞ் செய்தனர்.

இவ்வாறு உலகமுழுதும் தன்னை நிந்திக்கத் தக்க ஏற்பாடு செய்தபின், இரணியகசிபு தன் தாய்க்கும், தன் சகோதரன் மனைவிக்கும், தன் சகோதரனோடு கூடித் தேவர்களை வெருட்டினோர்க்கும் ஆறுதல் சொல்லித் தன் சகோதரன் இறந்ததனுல் அவர்களுக்கு உண்டான பெருந்துயரைத் தீர்த்துத் தனக்கு எவராலும் மரணமுண்டாகாதவாறு தவம் செய்யக் கருதி, அவர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு மந்தரகிரியை அடைந்தான்.

இதை அறிந்த தேவர்கள், தமக்குத் தக்க சமயம் வாய்த்ததெனக் களித்துத் தம்மை அவ்வசுரர்கள் வருத்தியதற்குப் பதிலாக இரணியகசிபின் நகரத்துட் புகுந்து அனேக அசுரர்களை வதைத்து, அவன் மனைவியின் கருப்பத்தையும் அழிக்க அவளைச் சிறையிட்டனர். அப்போது

நாரத முனிவர் அங்கு எழுந்தருளி அவள் கருப் பத்திலுள்ள சிறந்த புதல்வனால் உலகமுழுதும் நன்மை படையுமென்பதைத் தேவர்களுக்கு அறி வித்து அவளை விடுவிக்கச் செய்தனர். தேவர் ளும் அவளைச் சிறைவிடுத்தனர். அப்போது அம்மாது தனக்கு நேரிட்ட ஆபத்தை நினைந்து மனம் நொந்து புலம்ப, நாரதமுனிவர் அவ ளுக்கு ஞானோபதேசஞ் செய்து அவள் துய ரத்தை மாற்றிச் சென்றனர்.

இஃது இவ்வாறாக, அங்கே தவத்துக்குச் சென்ற இரணியகசிபு அம்மலையின் ஒரு புறத்தில் தவச்சாலை ஏற்படுத்திக்கொண்டு, ஐம்பொறிகளை யும் அடக்கி அளவற்ற காலம் கடுந்தவம் புரிந் தான். அதனால் அவன் தலையின் உச்சி பிளந்து அதிலிருந்து உண்டாகிய யோகாக்கினியின் கொழுந்து தேவலோகத்தைக் கொளுத்த, அதைப் பொறுத்தற்காற்றாத தேவர்கள் பிரமனை அடைந்து "இரணியகசிபினுடைய விருப்பத்தை உடனே பூர்த்தி செய்யாவிடின் தேவலோகமுழுதும் ஒரு நொடிக்குள் எரிந்து அழிந்து போம்" எனத் தெரிவித்தார்கள்.

பிரமதேவர் அம்மலைக்கு எழுந்தருளித் தன்னை மறந்து தவத்தில் மூழ்கிக் கண் திறவாமலிருந்த இரணியன்மீது கரக நீரைத்தெளித்தனர். இரணி

யன் தன் மனமானது தவ நிலையை விட்டு மாற, கண்ணைத் திறந்து பார்த்துத் தனக்கு முன் எழுந் தருளிய பிரம தேவரைக் கைகூப்பி வணங்கினான். அவர் அவன் தவத்தைப் புகழ்ந்து அவன் விருப் பத்தின்படி வரமளித்துத் தமதுலகுக்குச் சென்ற னர்.

இவ்வித உத்தமமான வரத்தின் மேன்மை யால் இரணியன் எவரையும் மதியாது அந்தண ரைக் கூவித் தனக்குப் பல்வகைச் செல்வங்களு முண்டாகுமாறு பல யாகங்களைச் செய்ய உத்தர விட்டனன். ஆனால் அவ்வேள்விகளில் அவன் நாமமே திருநாமமாக விளங்கவேண்டுமென்றும், வேதம் ஓதத் தொடங்குந்தோறும் 'ஹரிஓம்' என் பதைவிட்டு அவன் பெயரைச் சொல்ல வேண்டு மென்றும் கட்டளை யிட்டனன்.

அவன் கட்டளையை மறுப்பவர் யாவர்? அவன் கொடுமைக்குப் பயந்த வருணன் பஞ்ச மின்றி யாவற்றையும் விளைவித்துக் காலம் அறி ந்து அளித்தனன்; தேவர்கள் எல்லாவிடங்களி லும் நெருங்கிக் கைகட்டி அவனைப் புகழ்ந்தனர்; சங்கநிதி பதுமநிதி இரண்டும் அவன் விரும்பிய வற்றைத் தடையின்றி எதிரில் தாங்கி நின்றன; அவன் பெயரைக் கேட்டவளவில் உலகங்களெல் லாம் கீழ்ப்படிந்தன. எனவே, அவன் வார்த்தை

யைக் கடப்பவர் யாவர்? எவ்விடத்தும் இரணியன் நாமமே முழங்கிற்று. எப்போதும் உயர்ந்தோர்களுடைய திருநாமமும் கொடியோர்களுடைய வெறு நாமமும் உலகப் பிரசித்தியடைவது சகஜமாகையால், எக்காலத்தும் தனக்கு ஒப்பில்லாத கொடுந் தொழிலாளனாகிய இரணியனுடைய நாமம் எங்கும் பரவியது ஒரு வியப்பன்று.

இவ்வாறு இரணியன் சக்கரவர்த்தியாக ஆணை செலுத்தித் தான் தவத்துக்குச் சென்றிருந்தபோது தன் நாட்டைக் கொள்ளையிட்டுத் தன் மனைவியையும் சிறைப்படுத்திய தேவர்களை வாட்டிக் குற்றேவல் புரியுமாறு தண்டித்தான். அவர்கள் அவனுடைய கொடுமையைப் பொறுக்க முடியாமல் சேஷசயனராகிய ஸ்ரீமந்நாராயணரை அவரிருக்குந் திக்குநோக்கித் துதித்தனர்.

எல்லாவற்றையும் அறியவல்ல பரிபூரணரான திருமால் அசரீரியாக, "தேவர்களே, நீங்கள் வருந்தவேண்டாம். இன்னும் சிலநாளில் இக் கொலைபாதகனாகிய நாஸ்திக இரணியனுக்கு ஆஸ்திக சிரேஷ்டனான ஒரு குமாரன் பிறக்கப் போகிறான். அக்குழந்தையைக் காக்கும்பொருட்டு இந்தத் துராத்மாவை வதைப்போம். அப்போது உலகமெல்லாம் சௌக்கியமடையும்" என்றனர். அதைக்கேட்ட தேவர்கள் ஒருவாறு மனந்தேறி

அப்புண்ணிய புருஷர் பிறக்கும் காலத்தை எதிர் பார்த்திருந்தார்கள்.

இரணியன் உவமையற்றவனுகச் சகல போகங்களும் அனுபவித்து எவ்வுயிர்க்கும் தானே தலைவனெனும் அகந்தை மேலிட்டு வாழ்ந்து வரும் நாளில், அவனுக்கு நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களில் பிரகலாதர் என்பவர் சர்வேஸ்வரரான மகாவிஷ்ணுவின் புகழையே பாடுவார். அவருடைய நீலமேக சாமள வர்ணமான திருமேனியின் காந்தியே தமது கண்ணுக்குச் சிறந்த காட்சியென்று நாடுவார். அவரது திருத்துழாயைச் சூடுவார். அவரிடத்து அன்பு மிகுந்து கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகக் கூத்தாடுவார். அவர் தமது கண்ணுக்குத் தோன்றும் யாவற்றையும், கரிய திருமாலாகவே கண்டு களிப்பார். எக்காரியத்தையும் செய்யுந்தோறும் அப்பெருமானது திருநாமமன்றி வேறென்றையும் தமது நாவால் உரைக்கத் துணியார். உலகில் சுவை மிகுந்தவை யாவற்றிலும் தெவிட்டாத சுவை யுடையது அஷ்டாக்ஷரம் ஒன்றே என்றுணர்ந்து, அதைச் சுவைத்துச் சுவைத்து ஜபிக்குந்தோறும் புளகமடைவார்.

இத்தகைய தத்துவஞானியை இரணியன் சுக்கிராசாரியின் மைந்தரிடத்தில் கல்வி கற்க விடுத்

தனன். சில நாட்களுக்குப் பிறகு, இரணியன் தன் மைந்தரது கல்வியின் விருத்தியைத் தெரிந்து மகிழும் பொருட்டுப் பிரகலாதாழ்வாரைக் கூவி அவரை எடுத்துத் தன் மடிமீதிருத்தி, அவர் கற்றறிந்தவைகளைச் சுருக்கமாகச் சொல்லும்படி கேட்டனன்.

இதற்குப் பிரகலாதாழ்வார், இலட்சுமி நாயகராயும் அநந்தசயனராயும்விளங்கா நின்ற துளபமாலையணிந்த செந்தாமரைக் கண்ணரே யாவராலும் கற்றுணரப்பட வேண்டியவ ரென்பதைத் தாமும் நன்கறிந்ததாகக் கூறினர்.

அதைக் கேட்டவுடன் இரணியகசிபு கையோடு கையறைந்து "என் சகோதரனைக் கொன்ற பாபியின் பெயரைக் கற்பிப்பதற்காகவா என் மைந்தனைச் சுக்கிராசாரியின் மைந்தர்களிடத்தில் ஒப்புவித்தேன்; அவர்கள் செய்கை மிகவும் நன்ருக இருக்கிறது" என்று உலகம் நடுங்க நகைத்து அவர்களை அழைத்து வினவினன். அப்போது அவர்கள் "நாங்கள் அவ்வாறு கற்பிக்கவில்லை; தங்கள் புதல்வனே அப்படிப் பிதற்றுகின்றனன்" என்று கூறினர்.

பின்பு இரணியன், பிரகலாதாழ்வருக்குத் தனது நூதன மார்க்கத்தைப் போதித்துத் தரும சாஸ்திரத்தை ஓதுவிக்கும்படி அக் குரு மைந்தர்க

ளுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறு அவர்கள் போதிக்கப் பிரகலாதாழ்வார் தர்ம சாஸ்திரத்தி லுள்ள அறம் பொருள் இன்பம் என்னும் முதல் மூன்று பகுதிகளையும் ஒழித்து வீடு பெறுவதற் குரியவற்றை மாத்திரம் கற்றுணர்ந்தார்.

மற்றொருநாள் இரணியன், மிகவும் உற்சா கத்தோடு பிரகலாதாழ்வாரை அழைத்து அன்பு பாராட்டி "என் அருமைக் குழந்தாய், இப்போது நீ நன்றாகக் கற்றுணர்ந்தவைகளில் ஒன்றை நான் கேட்டு ஆனந்திக்குமாறு உன் குதலை மொழிகளால் கூறவேண்டும்" என்று கூறினன்.

அதற்கு அவன் புதல்வர், "விஷ்ணு மூர்த்தி யின் கதைகளைக் கேட்பதும், அவரது ஆயிரந் திருநாமங்களை நாவாரத் துதிப்பதும், அவரு டைய பொற் பாதங்களைத் தலையிற் சூடுவதும், அவர் ஆலயங்களை வலம் வந்து அவரது திருப் பாதங்களில் பரிமளமிகுந்த மலர்களால் முறைப் படி அருச்சிப்பதும், ஒப்புயர்வில்லாத அந்த உத் தமரைக் குறித்து மனங்கனியும்படி பக்தி செய்த லும் ஆகிய இவற்றையே உடலெடுத்ததனால் உண் டாய பயனெனத் தெரிந்துகொண்டோம்; கற்ற தனாலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅ ரெனின்", என்று கூறினார்.

இதனைச் செவியுற்ற இரணியகசிபு, கண்களில் நெருப்புப் பொறிபறக்கப் பல்லைக் கடித்துக் கோபாவேசங் கொண்டு, தன் தொடையின்மீது வீற்றிருந்த புதல்வரைக் கீழே தள்ளித் தன் பக்கத்தில் வேலுங் கையுமாக நின்ற யுத்த வீரர்களை ஏவி அவரை வதைக்கக் கட்டளையிட்டான். அவர்கள் ஆழ்வாரது பெருமையைச் சிறிதும் அறியாமல் உடனே தமது வேலாயுதங்களை வலிகொண்ட அளவு அவர்மீது எறிந்தனர். அந்த ஆயுதங்கள் அவர் தேகத்தில் புஷ்பச் செண்டென மோதிவாய் மழுங்கின. இதனைக் கண்ட இரணியன் மிகுந்த கோபத்தால் அஷ்டநாகங்களையும் விட்டு அவரைத் தீண்டச் செய்தனன். ஆழ்வாருக்கு அந்த நாகங்கள் கடித்தூட்டிய விஷம் முழுவதும் அமுதமாயிற்று. அதனுல் பிரகலாதாழ்வார் இறவாதிருத்தல் கண்டு அஷ்ட திக்கு யானைகளையும் ஏவினன். அவைகள் தமது பாகரும் நடுங்கும்படி சீறிக்கொண்டு தமது கொம்பால் குத்தக் கொம்புகள் முறிபட்டனவேயன்றி ஆழ்வாரது திருமேனி புண்படவில்லை. பின்பு அனேக மலைகள் அவர்மீது எடுத்தெறியப்பட்டன. அவைகளும் பொடியாயின. கடைசியில் இரணியனது உத்தரவின்படி அவன் ஏவலாளர் அவரை ஒரு மலையொடு இறுகப் பிணித்துக் கடலில் தள்ளினுர்

கள். எல்லாவற்றையும் தமது திருவயிற்றில் அடக்கி ஆலிலையிற் பள்ளிகொண்டுள்ள திருமாலுடைய நாமமே துணையாகக் கொண்ட பிரகலாதாழ்வார், கடலுள் மூழ்காது தாம் பிணிக்கப்பட்டுள்ள மலையே தமக்குற்ற தெப்பமாகக் கொண்டு மிதந்து கொண்டிருந்தார்.

இதனை அறிந்த இரணியன், அவருக்கு எவ்விதத்தினும் முடிவை உண்டுபண்ண முடியாமையை உணர்ந்து அவரை அழைத்துவரச் செய்து, மறுபடியும் அவரைக் குருபுத்திரர் வசத்தில் ஒப்புவித்துத் தர்மசாஸ்திரத்தின் முதல் மூன்று பகுதிகளையும் கற்பிக்குமாறு கட்டளை யிட்டனன். ஆழ்வார், தாம் கருவிலிருக்கும்போதே நாரதரால் தமது மாதாவுக்கு உணர்த்தப்பட்ட தத்துவ சாஸ்திரத்தை ஐயந்திரிபுஅற அறிந்தவராகையால் அக்குரு மைந்தர்களிடத்தில் தாம் கற்பதைவிட்டு, அவர்களுக்கு எல்லா உயிர்கட்கும் உற்ற துணையானதும், அழியாததும், பேரின்பத்தைத் தரத்தக்கதுமான தாரகமந்திரத்தை உபதேசித்துப் பசுபதி பாசம் என்ற மூன்றின் இலக்கணங்களையும் தெளிவுறப் போதித்தார்.

இதனை மறையோர்களால் கேள்வியுற்ற இரணியன், தன் குமாரரே தனது நித்திய விரோதியைப் புகழ்வதற்கு நாணமுற்று, அவரை வெறுத்

துக் காட்டுத் தீப்போற் புகைந்து தன் ஏவலாளரை விடுத்து அவரைக் கொணருமாறு கடுகடுத்துரைத்தான். அவர்களும் அவரைக்கொண்டு வந்து நிறுத்த, அக்குல ரக்ஷகரது பெருமை யறியாத கசடனாகிய இரணியன் அவரை நோக்கி, "தீய குணங்கள் நிறைந்தவனே, உனக்குக் காலம் குறுகிப்போயிற்று; இந்த க்ஷணமே நீ இறக்கப் போகிறாய்; என் வார்த்தையையும் என் மதத்தையும் பாழ்படுத்திய நீ என் குமாரன் ஆகமாட்டாய்; விரைவில் உன்மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு சாகத் தயாராக இரு" என்றான்.

பிரகலாதாழ்வார் புன்னகை புரிந்து, "அரசே, தமக்கு முன் நிற்பதற்குக்கூடப் பற்றாத நான், ஐந்துவயதுள்ள சிறுவனாயினும் தம்மால் கொல்லப்படுவதற்கு எளியனல்லன்; மேலும் இறப்பதற்கு அஞ்சினவனுமல்லன்; ஆயினும் என்னைக் கொல்லுவதாகப் பிதற்றுகிறவர்களும் மதியற்றவர்களாக இருத்தல் வேண்டும்; ஏனெனில், இலக்ஷ்மிபதியின் திருநாமங்களை உச்சரிப்பவர்களை இயமனும் கண்ணெடுத்துப் பார்க்க அஞ்சுவானாயின் மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? இஃது என்னுடைய வார்த்தையெனக் கருதி அவமதிக்கவேண்டாம்; இதற்குச் சாக்ஷி வேதம்; இதைப் பற்றிச் சந்தேகமே

கொள்ள வேண்டாம்" என்று உறுதியாகக் கூறினர்.

அப்போது இரணியன், "ஆ! ஆ! உலகத்தில் மாயன் என்னும் பெயர் இன்னும் வழங்கி வருகிறதா? பதினுன்கு உலகங்களும் என்வசமாகி என்னுணைக்குட் பட்டிருந்தலோடு என்நாமமே இம்மைக்கும் மறுமைக்கும் உற்ற துணையெனத் தேவர்களும் அந்தணர்களும் அல்லும் பகலும் போற்றுவதால் எல்லாவற்றிற்கும் தலைவன் யானே அன்றி வேருருவனும் இல்லை; இருக்கட்டும், நீ சதா பிதற்றிக்கொண்டிருக்கிற ஹரி எவ்விடத்திலிருக்கிருன்? தெரிவிப்பாயாக" என்று தன் புருவங்களை நெரித்துக்கொண்டு வினவினன்.

பிரகலாதாழ்வார், "மன்ன, யான் துதிக்கின்ற சர்வேஸ்வரன் கண்ணுக்குத் தெரியாத அணுவிலுமிருக்கின்ருன்; மிகப் பெரிய மகா மேருகிரியிலு மிருக்கின்ருன்; சகல சராசரங்களிலும் இருக்கின்ருன்; இதோ நிற்கின்ற தூணிலும் இருக்கின்ருன்; நீ சொன்ன சொல்லிலு மிருக்கின்ருன்; ஆதலால் அந்தப் பராபர வஸ்து இல்லாத இடமே இல்லை; உனக்குச் சந்தேகமிருந்தால் விரைவில் சோதித்துத் தெரிந்து கொள்" என்ருர்.

" அடா, அறிவழிந்தவனே! இதுவரையில் உன்னைக் குழந்தையெனவே நினைத்தேன்; இப்போதுதான் நீ இந்த அசுரகுலத்துக்குத் தூமகேதுவெனத் தோன்றிஞய் என அறிந்தேன்; நீ சொல்லியவாறு இதோ இருக்கின்ற தூணில் அந்த ஹரியை நீ தோன்றச் செய்யாவிடின் இந்த வாளாயுதத்துக்கு இரையாவாய்" என இரணியன் இயமனும் நடுங்கும்படி உறையிலிருந்த வாளை உருவினன். இதனைப் பார்த்த பிரகலாதர், 'அப்பெருமான் எவ்விடத்திலும் தோன்றுவார்; அவ்வாறு தோன்ருவிட்டால் என்னுயிரை யானே போக்கிக்கொள்வேன்' என்றனர்.

அப்போது இரணியன், அண்டம் வெடிபட நகைத்துத் தன் தோள்களைத் தட்டிக்கொண்டு "இத் தூணிலே நீ சொல்லிய ஹரி இருக்கின்ருஞ?" என்று வெகுண்டு கடைக்கண்கள் நெருப்பைக்கக்க உதட்டைக் கடித்துக் கையை மடக்கிக் கொண்டு ஓங்கித் தன் வலிகொண்ட அளவு அத்தூணில் மோதிஞன். அவன் மோதின அளவில் அண்டம் வெடிபட்டதோ என யாவரும் திகைக்கும்படி அத்தூண் படீரென வெடித்தது. உடனே அதினின்று, யாவரும் பார்த்தறியாத சிங்க முகத்தோடும் மானிட உடலோடும் பிரமரது அண்டமும் வெடிபடும் நகையோடும் சிவந்த கண்களோடும் நரசிம்ம மூர்த்தி உதித்தருளினர்.

அம்மூர்த்தியின் வளைந்த நகங்களின் கூர்மையையும், நகைப்பின் ஒலியையும், கண்கள் சிவந்து அக்கினியைக் கக்குவனபோல் நோக்கின நோக்கையும் கண்ட அசுரர் யாவரும் திகிலடைந்து கீழே விழுந்திறந்தனர்.

இரணியன் அஞ்சாத நெஞ்சு படைத்தவனாய், ஒரு கையில் வாளும் மற்ருெருகையில் கேடயமும் தாங்கி ஒரு மதங்கொண்ட ஆண் யானையானது ஓர் ஒப்பற்ற சிங்கத்தை எதிர்த்துச் செல்வதுபோல், யுத்தத்திற்குத் தயாராய் அந்த நரஹரிக்கு எதிரே வந்து நின்ருன்.

அப்போது அந்த மூர்த்தி தமது கைகளால் அவனை மெல்லப் பற்றலும், இரணியன் வலி குறைந்து மதமடங்கி அகந்தை ஒழிந்து கருடனிடத்தில் அகப்பட்ட பாம்புபோல் பெருமூச் செறிந்து ஒடுங்கினன். நரசிங்க பகவான் இரணியன் பெற்ற வரத்துக்குக் குறையுண்டாகா வண்ணம், பிரமரால் சிருஷ்டிக்கப்படாமல் தமதிச் சாமாத்திரம் உண்டான திருவுருவத்தோடு, ஆயுதங்களின்றித் தமது கூரிய நகங்களே ஆயுதமாகக் கொண்டு ஆகாயத்திலும் பூமியிலும் அவனைக் கிடத்தாமல் தமது தொடையில் சார்த்தி, வீட்டுக்குள்ளும் புறமுமின்றி நிலைப்படியில் வீற்றிருந்து, இரவும் பகலும் அல்லாத சாயுங்காலத்

தில் அக்கொடியவன் மார்பைப் பிளந்து, பிரகலா தாழ்வாரைப் போல இன்னும் பரம பாகவத சிகாமணிகள் யாராவது இருக்கிறார்களா வெனத் தேடுபவர் போல், தமது நகங்களால் அவன் வயிற்றைத் துழாவிக் குடரைப் பிடுங்கி மாலையிட்டுக் கொண்டு, ஒரு துளி இரத்தமும் சிந்தவிடாமல் மறைத்து வீராவேசத்துடன் ஆரவாரித்தார்.

அதனைக் கண்ணுற்ற யாவரும் கலங்கினர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். முனிவர்கள் ருக் வேதப் பாசுரங்களை ஓதிப் புகழ்ந்தனர். பாகவதர்கள் அவரது ஆயிரந் திருநாமங்களையும் துதித்துப் பாடினர். அப்போது இலக்குமிதேவியாவது பிரமர் முதலிய தேவராவது அச்சத்தால் அவரை அணுகாமல் பிரகலாதாழ்வாரைவேண்ட, அவர் தந்தையை அணுகும் அன்புள்ள மைந்தர் போல், அம்மூர்த்தியை அடுத்து அவரது பொற்பாத கமலங்களில் வீழ்ந்து வணங்கி நின்றனர். கருணாகரரான அப்பெருமான், பொங்குகின்ற பாலில் ஜலத்தைத் தெளித்தாற்போல் தமது கோபமடங்கி, பக்தி மிக்க அவ்வாழ்வாரைத்தழுவி யணைத்து அவருக்கு வேண்டிய வரத்தைக் கேட்கும்படி திருவாய் மலர்ந்தருளினார்.

பிரகலாதாழ்வார் எப்பற்றும் நீங்கிய ஜீவன் முக்தராகையால், அப்பரந்தாமனது பாதநிழல்

ஒன்றையே நித்தியமாக எண்ணி, அதை வேண்டி நின்றனர். நரசிங்க மூர்த்தி அவரது கலங்காத பக்திக்கு வியந்து, "குழந்தாய், உனது மனவுறுதியை நினைக்குந்தோறும் மகிழ்ச்சி பெருகுகிறது; நீ ஒரு மனுவின் காலம் வரையில் இந்நாட்டுக்கு அரசனாக இருந்து பின்பு என் பாதத்தை அடைவாய்" எனப் பணித்தருளினர்.

பின்பு, பிரகலாதாழ்வார் அவர் கட்டளையைச் சிரமேற்கொண்டு, தந்தை எத்துணைக் கொடியனாயினும் உத்தம மைந்தர் அவனை நற்கதி அடைவிக்கும் கடமை யுடையவரென்பதை உணர்ந்தவராகையால், அவரை வணங்கி, "தேவ தேவே, என் தந்தை தேவரீரை நிந்தித்த மகாபாதகராயினும் அவர் குற்றங்களைப் பொறுத்து அவரைக் கடைத்தேறச் செய்தருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தனர். அதற்குக் கருட வாகனப் பெருமாள், 'உன்னைப் பெற்ற தந்தையாகிய அவன் புனிதனாகிப் பெருமை யடைவதில் ஐயமில்லை; இனி, அவனுக்கு நீ செய்ய வேண்டிய கருமங்களைச் செய்க' என்று கூறியருளினர்.

அங்ஙனமே பிரகலாதாழ்வார் தந்தைக்குச் செய்யவேண்டிய தீக்கடன் நீர்க்கடன்களைச் செய்து முடித்துத் தமது தந்தையின் நாட்டை அரசாண்டு, தமக்கேற்பட்ட காலம் வரையில்

சகல போகங்களும் அநுபவித்து, தமது கருணை யென்னும் நீரைப் பாய்ச்சிச் செங்கோலென்னும் வேலியமைத்துக் கடவுளிடத்தன்பு என்னும் பயிரை வளர்ந்தோங்கச் செய்து, பரமபதத்தை அடைந்து பாகவதர்களுக்கெல்லாம் உரையாணி போல் விளங்குகின்றார்.

சீதேவியும் பிரமரும் அந்த நரசிங்க மூர்த்தி யாகிய ஸ்ரீமந்நாராயணரை வணங்கித் துதித்தனர். தேவர்கள் தமது துன்பம் ஒழிந்ததெென மகிழ்ந்து அப் பரமனது கருணையைப் புகழ்ந்து பாடித் துதித்துத் தமது இருப்பிட மடைந்தனர். பகவா னும் அங்கிருந்து மறைந்தருளினர்.

---

## வாமனவதாரம்.

இது, காருண்ய மூர்த்தியாகிய ஸ்ரீஹரி, மகா பலிச் சக்கரவர்த்தியின் கொடுமைக்காற்றாது வருந் திய தேவர்களுக்காகக் குறுகிய வடிவமுடைய பிரமசாரி உருவமெடுத்து, அவ்வசுரனிடத்தில் மூன்றடி மண் யாசித்து இரண்டடியால் அவனுக் குச்சொந்தமான மண்ணும் விண்ணும் அளந்து, மூன்றாமடிக்கு இடம்பெறாமல் அவன் தலையில் அவ்வடியை வைத்துப் பாதாளத்திற்கு அனுப்பித் தேவர்களைக் காத்தருளியதாகும்.

தெய்வத்தைப் புகழ்வதாலுண்டாகும் பெருமைக்கு ஓர் அளவு கருவியாக விளங்கும் பிரகலாதாழ்வாருடைய புத்திரன் விரோசனன் என்பான்.



அவன் புத்திரன் மாவலி. அவன் தனது பாட்டனாராகிய பிரகலாதாழ்வாரது பெருமையை முற்றுமுணர்ந்து அவர் பாதத்தை என்றும் சிந்தித்துத் துதித்து வந்தான்.

அவன் உலகமெல்லாம் ஜயிக்க வேண்டு மென்னும் எண்ணங்கொண்டு சுக்கிரபகவானது அருளால் ஒரு யாகத்தைச் செய்து, அதிலிருந்து அழியாத தேரும் ஒடியாத வில்லும் வீண்போகாத அம்பும் பெற்ருன். அவற்றைப் பெற்றவுடன் அவனுக்குத் தேவலோகத்தை ஜயிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனுல் அவன் ஒரு பெருஞ் சேனையைச் சேர்த்துக்கொண்டு விண்ணுலகிற் புகுந்து தேவேந்திரனேடு போர் தொடுத்தான். தேவராஜனும் தேவர்களும் அப் போரில் தோற்றுப் புறங்காட்டியோடி, அவர்களுடைய குருவாகிய வியாழபகவானை வணங்கித் தமக்கு நேரிட்ட துன்பத்தைத் தெரிவித்தார்கள்.

வியாழபகவான், அவர்கள் ஒருவரும் அறியாதபடி மறைந்திருந்தால் திருமால் அந்த அசுரனை வென்று தேவலோகத்தை அவர்களுக்கு அளிப்பார் என்றும் தெரிவித்தருளினர். தேவேந்திரன் அக்குருமொழியைச் சிரமேற் கொண்டு மற்ற தேவரோடு தானும், மாவலி முதலிய அசுரர் தம்மைத் தெரிந்து கொள்ளாதபடி மாறுவேஷம் பூண்டு மறைந்துறைந்தனன்.

இஃது இவ்வாருக, தேவர்கள் அதிதியின் புத்திரர்களாகையால் அவள் தன் கணவராகிய காசிபரை வணங்கித் தன் புத்திரர் படுந் துன்

பத்தை அவருக்குத் தெரிவித்து மனம் வருந்தி நின்றாள். அவர் அவள் துயரம் நீங்கும்பொருட்டு மகாவிஷ்ணுவின் நோன்பையும் அதைச் செய்யவேண்டிய நியமத்தையும் போதித்தருளினார். அதிதிதேவியும் அந்த நோன்பைக் கண்ணுங் கருத்துமாகச் செய்துவந்தாள். வைகுண்டநாதரும் அந்நோன்பிற்கு உவந்து அவள் முன் தோன்றினார்.

அப்போது அதிதிதேவி, முன் தோன்றிய லோகநாயகரது திருவுருவத்தைக்கண்ணாரக்கண்டு களித்துத் தன் மனக்குறைகளைத் தெரிவித்து அவற்றைப் போக்கியருளுமாறு வேண்டினாள். அதற்குத் திருமால், சொற்பகாலத்துக்குள் அவளுக்குத் தாமே மகவாகத் தோன்றி அவளுடைய மனக்குறையை நீக்குவதாகத் தெரிவித்து மறைந்தருளினார்.

அதைக் கேட்டது முதல் அதிதிதேவி சற்று ஆறுதலுற்று அத்தேவதேவன் தன்னிடத்தில் தோன்றும் காலத்தையே சிந்தித்திருந்தனள். மகாவிஷ்ணு தமது திருவாக்கின்படி அவளது ஆலிலை போன்ற வயிற்றில் வந்து அவள் மனமும் வயிறும் பூரிக்கும்படி கருப்பகாலம் முழுதும் அதில் தங்கியிருந்து, புரட்டாசி மாதச் சுக்கில பக்ஷத்தில் துவாதசி திதியும் திருவோண நக்ஷத்

திரமுங் கூடிய சுபதினத்தில் பகல் பதினைந்து நாழிகைக்குப் பூமியில் திருவவதாரஞ் செய்தார். அதிதியும் தேவர்களும் சஞ்சலம் ஒழிந்தார்கள். பகவான் அந்நாளில் செம்பொன்னுலாகிய தோள் வளையங்களும் மகுடமும் அணிந்து காலில் வீரக் கழல் ஒலிக்கக் காதில் குண்டலங்கள் துலங்கச் சதுர்புஜத்தோடு பீதாம்பரமணிந்தவராய்த் திருவவதாரஞ் செய்தார்.

அப்போது பிரமதேவர் அம்மூர்த்தியின் பேரழகைத் தமது எட்டுக் கண்களாலும் தரிசித்துப் பேரானந்த முற்றனர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். உடனே எம்பெருமான் அத்திருவுருவத்தை மறைத்து ஒரு குறுகிய வாமன உருவத்தை யடைந்தனர். அவருக்குப் பிரகஸ்பதி பகவான் முப்புரி நூலும், தேவர்கள் தருப்பையும், பிரம தேவர் கரக நீரும், அதிதிதேவி கோவணமும், பூதேவி மான் தோலும், ஆகாயமானது குடையும், சந்திரன் பலாசதண்டமும் கொடுத்தனர். வேண்டுவோர்க்கு வேண்டியன வெல்லாம் ஈந்தருளும் இலக்குமிநாதர் அவற்றை ஏற்றுக் கொண்டனர். பின்பு உபநயன விதிப்படி பரமசிவன் பிரமோபதேசஞ் செய்யக் காசிபர் பல முனிவர்களோடு எல்லோருடைய பிறவியையும் ஒழித்தருளும் ஐயனுக்கு இரண்டாம் பிறவியென

முப்புரி நூல் தரிப்பித்தருளினர். அப்போது வாமனர் உலக வழக்கப்படி பிரமசரியம் பூண்டு குபேரனுல் கொடுக்கப்பட்ட பொற்கிண்ணத்தைக் கைக்கொள்ள, அம்பிகையானவள் ஐயமிட்டனள். இதைக் கண்டோர் யாவரும் வைகுண்ட நாதரது திருவிளையாடலைப் புகழ்ந்து பாடினர்.

இவ்வாறு மகாவிஷ்ணு பிரமசரியம் பூண்டு தாம் வெளிப்படுத்திய கலைகளைக் கற்பவர் போல் கற்று வாமனராக விளங்கும்போது, மாவலி அசுவமேத யாகம் புரிந்து, தன்னிடத்தில் யாசிப்பவர் எதைக் கேட்டபோதிலும் கொடுப்பதாக நிச்சயித்திருப்பதை அறிந்தார். அவன் அகந்தையை அடக்குவதற்குச் சமயம் வாய்த்ததெனக் கருதி நருமதை ஆற்றங்கரையில் அவனுல் ஏற்படுத்தப்பட்ட யாகசாலையை அடைந்தார்.

அவரைக் கண்டவுடன் மாவலி அவரது சிற்றடிகளில் வணங்கி துதித்து அவரைப் போன்ற பெரியோர்களை அதுவரையில் கண்டதில்லையெனப் புகழ்ந்து அவருடைய விருப்பம் யாதெனக் கேட்டனன். அதற்கு வாமனமூர்த்தி 'தாம் தவஞ் செய்வதற்கு மூன்றடி இடம் கொடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார். மாவலி, அவருடைய உருவத்தைப் போலவே விருப்பமும்

சிறிதென அலட்சியமாகக் கருதி நகைத்துக் கொடுக்கச் சம்மதித்தான்.

அப்போது பக்கத்திலிருந்த அவன் குருவாகிய சுக்கிராசாரியார் அவனை நோக்கி, "மாவலி, உனக்கு முன் நிற்பவன் பிராமணச் சிறுவனென நினைந்து அவன் கேட்டதைக்கொடுப்பதாக வாக்களித்து விட்டாய். அவன் உனக்கு இப்போது சொந்தமாயுள்ள மண் விண் இரண்டுடன் மற்றுமுள்ள உலகங்கள் யாவையும் உண்ட பெருவாயன். உன்னிடத்தில் தானம் வாங்கும் வரையில் குள்ளனாயிருப்பான். தானத்தைப் பெற்றவுடன் அண்ட முகடு உடையும்படி ஓங்கி நெடியோனாவான். அப்பொழுது அவன் உன்னுடைய மண்ணையும் விண்ணையும் இரண்டடியாக அளந்து மூன்றும் அடிக்கு இடங்கேட்டால் யாது செய்வாய். உனக்கு வேறு இடம் எங்குளது? எதையும் ஆய்ந்தோய்ந்து செய்ய வேண்டும். இப்போதும் காலம் கடந்து போகவில்லை. நீ சொல்லியதை மறுத்துரைத்தாலும் அது பொய்யாகாது. நன்மையின் பொருட்டுப் பொய் சொல்லலாமென்பது சாஸ்திரக் கொள்கை" என்றார்.

மாவலி அவர் மொழியை இகழ்ந்து "இப்போது என்னிடத்தில் யாசிப்பவர் அந்த ஏகநாயகரான மகாவிஷ்ணுவாயின் என்

கொடையின்பலன்இப்போதே கைகூடியதாயிற்று. கொடையாளிகள் யாவரிலும் நானே சிறந்தவனு வேன். ஆகையால் நான் கொடுப்பதாக வாக்க ளித்தது எதுவாயினும் அதை எக்காரணத்தினு லும் கொடாமல் இருக்க மாட்டேன்" என்றான்.

அதைக்கேட்ட வாமனமூர்த்தி அவன் கொடையைத் தாரை வார்த்துக் கொடுக்கும்படி அவனைக் கேட்டார். அவனும் அப்படியே ஒரு கெண்டியின் ஜலத்தால் தாரைவார்த்துக் கொடுக் கும்போது சுக்கிரபகவான் மாவலிக்கிரங்கி ஒரு சிறிய உருவத்தோடு அந்தக் கெண்டியின் வாயை ஜலம் விழாதபடி அடைத்துக்கொண்டார். அதை அறிந்த சர்வஜ்ஞரான வாமனர் ஒரு தருப்பை யால் அதன் வாயில் குத்த, சுக்கிராசாரியார் ஒரு கண் இழந்து ஈவது விலக்கேல் என்பதை அறி யாதவர் அடையும் பலன் அதுதான் என்பதை உலகம் அறியும்படியாகச் செய்து அப்பாற் சென் றனர். பிறகு மாவலி திரிகரணசுத்தியாய்க் கரக ஜலத்தைப் பெய்து அவ்வாமன மூர்த்திக்கு மூன் றடி இடம் அளித்ததாகத் தாரைவார்த்துக் கொடுத் தனன்.

அந்த ஜலம் அவர் திருக்கரத்தில் விழுந்த அளவில் வாமனராய் இருந்த மூர்த்தி கண்ணுக் கும் மனதுக்கும் எட்டாத விராட் புருஷராக

நின்று எங்கே பார்த்தாலும் அவர் உருவத்தில் ஒவ்வொரு பகுதி தோன்றச் செய்தனர். அப்போது அவர் ஓரடியால் தேவலோகத்தையும் மற்ருேரடியால் பூவுலகத்தையும் அளந்து, மீதியான ஓரடிக்கு இடம் எங்குளதெனவும், அதைக்கொடாவிடில் அவன் நரகத்தை யடைவான் எனவும் உரைத்து, அவனே வருணபாசத்தால் கட்டினர்.

மாவலி அவரது திருவுருவத்தைக் கண்டு புளகமுற்று, ஒன்றும் அறியாதவனுகக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவிபோல் சொரிய, எல்லாம் விஷ்ணுமயம் என்பதைஅப்போதுணர்ந்து, கொடுத்தவனும் கொடையேற்றவனும் அந்த விஷ்ணுவே என்று கருதும் தத்துவ ஞானியாய்ப் பகவான் கேட்டதற்குப் பதில்சொல்லத் தெரியாதவனுக நின்று, அவரைத் துதிக்கலுற்ருன்.

பகவான் அவனது பரிபக்குவத்தையும் பக்தியையும் கண்டு மகிழ்ந்து, அவனேத் தமது அன்பர்களில் ஒருவனுகக்கொண்டு அவனேப் பிணித்த பாசத்தை நீக்கி அருளினர்.

ஆனல், மாவலி தன் வார்த்தை பொய்யாகாதபடி தான் கொடுக்கவேண்டிய பாக்கியுள்ள ஓரடி இடத்துக்காகப் பகவானே வணங்கி "தங்கள் பெருமையை யாரால் அறிந்துரைக்க முடியும்.

எனக்குச் சொந்தமான இரண்டு உலகமும் தம்முடையவை ஆயினமைபோல், என்னையும் தமது பாதத்தால் ஆட்கொள்ளுவதற்காக மீதியான ஓரடியை என் தலையில் வைத்தருளவேண்டும். அப்போது தான் நான் பரிசுத்தனுவேன்" என்று அவரது சேவடியைப்பற்றி நின்றனன்.

அப்போது பிரகலாதாழ்வார் அவ்விடத்தில் தோன்றித் தமது பௌத்திரனைக் காத்தருள வேண்டுமெனப் பகவானைப் பிரார்த்தித்தார். அப்பெருமானும் மாவலியின் சொல்லுறுதியை வியந்து, பிரகலாதாழ்வாரது பௌத்திரன் என்ற கருணையால் அவன் தலையில் தமது பாதங்களைச் சூட்டி, அவனைப் பாதாள உலகத்தில் ஒரு பகுதியாகிய சுதலலோகத்தை அரசாளச்செய்து, அவன் எப்போதும் தம்மைத் தரிசிக்கும்படி அவன் அரண்மனை வாயிலில் எழுந்தருளி யிருப்பதாகக் கூறியருளினுர்; அன்றியும், அவனை எட்டாம் மனுவந்தரத்தில் இந்திரனுக்கித் தேவலோக ஆட்சியையும் ஈந்தருளுவதாகத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினுர். மாவலியும் தன்னைக்காத்தருளிய அநாத ரக்ஷகருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு அச்சுதலலோக ஆட்சியைக் கைக்கொண்டனன்.

பின்பு திருமால், அதுவரையில் வேற்றுருவமைந்திருந்த தேவர்களை அழைத்து அவர்கள்

மனத்துயரத்தைப் போக்கி, அதிதிதேவி மனமகிழு மாறு தேவலோகத்தை அவர்களுக்கு ஈந்தனர். தேவேந்திரனும் தேவர்களும் பேருவகையுடன் தமது உலகத்தை அடைந்து சுகமுற்றனர்.

" தானமது விரும்பு. "

---

183883

## பரசுராமாவதாரம்.

இது, கார்த்தவீரியனும் அவன் குமாரர்களும் தமது வலிமையால் செருக்குற்று அந்தணர்களை வருத்திப் பாவத்தை வளர்த்ததால் பூபாரம் அதிகரிக்க, மகாவிஷ்ணு அவர்களையும் அவர்களுடைய சந்ததிகளையும் இருபத்தொரு தலைமுறை கொன்று பூபாரத்தை நீக்கி அந்தணரைக் காத்தருளியதாகும்.

சந்திரகுலத்தில் கார்த்தவீரியன் என்னும் ஓர் அரசனிருந்தான். அவன் அத்திரி முனிவருடைய புதல்வரான தத்தாத்திரேயரை வழிபட்டு அவர் கிருபையால் ஆயிரங்கைகளைப் பெற்று பூமி முழுதும் ஒரு குடைக்கீழாண்டான். அவன் ஒரு நாள் நருமதை நதியின் ஜலத்தைத் தனது ஆயிரங் கரங்களாலும் தேக்கித் தன் தேவியோடு ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தான்.

அப்போது அந்த அழகிய நதியின் கரையில், இராவணன் திக்குவிஜயம் செய்துவிட்டுத்

தன் படையோடு வந்து தங்கி, அதில் ஸ்நானம் செய்வதற்காக இறங்கினன். ஜலம் தேங்கி வந்து கொண்டிருந்ததனல் அதற்குக்காரணத்தை அறிய விரும்பி ஆற்றை எதிர்த்துச் சென்ருன். சற்றுத்



தூரத்துக் கப்பால் கார்த்தவீரியன் ஜலத்தை அடைத்துக்கொண்டு ஸ்நானம் செய்வதைக் கண்டு கோபங்கொண்டு அவனை வெருட்டினன். கார்த்த வீரியன் இராவணனை அலக்ஷியம்செய்து அவனு

டைய இருபது கைகளையும் சேர்த்துப்பிடித்து, ஒரு குரங்கைப் பிடித்துப் போவதுபோல் சுலப மாகத் தன் முதுகில் போட்டுக்கொண்டு போய் அவனைச் சிறையிலிட்டனன்.

அவனது சேனைகள் யாவும் வெருண்டு புலஸ் திய முனிவரிடத்தில் ஓடி இதனைத் தெரிவித்தன. அவர், தமது பௌத்திரனுக்காக மனமிரங்கிக் கார்த்தவீரியனிடத்திற் சென்று, அவனுக்கு இத வசனங் கூறி இராவணனை விடுவித்தனர்.

அதுமுதல் கார்த்தவீரியனும் அவன் குமார ரும் உலகத்தில் ஒருவரும் தமக்கு நிகரில்லையென் றெண்ணி அறத்தையும் அந்தணரையும் இகழ்ந்த னர்; செய்யத் தகாதன யாவையும் செய்யத் துணிந் தனர்.

இதையறிந்த மகாவிஷ்ணு பூமியில் அவதா ரஞ்செய்யக் கருதினர். அப்போது, காட்டில் தவஞ் செய்யும் முனிவர்களில் சிரேஷ்டரான ஜமதக்கினி என்னும் முனிவர் ஒருவரிருந்தார். அவருடைய மனைவி இரேணுகை எனப்படுவாள். அவ்விருவ ரும் வைகுண்ட நாதரது பாதமே இகபரமளிக்கும் பெருஞ் செல்வமெனக் கொண்டு அவற்றை மற வாத மனமுடையவர்கள். ஆதலால் அவர்கள் மன மகிழுமாறு மகாவிஷ்ணுவின் ஒரு கலையானது

அவ்விருவருக்கும் கடைசி புத்திரராகத் தோன்றியது. குழந்தையின் தெய்வீக தேஜஸைக் கண்ட பெற்ருேர் பரவசமடைந்து மிகவும் அன்போடு வளர்த்து வந்தனர். அவர் பெயர் பரசுராமர். அவர் தம் தந்தையினிடத்தில் சகல கலைகளுங் கற்றுத் தனுர்வேதத்தில் நிகரற்றவராய் விளங்கினுர்.

இத்தகைய வீரசிகாமணி தமது தந்தையோடு காட்டிலே வசித்துவரும் நாளில், ஒரு நாள் கார்த்தவீரியன் அக்காட்டுக்குவந்து வேட்டையாடி திரும்புங்கால், ஜமதக்கினி முனிவரது ஆசிரமத்தையடைந்து அவரை வணங்கினன். அவர் அவ்வரசனுக்கு ஆசி கூறி அவனுக்கும் அவன் சேனைகளுக்கும் காமதேனுவால் அறுசுவையோடு விருந்தளித்தனர். அரசன், அத்தேனுவின் மகிமையைக் கண்டு வியந்து அதைச் சிறைப்படுத்தித் தன் நகருக்கு ஓட்டிச் சென்றனன். ஜமதக்கினி பகவான் அவனுக்கு எவ்வளவு புத்திமதி சொல்லியும் பயன்படவில்லை. இதை யறிந்த பரசுராமர், அவனுடைய கர்வத்துக்காக மனம் புழுங்கித் தமது வில்லையும் அம்புக் கூட்டையும் எடுத்துக் கொண்டு வாயுவேகமும் பின்னிடும்படி சென்று, அவனேடு யுத்தஞ் செய்யத் தொடங்கினுர்.

அப்போது கார்த்தவீரியன் மைந்தர்கள் பதினெட்டு அக்ரோணி சேனையுடன் அவரைத் தடுத்தார்கள். பரசுராமர் கார்த்தவீரியன் மைந்தரையும் அவர்களுடைய சேனைகளையும் தாம் ஒருவராகவே நின்று ஒரு நொடிப் போதில் வதைத்தனர். அதைக் கண்ட கார்த்தவீரியன், மனம் பதைத்துத் தனது ஐந்நூறு கைகளில் ஐந்நூறு விற்களை ஏந்தி யுத்தகளத்திற்கு வந்து, ஐந்நூறு கைகளாலும் அம்பு தொடுத்து யுகாந்தகால மழை போல் யுத்தகளம் முழுதும் கணைகளால் மூடினுன். பரசுராமர் அக்கணைகள் எல்லாவற்றையும் ஒரு கணப் போதில் கண்டித்தனர்.

பின்னும் கார்த்தவீரியன் கோபத்தோடு முனைந்து விற்களை வளைத்து அம்புகளைத் தொடுக்கப் புகுந்ததைக் கண்ட பரசுராமர், வெகுண்டு தமது திருக்கரத்திலிருந்த பரசு என்னும் சஸ்திரத்தை மிக்க வலிமையோடு வீசினர். அந்த திவ்ய ஆயுதமானது கார்த்தவீரியனைக் கொன்று அப்பெருமானது திருக்கரத்தில் வந்து அமர்ந்தது.

தந்தையாகிய கார்த்தவீரியன் இறந்ததைக் கண்ட அவன் மைந்தர்களில் மீதியானவர்கள் உடல் நடுங்க உயிர் துடிக்கப் முதுகு காட்டியோடினர். பரசுராமர் தம்மை எதிர்ப்பார் ஒருவருமில்

லாமையால் கார்த்தவீரியன் நகருட் புகுந்து அவ னால் சிறை செய்யப்பட்ட காமதேனுவைக் கைக் கொண்டு தமதிருப்பிடஞ் சேர்ந்தார்.

ஜமதக்கினி பகவான் தமது புத்திரராகிய பரசுராமர் செய்த க்ஷத்திரிய கருமத்தைக் கேட்டு மனம் வருந்தி, அப்பாவம் நீங்குமாறு தீர்த்த யாத் திரை செய்யும்படி அவருக்குக் கட்டளை யிட்டனர். அப்படியே பரசுராமர் ஒரு வருஷம் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து திரும்பி வந்த னர்.

ஒருநாள் அவருடைய மாதாவாகிய இரே ணுகாதேவி, தனது கணவன் ஓமம் செய்வதற்கு ஜலம் கொண்டுவரக் கங்கையாற்றுக்குச் சென்ற னள். அங்குச் சித்திரரதன் என்னும் கந்தரு வன் பல கந்தருவ ஸ்திரீகளோடு நீர்விளையாடிக் கொண்டிருந்தான். இரேணுகாதேவி அவனழ கைக் கண்டு, சற்றுப் பிரமித்து நின்றுவிட் டாள். பின்பு, ஓமம் செய்யுங்காலம் தவறிப் போகும் என்பதை உணர்ந்து அத்தேவி ஜலம் எடுத்துக்கொண்டு விரைவில் ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தாள். அவள் காலங்கடந்து வந்த தற்குக் காரணத்தைத் தாமே உணர்ந்தறிந்த முனி வர், தமது மைந்தர்களை அழைத்து அத்தேவி யைக் கொல்லும்படி உத்தரவிட்டார். அவர்கள்

தாய்க்கொலை தகுதியன்று என நினைந்து அதைச் செய்யாது நின்றார்கள். அப்போது அம்முனிவர் தமது இரு கண்களிலும் கோபாக்னி ஜ்வலிக்கப் பரசுராமரை ஏவி அவர் மாதாவையும் அவருடைய சகோதரர்களையும் கொல்லப் பணித்தனர். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பதையும் தாயின் தவறுதலையும் உணர்ந்த பரசுராமர் தமது தாயையும் சகோதரர்களையும் கொன்று தந்தையின் கோபத்தை அடக்கினார். அப்போது முனிவர் பரசுராமரைப் புகழ்ந்து, அவருக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளும்படி உத்தரவு செய்தார். பரசுராமர், தம்மால் கொல்லப்பட்ட தாயையும் சகோதரர்களையும் மீண்டும் உயிர்ப்பித்தலே தாம் விரும்பியது என்றார். முனிவர் அவருடைய அறிவை வியந்து அவர் எண்ணப்படியே இறந்தவர்களை மீட்டுக்கொடுத்தனர். அவர்களும் உறங்கி எழுந்தவர்போல் பிழைத்தெழுந்தனர். அதனால் பரசுராமர் மனமகிழ்ந்து தமது தாய் தந்தை சகோதரர்களுடன் களித்து வாழ்ந்து வந்தனர்.

முன்பு பரசுராமர் கார்த்தவீரியனைக் கொன்றதற்காக, அவன் மைந்தர்கள் பழிக்குப் பழிவாங்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் பரசுராமர் ஆசிரமத்திலில்லாத

சமயம் பார்த்து அங்குச் சென்று, ஜமதக்னி முனிவர் பிராமணர் என்பதையும் மதிக்காமல் அவரைக் கொல்லத் தலைப்பட்டனர். இரேணுகாதேவி தன்னாலானமட்டும் அவர்களை மன்றாடிக் கேட்டும், அக்கொலைப்பாதகர் சற்றும் மனம் இளகாமல் அவரைக்கொன்று, அவர் தலையைத் தமது நகரத்துக்கு எடுத்துச் சென்றனர். உடலோடு வாழ்வதும் உடலைவிட்டு நீங்குவதும் ஒன்றெனக் கருதும் உத்தமராகிய முனிவர், அவ்வுடலை விட்டுச் சப்தரிஷிகளில் ஒருவராகித் தேவர்களும் போற்றும்படியான பெருமையோடு விளங்கினர்.

பின்பு பரசுராமர் ஆசிரமத்துக்குத் திரும்பி வந்து, தமது அருமைத் தந்தை கொல்லப்பட்டுத் தலையற்ற முண்டமாய்க் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டு, மனம்பதறி நடந்த வரலாற்றைப் புரண்டழுகின்ற தமது தாயைக் கேட்டனர். அத்தேவி ஆற்றொணுத் துக்கத்தால் தனது மார்பில் அறைந்துகொண்டு கார்த்தவீரியன் மைந்தரது கொடுமையைத் தெரிவித்தனள்.

உடனே பரசுராமர், ஆலகால விஷம்போல் சீறி வில்லும் கையுமாகச் சென்று, க்ஷத்திரிய தர்மத்தை அறியாத மிலேச்சருக்கொப்பான கார்த்தவீரியன் மைந்தர்களைக்கொன்று, தமது தந்தையின் தலையைக் கொணர்ந்து அவருடலிற்

பொருத்தி, அவ்வுடலுக்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்களைச் செய்து முடித்தார்.

ஆயினும் அவருடைய கோபம் அதோடு அடங்கவில்லை. உலகில் அறங் குறைந்து பாவம் மிகுந்து அந்தணர் பெருமை அழிவுற்றதற்கு மனம் புழுங்கி, தமது தந்தையின் தலையை அக் கொடியவர் வெட்டியபோது தமது தாய் இருபத்தொருமுறை மார்பிற் புடைத்துக் கொண்டமையால், இருபத்தொரு தலைமுறை மனுநீதி கடந்த அரசரைக் கொல்லுவது தமது விரதமெனக் கொண்டனர்.

அவ்விதமாகவே அரசர்களைக் கொன்று அவர்களுடைய தலைகளை ஒரு குன்றுபோற் குவித்தார். அவைகளினின்று பெருகிய உதிரம் அநேக * தடாகங்களாகத் தேங்கி நின்றது. பரசுராமர் தமது கோபம் அடங்குமாறு அத்தடாகங்களில் தமது தந்தைக்குத் தருப்பண முதலியன செய்து, பிராமண வைரத்தின் அளவையும் பிராமணருக்குத் தீங்கு செய்தோரடையும் கதியையும் உலகத்துக்கு அறிவித்தார். பிறகு, பாவம் ஒழிந்து அறம் பல்குமாறு அவர் ஒரு பெரிய யாகத்தைச் செய்து, அதில் தாம் கைக்கொண்ட பூமி முழுவதையும் காசிபர் முதலான உத்தம அந்தணர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து, சித்தரும் தேவரும்

* சமந்த பஞ்சகமெனுந் தடாகங்கள்.

வணங்கும்படி மந்தரகிரியைத் தமக்குற்ற இடமாகக் கொண்டு இன்னும் அங்கு எழுந்தருளி யிருக்கின்றார்.

" வல்லமை பேசேல். "

## இராமாவதாரம்.

இது, மகாவிஷ்ணு தமது பத்து அவதாரங்களுள் பூரண அவதாரமாகிய இராமாவதாரத்தில் தரும சாஸ்திரத்தை அனுஷ்டிக்கு முறையைத் தாமே நடந்துகாட்டி, துஷ்டர்களாகிய இராவணன் முதலானோரை நிர்மூலமாக்கிச் சிஷ்டர்களாகிய இருஷிகள் முதலானோரைக் காத்தருளியதாகும்.

### இராவணன் முதலியோர் உற்பத்தி.

பிரமதேவரது புத்திரராகிய புலஸ்திய முனிவருக்கு விச்சிரவசு என ஒரு புத்திரர் இருந்தார். அவர் சுமாலியின் குமாரியாகிய கைகசியை மணந்து இராவணன், கும்பகர்ணன், சூர்ப்பநகை, விபீஷணன் என நான்கு குழந்தைகளைப் பெற்றார். அவர்களில் முதல் மூவரும் பாவமே உருக்கொண்டவர்கள். அவர்கள் வளர வளரப் பாவமும் வளர்ந்தது; முனிவரும் சாதுக்களும் கவலையுற்றனர். விபீஷணரோ உத்தமரா யிருந்தனர்.

இவ்வாறு அவர்கள் கலை, படை முதலியன கற்று வளருங்கால், அவர்களுடைய மாதாவாகிய



கைகசி இராவணனை அழைத்து அவன் தமையனை குபேரனுடைய நிதியின் பெருக்கத்தையும்,

தெய்வீகத் தன்மையுள்ள புட்பக விமானத்தின் மகிமையையும், ஆதியில் அரக்கரால் ஆளப்பட்ட இலங்காபுரியைக் கைப்பற்றி அவன் ஆண்டுவரும் துணிவையும் தெரிவித்து, அத்துணைப் பெருமைக் கும் காரணம் அவன் செய்த நற்றவப் பயனெனவுங் கூறினுள்.

அதைக்கேட்ட இராவணன், அவனுடைய தம்பிமார்களோடு கொன்றை வனத்துக்குச் சென்று அவர்களோடு பிரமரைக் குறித்துக் கடுந்தவஞ் செய்தான்.

பிரமர் அவர்களுடைய தவத்துக்கு மெச்சி அவர்களுக்கு முன்தோன்றி, இராவணனைக் கூவி அவனுக்கு வேண்டிய வரம் என்னவென்று கேட்க, அவன் மனிதரை அலக்ஷியம் செய்து விலக்கி விட்டு, மற்றெருருவராலும் தனக்கழிவு உண்டாகக் கூடாதென வேண்ட, அவ்விதமே ஈந்தருளினுர்.

விபீஷணரைக் கேட்டபோது அவர், தமக்கு என்ன துன்பம் நேரிடினும் அறத்தைக் கைவிடாத நல்லொழுக்கமும், யுத்தத்தில் பிரமதேவர் முதலானோராலும் வெல்லப் படாமையும் அருள வேண்டுமென்று வேண்டினர். பிரமதேவரும், அவர் கேட்டவை யாவற்றையும் கொடுத்து, அவர்க் கெப்போதும் இறவாத வரமும் அளித்தார்.

பிறகு பிரமர், மகா பாதகனுகிய கும்பகர்ண னுக்கு வரமளிக்கப் புகும்போது, தேவர்களுடைய வேண்டுகோளுக் கிரங்கி அவனுடைய நாவில் நாமகளைத் தங்கவிடுத்து, அவன் பேசும் வார்த்தை களை மாற்றச் செய்தனர். அதனுல் கும்பகர்ணன் தான் நினைந்தவெல்லா மாறத் தூக்கம் வேண்டும் என்றனன். அவரும் அவ்வரமீந்து மறைந் தருளினுர்.

இராவணனும் அவன் சகோதரர்களும் பெற்ற உத்தமமான வரங்களைக் கேள்வியுற்ற சுமாலி முத லிய இராக்ஷச சிரேஷ்டர்கள், அவனை யடைந்து குபேரன்மீது யுத்தத்துக்குப் புறப்படும்படி அவ னைத் தூண்டினுர்கள். அவனும் அதற்கிசைந்து பிரகஸ்தன் என்பவனைத் தூதாக அனுப்பிக் குபேர னுக்குத் தன் வருகையைத் தெரிவித்து வரச் செய்தான். அதைக் கேட்டவுடன் குபேரன், தன் னுடைய தந்தையின் போதனையின்படி இலங் கையை விட்டு இமயமலைக்குச் சென்று, கயிலையங் கிரிக்கு அடுத்த அளகாபுரியைத் தனக் கிருப்பிட மாகக்கொண்டு தன்சுற்றத்தோடு வசித்து வந்தான்.

இச்செய்தியை அறிந்த இராவணன், களிப் புற்றுப் பாதாளத்திலிருந்து தன் சுற்றத்தோடும் மற்றுமுள்ள அரக்கர் யாவரோடும் இலங்கையை அடைந்து, அதையே தனக்கிருப்பிடமாகக் கொண்

டனன். பின்பு இராவணனும் அவன் தம்பிமார் களும் முறையே மண்டோதரி, வச்சிரசுவாலை, சரமை என்னும் மங்கையரை மணந்து கொண் டார்கள். இராவணனுக்கு மேகநாதன், அதிகா யன், அக்ஷயகுமாரன் என்னும் புத்திரரும், கும்ப கர்ணனுக்குக் கும்பன் நிகும்பன் என்று இரண்டு புத்திரர்களும் பிறந்து, தந்தையரினும் பன்மடங்கு அதிக வலிமையுற்றுச் சாதுக்களையும் தேவர்களை யும் வருத்தினார்கள்.

பின்பு இராவணன் குபேரனுடைய செல் வப் பெருக்கிலுற்ற பொறாமை தணியாதவனாய், அளகையை அடைந்து குபேரனைப் போரில் தோற்கடித்து, அவனுடைய நகரையும் கொள்ளை யிட்டுப் பிரமதேவரால் அவனுக்குக் கொடுக்கப் பட்ட புஷ்பக விமானத்தையும் கைக்கொண்டு, அதில் ஏறித் தன் நகருக்குத் திரும்பினான். வரும் வழியில் அவ்விமானம் திடீரெனத் தடைப்பட்டு நின்றது. அதற்குக் காரணம் என்னவென இரா வணன் ஆராயும்போது, நந்திதேவர் அவனுக்கு முன்தோன்றிக் கயிலைமலையின் பெருமையை எடுத்துரைத்து, அவ்விமானம் கயிலைமலையைக் கடந்து செல்லும் வலிமையற்றதெனத் தெரி வித்து, அவனை அப்பாற் போகும்படி கட்டளையிட் டனர். இராவணன் அவர் வார்த்தையை மதிக்கா

மல் அவரைக் குரங்கென இகழ்ந்தான். நந்தி தேவர் அவன் நகரில் குரங்குகள் புகுந்து அவன் குலத்தை அழிக்கக் கடவனவென்று அவனைச் சபித்தார். இராவணன் வெகுண்டு கயிலையைப் பிடுங்கி எறியக் கருதி அம்மலையை அடியோடு பெயர்த்தான். அப்போது சிவபெருமான் தமது காலின் பெரு விரலால் அம்மலையை அழுத்தினர். இராவணன், தனது இருபது கைகளும் வச்சிரமலை போன்ற தேகமும் முறிபடும்படி அம்மலை அழுந்துவதைக் கண்டு, அதை விட்டுத் தப்பி ஓடச் சக்தியற்றவனாகக் கதறினன். அதனால் தன்னுடைய துன்பம் நீங்காமை கண்டு, அவன் தனது கைகளையே வீணையாகக்கொண்டு கை நரம்புகளையே அவ்வீணைக்கு நரம்புகளாக்கி, பரமசிவனுக்கு மகிழ்ச்சியைத் தரத்தக்க சாமவேதம் பாடினன். பரமசிவன் மகிழ்ந்து அவனுடைய அன்புக்காக அவனை மெச்சி, அத்துன்பத்தினின்று நீக்கி அவனுக்கு மூன்றரைக்கோடி ஆயுளும் சந்திரகாசம் என்னும் வாளும் ஈந்தருளினர்.

இராவணன் அவற்றைப் பெற்றுக்கொண்டு வரும் வழியில், மாயனர் எதிர்ப்பட்டு அவனை நோக்கி நான்கு கோடியின் குறையாகிய அரைக் கோடியையும் பரமசிவனிடத்தில் பெற்று வரும்படி தந்திரமாக உரைத்தார். இராவணன் அதுவும்

ஒரு யுக்திதான் என்று நினைந்து மறுபடியும் பரம சிவனை வேண்டி அரைக்கோடி ஆயுளையும் யாசித்தான். சிவபெருமானும் மாயனுரது மாயத்தை அறிந்து "உனக்கு அரைக்கோடி ஆயுளே கொடுக்கப்பட்டது" என்று தெரிவித்து அவனை அனுப்பி விட்டார். இராவணனும் புஷ்பக விமானத்திலேறி இலங்கைக்குப் போய்ச் சேர்ந்தான்.

பரமசிவனிடத்தில் வரம்பெற்றபின் இராவணன் மிக்க கர்வங்கொண்டு திக்கு விஜயம் செய்யத் தொடங்கினுன். அப்போது அவன் தன்னுடைய தீய ஒழுக்கத்தால் வேதவதி அரம்பை முதலான உத்தம மாதர்களின் சாபத்தை ஏற்றனன். இவ்வாறு திக்கு விஜயம் செய்துகொண்டு வரும்போது, தேவலோகத்துக்குச் சென்று இந்திரனை மேகநாதன் என்னும் தன் ஒப்பற்ற குமாரனுல் சிறைப் படுத்தினன். தேவர்களெல்லோரும் பிரமதேவரிடத்தில் முறையிட்டார்கள். அவரும் யுத்தகளத்தை அடைந்து மேகநாதனைப் புகழ்ந்து, அவன் பகைவருடைய யுத்தகளத்தில் அழியான் எனவும், அவனுடைய சிரேஷ்டமான நிகும்பலையாகம் முற்றுப் பெற்ருல், அவனுடைய பகைவர் முற்றிலும் தோற்பாரெனவும் வரங்கொடுத்து இந்திரனைச் சிறை மீட்டனர். இந்திரன் வெட்கித் தலை குனிந்து விண்ணுலக கடைந்தான்.

பின்பு இராவணன் திக்கு விஜயம் செய்து திக்குப் பாலகரை அடக்கி ஜயசீலனாகத் திரும்பி வரும்போது கார்த்த வீரியனால் கட்டுண்டு வலிமை குறைந்து வருந்தினான். இதை யறிந்து, அவன் வம்சத் தலைவராகிய புலஸ்தியர் கார்த்தவீரியனைச் சமாதானப்படுத்தி அவனை மீட்டனர். இராவணன் தனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த புலஸ்திய முனிவரையும் கார்த்தவீரியனையும் வணங்கி, அவனுடைய ஆயிரங் கைகளையும் மறுமுறை திரும்பிப் பார்க்க அஞ்சினவனாகித் தன் நகருக்குத் திரும்பினான். சற்றுத் தூரம் போவதற்குள் கார்த்தவீரியனால் கட்டுண்டதை இராவணன் மறந்து, கர்வம் மிகுந்து வழியிலுள்ள கிஷ்கிந்தையில் நுழைந்து, பாம்பைப் பரிவுடன் அழைக்கும் தேரையைப் போல், வாலியை யுத்தத்துக்கு அழைத்தான். அப்போது வாலி சிவபூசை செய்யப் புகும் காலமாக இருந்தது. அதனால் அவனுக்கு இராவணனோடு சண்டை செய்ய நேரமில்லை. ஆனால், கயிலையங்கிரியை வேரோடு பிடுங்கிய பலசாலியும் திக்கு விஜயம் செய்த புகழுடையவனுமான இராவணேசுவரனைக் காக்கவைப்பது தகாதென நினைந்து, அவனோடு பேசுவதற்குக்கூட நேரமில்லாமையால் தனது வாலை அனுப்பி, இராவணனை அதன் நுனியில் இறுகக் கட்டித்

தொங்கவிட்டு, வாலி சிவபூசையை முடித்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, வழக்கப்படி நான்கு திக்குகளிலுமுள்ள கடல்களில் ஸ்நானஞ் செய்து, அவ்விடங்களிலும் சிவபூசையை முடித்துக்கொண்டு, வாலில் கட்டப்பட்ட இராவணனோடு மிகவும் உற்சாகமாக வாலை உயரத் தூக்கிக் கொண்டு திரும்பவும் கிஷ்கிந்தையை அடைந்தான். இதற்குள் இராவணனுக்குப் பிரக்ஞை இல்லை. அவனுடைய நிலைமையைக் கண்டு வாலியின் மனைவியாகிய தாரை என்பவள் மனமிரங்கி அவனை விட்டுவிடும்படி வாலியை வேண்டினள். வாலி அவள் வேண்டுகோளுக் கிரங்கி இராவணனைக் கட்டினின்று விடுவித்து, அவன் சுவாசபந்தத்தைத் தெளிவித்துத் தனக்கு அவகாசமில்லாமையால் போர் செய்யக் கூடவில்லை என்றும், அதனால் மனவருத்தங் கொள்ளக் கூடாதென்றும் இராவணனுக்குச் சமாதானம் சொல்லி, அவன் தன்னுடைய நகருக்கேகி தனது மனைவி மக்கள் முகத்தைப் பின்னும் சிலகாலம் பார்த்தானந்திக்கும்படி அவனை அனுப்பினான்.

இவ்வாறு உயிர்பிழைத்த இராவணன் இலங்கையை அடைந்தவுடன் எவ்வுலகுக்கும் தானே ஈசனெனத் தன்னை மதித்தான். தேவர்களையும் திக்குப் பாலகரையும் ஏவலாளிகளாக்கினான். தேவ

ஸ்திரீகளை அபகரித்து அவர்களுடைய சாபத்தை யும் அசட்டை செய்து அவர்களை மனைவியாக்கிக் கொண்டனன். அவன் ஏவலால் அரக்கர்கள் காடு களிற்புகுந்து முனிவரையும் அவர்கள்செய்தவேள் வியையும் அழித்துத் தேவர்களுடைய அவி உண வையும் கெடுத்தார்கள். அதனால் தேவர்கள் இரா வணன் முதலானோரின் கொடுமையைச் சகிக்க முடியாமல் கலக்க முற்றுப் பிரம தேவரை அடைந்து முறையிட்டார்கள். அவர் தேவர்க ளோடு பாற்கடல் நாதரைத் துதிக்க, அப்பெருமா னும் அவர்களை நோக்கி, "தேவர்கள் யாவ ரும் இப்போதே வானரர்களாகவும், வாலி, சுக்ரீ வன், அனுமான், நீலன் என்னும் வானரசிரேஷ் டர்களாகவும், கரடிகளாகவும் அவதரிக்கவேண் டும். நாம் தசரத சக்கரவர்த்திக்குப் புத்திரராக அவதரிப்போம். அப்போது உங்களுடைய துன் பம் ஒழியும்" எனத் திருவாய்மலர்ந்தார். தேவர் கள் அவ்விதமாகவே கிஷ்கிந்தையில் வானரர் களாகவும் கரடிகளாகவும் அவதரித்தார்கள்.

இஃதிப்படியிருக்க, பூமிதேவியின் முகம் போன்ற கோசல நாட்டுக்குத் திலகம்போன்றது அயோத்திமா நகரம். அந்நகரில் சூரியகுலத்துத் தோன்றலான தசரத சக்ரவர்த்தி என்பவர் அரசு செலுத்திவந்தார். அவருக்குக் கோசலை, கைகேயி

சுமித்திரை என்னும் மூன்று மனைவியர் இருந்தார்கள். தசரதர் அறுபதினாயிரம் வருஷம் அரசாண்டும் அவருக்குப் புத்திரப்பேறில்லை. அதனால் அவர் கவலையுற்றுத் தமது குலகுருவாகிய வசிஷ்டரை அடுத்து அவரிடத்துத் தமது மனக்குறையைத் தெரிவித்தார். அம்முனிவர் முக்காலமுமுணர்ந்தவராதலின், அவர் திருமால் தேவர்களுக்கருளிய திருவாக்கை உணர்ந்து, கலைக்கோட்டு மகா முனிவரைக்கொண்டு புத்திரகாமேஷ்டியாகம் செய்யுமாறு அரசனைத் தூண்டினர். அரசன் அந்த யாகத்தைச் செய்யுங்கால் யாககுண்டத்திலிருந்து ஒரு புருஷர் தோன்றி ஒரு பொன்தட்டில் அமுதம்போன்ற திவ்ய உண்டியை அரசனிடத்தில் கொடுத்து மறைந்தனர். அதை அரசர் தமது மூன்று மனைவிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தனர். அந்தத் திருவருட் பிரசாதத்தால் அரசரது பத்தினிமார் மூவரும் கருப்பமுற்றுக் கோசலை இராமனையும், கைகேயி பரதனையும், சுமித்திரை இரட்டைப் பிள்ளைகளாக இலக்ஷ்மண சத்துருக்கனர்களையும் பெற்றனர். அரசர் அக்குழந்தைகளைக் கண்ணுற்றுப் பேரானந்தமுற்றார். அவர்களுக்கு ஜாதகன்மம் நாமகரணம் முதலியன செய்வித்துப் பெற்றோர்கள் அவர்களைத் தமது உயிர்போல் பாதுகாத்து வந்தனர். அவர்கள்

வளர்பிறைச் சந்திரன்போல் வளர்ந்து குழந்தைப் பருவத்துக்குற்ற விளையாட்டுகளால் தமது மாதா பிதாக்களைக் குதூகலிக்கச் செய்தனர். பின்பு அரசர் அவர்களுக்குத் தக்க பருவத்தில் உபநயனஞ் செய்வித்து, வசிஷ்டரிடத்தில் கல்விகற்கச் செய்தனர்.

அவர்கள் நால்வரும்,வில், வாள், யானையேற்றம், குதிரை யேற்றம் முதலியன பயின்றுவருங்கால், இராமர் அழகு அறிவு ஒழுக்கம் குணம் தேர்ச்சி முதலிய யாவற்றிலும் முதன்மை பெற்றிருந்தார். அதனால் இராமரிடத்தில் யாவருக்கும் ஆசை உண்டாயிற்று. அரசரோ இராமரே தமது தவப்பயனெனக் கொண்டாடினர்.

இவ்வாறு அக்குழந்தைகள் நால்வரும் தேர்ச்சியுற்று வருங்கால், இராமரது வன்மையை அறிந்த விசுவாமித்திரர் தமது யாகத்தை நிறைவேற்றும் பொருட்டு அரசரிடத்தில் இராமரை யாசித்து,அவரையும் இலக்குமணரையும் அரிதிற்பெற்று அழைத்துச் சென்று தாடகையை வதஞ் செய்வித்தார். பிறகு அவர்களுக்கு அனேக தேவதாஸ்திர மந்திரங்களை உபதேசித்துத் தமது ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்று, அங்குத் தாம் செய்யப் புகுந்த யாகத்தைக் காக்கச் செய்தனர். அவர் சொற்படி இராகவர் இருவரும் கண்ணிமை

போல் அந்த யாகத்தைக் காத்துவருகையில், இராமர் அதை அழிக்கவந்த சுபாகுவைக் கொன்று மாரீசனைத் துரத்திவிட்டார். முனிவரது யாகமும் இடையூறின்றி நிறைவேறியது. விசுவாமித்திரர் இராம இலக்ஷ்மணர்களை ஆசீர்வதித்து அன்பு பாராட்டினர்.

பின்பு அம்முனிவர் மிதிலாபுரியில் ஜனக மகாராஜன் புத்திரியாகிய ஜானகிக்குச் சுயம்வரம் ஏற்படுத்தி இருப்பதை அறிந்து, அங்குச் செல்வதற்கு இராம இலக்ஷ்மணரோடும் மற்ற இருஷிகணங்களோடும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். போகும் வழியில் கல்லாய்க்கிடந்த அகலிகை, இராமரது பாததூளியால் பெண்ணாகித் தனது கணவராகிய கௌதமரை அடைந்தாள். அவ்வற்புதத்தைக் கண்ட இராகவர்கள், அவள் வரலாற்றை விசுவாமித்திர முனிவர் சொல்லக் கேட்டுக்கொண்டே மிதிலையை அடைந்தார்கள். அங்குச் சுயம்வர மண்டபத்தில் ஒருவராலும் வளைக்க முடியாதிருந்த சிவனது வில்லை இராமர் ஒடித்துச் சீதையை அடைந்தார். அதை அறிந்த தசரதர், மிதிலைக்குச் சென்று இராமருக்குச் சீதையையும் ,மற்ற மூன்று குமாரர்களுக்கும் மூன்று இராஜகுமாரிகளையும் மிக்க விமரிசையாக மணம்

புரிவித்து, தம் குமாரர்களோடும் மற்றுமுள்ள பரிவாரங்களோடும் அயோத்திக்குத் திரும்பினர்.

இராமருக்கு விவாகம் பூர்த்தியானதை அறிந்த பரசுராமர், தம்மிடத்தில் இருந்த விஷ்ணுவின் வில்லை அவரிடத்தில் ஒப்புவிக்க வேண்டிய காலம் கிட்டியதென உணர்ந்து, அவருக்கு முன் தோன்றிக் கோபிப்பவர்போல் வழி மறித்து, தமது விஷ்ணு தனுசை வளைக்குமாறு அவரைக் கட்டாயப்படுத்தினர். அவ்விதமாகவே இராமர் அதை வளைத்து அம்புதொடுக்க, அவர் அவ்வம்புக்குத் தமது தவத்தை இலக்காகக் கொடுத்து மறைந்தருளினர்.

அப்போது தசரதர் முதலான யாவரும் களிப்படைந்து அயோத்தி நகரை அடைந்தார்கள். அவர்கள் வரவைக் கண்ட அயோத்தி நகரத்தார் எல்லோரும் ஆநந்தமுற்றனர். தேவர்களும் தருமதேவதையும் களிப்புற்றனர். இவ்வாறு மகிழ்ச்சியுற்றிருந்த அக்காலத்தில், தசரதர் தமது மூத்த குமாரராகிய இராமருக்கு முடிசூட்ட எத்தனித்தார். இதையறிந்த தேவர்கள் தமது துன்பம் ஒழியும்பொருட்டுக் கூனியின் மனதை மயக்கிக் கைகேயினிடத்தில் போகும்படி செய்தனர். அவள் கைகேயியின் அந்தப்புரத்தை அடைந்து அவள் மனதைக் கலைத்து, இராமரைக் காட்டுக்

கனுப்பி அவளுடைய குமாரனுகிய பாதனுக்கு முடி சூட்டும்படி தசரதரிடத்தில் வரம் பெறு மாறு சொல்லிப் போயினள்.

கைகேயி அரசனை அடுத்துக் கூனி போதித் தவாறு கேட்க, அரசர் தாம் முன்னரே கொடுத் திருந்த வாக்குறுதியைத் தவிர்க்க மனமில்லாதவ ராய்த் தவித்தார். அதை அறிந்த இராமர், தமது தந்தையின் வாக்குறுதியைக் காக்கும்பொருட்டுத் தாம் காட்டுக்குப் போகத் தீர்மானித்து, மரவுரி தரித்துச் சீதையும் இலக்குமணரும் பின் தொடர்ந்து வரக் காட்டுக்குப் புறப்பட்டார். அவர் களுடைய நூதன வேஷத்தையும், அவர்கள் காட் டுக்குப் போகும்போதுண்டான அவர்களது முக மலர்ச்சியையும் கண்டோரும் கேட்டோரும் அடைந்த துன்பத்துக்கு அளவே இல்லை. சரா சரங்களும் மிகவும் வருந்திப் பிரமித்து நின்றன. அரசரோ, அவர்கள் மூவரும் காட்டுக்குப் போயின ரென்ற சொல்லைக் காதில் ஏற்ற அளவில் உயிர் துறந்தார். கைகேயி ஒழிந்த மற்ற தாய்மார்கள் யாவரும் கன்றை யிழந்த பசுவைப் போல் துன்ப முற்றனர். காட்டுக்குச் சென்ற சூரியகுல திலகரா கிய இராமர், கங்கையை அடைந்து குகனோடு நட் புக்கொண்டு, அப்புண்ணிய நதியைக் கடந்து பரத்துவாசரைத் தொழுது அவரளித்த இலை

யமுதை உண்டு, பின்பு அவர் கூறியபடி சித்திர கூட மலையை அடைந்து, இலக்குமணரால் அமைக்கப்பட்ட பர்ணசாலையில் சீதையுடன் தங்கி யிருந்தனர்.

இராமர் வனத்திற்குச் சென்ற பிறகு, தன் அம்மான் நகருக்குச் சென்றிருந்த பரதன் திரும்பி வந்து, தன் தந்தை இறந்ததையும் தாயின் வஞ்சனையையும் தமையன் காட்டுக்குச் சென்றதை யும் கேட்டு, அடியற்ற மரம்போல் பூமியிற் சாய்ந்து புரண்டழுதனன். பின்பு, பெரியோர் தேற்றத் தேறித் தந்தைக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன் களைச் சத்துருக்கனனோடு செய்து முடித்து பட் டணத்து ஜனங்களும் தாய்மார்களும் அந்தணர் முதலிய யாவரும் தன்னைப் பின்பற்றிவரக் கண் களில் நீர் ஒழுகச் சித்திரகூட பர்வதம் வந்து சேர்ந்தனன்.

இராமர், பரதனுடைய சகோதர வாஞ்சையை யும் தருமந் தவறாத தன்மையையும் கண்டு மனம் வருந்தி, அவனைக் கட்டித் தழுவி அவனுக்கு ஆறுதல் கூறித் தந்தையைப்பற்றி விசாரித்த போது, அவர் இறந்ததை அறிந்து துயரக் கட லில் ஆழ்ந்து, அவருக்குச் செய்யவேண்டிய கடன் களைச் செய்து முடித்தார்.

அப்போது பரதன், இராமரைப் பணிந்து அயோத்திக்கு எழுந்தருளி முடிசூடிக்கொள்ள வேண்டுமென்று தன்னாலானமட்டும் கேட்டுக் கொண்டும், அதற்கவர் உடன்படாமல் பரதனைத் தேற்றி நாட்டுக் கேகும்படி பலவாறு போதித்தார். அப்போதும் பரதன், நாட்டையும் சுற்றத்தையும் விரும்பாமல் இராமருக்குப் பணிவிடை செய்தலே தனக்குற்ற தருமமெனத் தீர்மானித்து அவ்விடத்தைவிட்டு அசையாமல் நிற்க, இராமர் பரதனுடைய மனவுறுதியை அறிந்து தமது பாதுகையை ஈந்து, அவன் மனத்துயரம் ஒருவாறு நீங்கும்படி நல்லறிவு புகட்டினர். பரதன் அப்பாதுகையைச் சிரமேற் கொண்டு விடை பெற்றுத் தன் சுற்றத்தோடு திரும்பி அயோத்திக்குப் போக மனமில்லாமல் நந்திக் கிராமத்திலேயே தங்கிப் பாதுகைக்குப் பாட்டாபிஷேகம் செய்து தான் பிரதிநிதியா யிருந்து அரசாண்டு வந்தான்.

பின்பு இராமர், அந்தப் பர்வதத்தை விட்டுப் புறப்பட்டு அத்திரிமுனிவரின் இருப்பிடத்திற்குச் சென்றனர். அங்கிருந்து தண்டக வனத்துக்குப் போகும்வழியில் இராமலக்ஷ்மணர்,சீதையை அபகரித்து ஆகாயத்திற் செல்லக் கருதிய விராதனைக் கொன்று, தேவர்களால் துதிக்கப்பட்டனர். பின்னர், அவர்கள் அவ்வனத்தினின்று புறப்பட்

டுச் சரபங்கருக்கு முத்தியளித்து, அப்பால் அனேக காதங்கடந்து பல முனிவர்கள் வாசஞ் செய்து கொண்டிருந்த ஒரு வனத்தை அடைந்து, அவர் களுக்கு இராக்ஷஸர்களால் துன்பம் உண்டாகாத படி காப்பதாக அபயமளித்து, அவ்விடத்திலேயே பத்து வருஷம் தங்கி யிருந்தனர்.

அப்பால், இராமர் அவ்வனத்தைவிட்டு நீங்கி, உலகத்தைச் சமநிலைபடையச் செய்வதற்குத் தெற்கு நோக்கி வந்து, தமிழைப் பரவச்செய்த அகஸ்திய முனிவரது ஆசிரமத்தை அடைந் தனர். அம்முனிவர் பெருமான் அவரை வர வேற்று, அவருக்கு அனேக திவ்ய அஸ்திரங் களும் வில்லும் கொடுத்துப் பின் விளைவதை உணர்ந்து, அரக்கர் வரும் வழியாகிய பஞ்சவடி தீர்த்தத்தில் இராமர் வசித்தல் தகுதியுடையதென அவருக் குரைத்தருளினர்.

இராமர் அம்முனிவர் உரைத்தருளியவாறு கோதாவரி நதியைநோக்கிச் செல்லுகையில், ஜடா யுவைக் கண்டு அவரைத் தமது தந்தையைப்போல் பாவித்துத் தமக்குத் துணையாகக்கொண்டு, கோதா வரி நதியை அடைந்து அதன் கரையிலுள்ள பஞ்சவடியில் ஒரு பர்ணசாலை ஏற்படுத்திக் கொண்டு, அங்குத் தமது தம்பியுடனும் சீதையோ டும் வசித்து வந்தனர்.

அப்போது இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகை என்பவள், தன் கணவனிறந்த பிறகு தமையன் அனுமதியின்படி வனங்களில் சஞ்சரித்து அவளுக்கிஷ்டமான கணவனைத் தேடிக்கொண்டிருந்தாள். அவளுக்கு மெய்க்காவலாக அவளுடைய சிற்றன்னையின் குமாரராகிய கரதூஷணரும்,இன்னும் அனேக ஆயிரம் இராக்ஷஸர்களும்,அவளைப் பின்பற்றி நின்றனர். அவள் எங்கும் சுற்றி இராமர் இருந்த பர்ணசாலையை அடைந்து அவரைக் கண்டு மோகித்தாள். அவரைக் கலியாணம் செய்துகொள்ளும் விருப்பமிகுதியால் அவரை யடுத்தபோது உள்ளேயிருந்த ஜானகியைக் கண்டு, அத்திருமகள் உயிரோடிருக்கும் வரையில் தன் காரியம் நிறைவேருதெனக் கருதி,அவளைத் தின்னும்எண்ணத்துடன் உள்ளே புகுந்தனள். இதை அறிந்த இளைய பெருமாளாகிய இலக்குமணர் அவள் காது முதலியவற்றை அறுத்துத் துரத்தினர். அவள் கூக்குரலிட்டுக் கதறிக் கரனை அடுத்துத் தனக்கு அவர்கள் செய்த தீங்கைத் தெரிவித்தாள். அதைக்கேட்ட கரனும் மற்ற அரக்கர்களும் பொங்கிய சினத்தோடு இராமரை எதிர்த்துப் போர்புரியத் தொடங்கினர். இராமர் அவர்கள் எல்லோரையும் யுத்தத்திற் கொன்று, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மகிழ்ச்சியுண்டு பண்ணினர்.

பின்பு, சூர்ப்பநகை முன்னிலும் பன்மடங்கு பகை கொண்டு இராவணனிடத்தில் சென்று, நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவித்துச் சீதையின் அழகையும் வர்ணித் துரைத்தாள். அதைக் கேட்டவுடன் துராத்மாவான இராவணன், உலக மாதாவாகிய சீதாபிராட்டியை அடையக் கருதி, இராம இலக்ஷ்மணர்களை அவ்விடத்தினின்று விலக்குவதற்காக மாயையில் வல்லவனுன மாரீசனை அனுப்பினன். அவன் ஒரு பொன்மானுருவங்கொண்டு சீதையிருந்த பர்ணசாலைக்குச் சமீபத்தில் போய்த் துள்ளி விளையாடினன். சீதை அந்த மானைப் பிடித்துக் கொடுக்கும்படி தனது நாயகரை வேண்டினள். இராவணனுக்கு இறுதிக் காலம் கிட்டியபடியால் இராமருடைய மனமும் அவள் வார்த்தையின் வழியே சென்றது. உடனே அவர் இலக்ஷ்மணரைச் சீதைக்குக் காவலாக நிறுத்தி, வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டு அம்மாய மானை வெகுதூரம் துரத்திக் கொண்டு போய்க் கடைசியில் அம்பினல் கொன்றார். அந்த அம்பினல் உயிர் துறக்கும் மாரீசன், இராமர் அழைப்பது போல் இலக்ஷ்மணரையும் சீதையையும் கூவி அழைத்து இறந்தான். அதைக் கேட்டவுடன் சீதைக்கு அக்குரல் இராமர் குரலாகவே இருந்தபடியால், அவள் மனம்

பதைத்து உயிர் துடித்து இலக்ஷ்மணரை ஏவ, அவர் அது மாரீசனுடைய மாயை என்பதை யறிந்து சீதைக்குத் தேறுதல் சொல்லினர். அப்போது சீதை வெருண்டு காதால் கேட்கத் தகாத கொடுமொழி கூற, அவர் அவ்விடத்தை விட்டு அகன்று இராமரைத் தேடிச் சென்றனர்.

அச்சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்த இராவணன், ஒரு மாயத் துறவி வேடம் பூண்டு அங்கு வந்து, மிக்க நெருப்பைத் தனது இரண்டு கைகளாலும் வாரி மடியில் கட்டிக் கொள்பவன் போல், சீதையைப் பர்ணசாலையோடு பேர்த்தெடுத்துத் தன் இரதத்தில் வைத்துக்கொண்டு சென்றான். சீதை வலையிலகப்பட்ட மான் போல் பதைத்து வாய் விட்டுக் கதறினாள். அக்குரலைக் கேட்டுப் பக்கத்திலிருந்த ஜடாயு இராவணனைத் தடுத்து அவனோடு கடும்போர் புரிந்து, பின்பு தன்னாலாகாமல் சிறையிழந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்தது. இராவணன் அவ்விபத்தினின்று நீங்கி மிகவும் விரைவாகச் சென்று இலங்கையை அடைந்து, தனது மனோகரமான அசோக வனத்தில் அவளைச் சிறைப்படுத்தி, அவளுக்குக் காவலாக எம தூதர்கள் போன்ற பயங்கரமான உருவத்தையுடைய, அனேக அரக்கிகளையும், விபீஷணர் பெண்ணாகிய திரிசடை என்னும் குணவதியையும்

திட்டஞ் செய்து, சீதை தன்னைச் சீக்கிரத்தில் மணக்கும்படியான ஏற்பாடு செய்ய வேண்டு மென்று அவர்களுக்குக் கட்டளை யிட்டனன்.

மாரீசனைக் கொன்ற இராமர், அவன் செய்த வஞ்சனையால் மனக்கிலேசமுற்று மிக்க விரைவா கத் திரும்பி வந்தனர்; அப்போது எதிரே வந்த இலக்குமணரைக் கண்டு சீதைக்கு மோசம் வந்த தென நினைந்து, அவளைத் தனியே விட்டு வந்ததற் காக இலக்குமணரைச் சினந்து இருவரும் வேக மாய்ப் பர்ணசாலையை அடைந்தனர்; அவ்விடத் தில் சீதையைக் காணுமல் மனமழிந்து, அவளைச் சோலையில் எங்குந்தேடியும் அவள் காணப்பட வில்லை. அதனுல் இராமர் துயரக்கடலி லாழ்ந்து அவளைத் தேடிக்கொண்டே போகும்போது சிறகு இழந்துகிடந்த ஜடாயுவைக் கண்டனர். அச் சடாயு அங்கு நடந்தவற்றை இராமருக்குத் தெரி வித்துக்கொண்டே உயிரைவிட, இராமர் அக்கழு கரசனுக்குத் தகனக்கிரியை முதலியன முடித்துச் சென்றனர்.

இராகவர் இருவரும் ஜானகியைத் தேடிக் கொண்டே போகும்போது ஒருநாள் இரவில் இராமருக்குத் தாகம் மேலிட்டது. அதற்காக இலக்ஷ்மணர் ஜலத்தைத் தேடிச் செல்லுகை

யில், தமக்குத் தீங்கிழைத்த அயோமுகி என்பவ ளது மூக்கை அரிந்து அப்பாற் சென்று, ஜலத் தைக் கொணர்ந்து இராமரது நீர்வேட்கையைத் தணித்தார்.

அதன்பின், அவர்கள் கவந்தன் வனத்தை யடைந்து அவனைக் கொல்ல, அவன் தனது பழைய யக்ஷவுருவத்தை யடைந்து விண்ணுல கிற்குப் போகும்போது, அவர்களைச் சபரியிடத்தில் செல்லும்படி உரைத்துச் சென்றனன். அவ்வாறு அவர்கள் சபரியை நாடிப்போய் அவள் அன்போ டளித்த கிழங்கு கனிகளையுண்டு, அவள் தெரிவித்த படி மதங்கமலையிலுள்ள சுக்ரீவனைத் தேடிச் சென் றனர்.

இராகவர்கள் பம்பாநதியைக் கடந்து அனு மானால் சுக்ரீவனுடைய நிலைமையையறிந்து, அவ னிருந்த மலைக்குச் சென்று அவனோடு நட்புக் கொண்டனர். இராமர், அந்தக்ஷணமே வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குக் கிஷ்கிந்தா ராஜ்யத்திற் குப் பட்டாபிஷேகம் செய்து வைப்பதாக வாக் களித்தார். இதைக்கேட்ட சுக்ரீவன் இராமரது வல்லமையைப் பரிசோதிக்கக் கருதி, அங்கு மலை போல்கிடந்த துந்துபியின் எலும்பை எடுத்தெறிய வும், ஏழு மராமரங்களை ஒரே பாணத்தால் துளைக்க

வும் அவரை வேண்டினான். இரகுநாதர் அக்காரியங்களை மிகவும் இலகுவாக முடித்துச் சுக்ரீவனுடைய சந்தேகத்தையும் போக்கினார். அதனால் சுக்ரீவனுக்கு இரண்டு புஜமும் பூரிக்க, அவன் வாலியைத் தானாகவே யுத்தத்துக்கு அழைத்து அவனோடு கடும்போர் புரிந்தான். அப்போது இராமர் மறைந்திருந்து ஒரு பாணத்தை வாலியின் மீது தொடுக்க, அது அவன் மார்பைப் பிளந்து அவனை விண்ணுலகுக் கேற்றிவிட்டது.

பின்பு இராமர் சுக்ரீவனுக்கு முடிசூட்டி அவனைக் கிஷ்கிந்தாபுரிக்கு அதிபதியாக்கி, மாரிக்காலம் கழியும் வரையில் இலக்ஷ்மணரோடு அந்த மலையிலேயே தங்கி யிருந்தார்.

மாரிக்காலம் நீங்கியும், சுக்ரீவன் வாராமையால் அவனைக் கொணரும்படி தமது தம்பியை இராமர் ஏவ, அவர் கிஷ்கிந்தைக்குச் சென்று சுக்ரீவனிடத்தில் மிக்க சீற்றத்துடன் அதனைத் தெரிவித்தார். அவன் இராமருக்கு அபராதியாகக் கூடாதென்பதை யுணர்ந்து, சடுதியில் அவரிருந்த மலைக்குச் சென்று அவரைப் பணிந்து கோபத்தைச் சாந்தப் படுத்தினான். பிறகு சுக்ரீவன் சீதையைத் தேடுவதற்குத் தன்னுடைய வானரப்படைகளைத் திரட்டி, இராமருக்கு முன்னிலையில் அவர்

களை மூன்று திக்குகளுக்கும் அனுப்பி, தெற்குத் திக்கிற்கு மாத்திரம் அங்கதன், அனுமான், நீலன், சாம்பவன் முதலான வலிமை சாலிகளைச் செல்ல விடுத்தான். இராமர், வீரனாகிய அனுமானிடத்தில் தமது கணையாழியைக் கொடுத்துச் சீதைக்குத் தெரிவிக்குமாறு சில இரகசியமான விஷயங்களையும் சொல்லியனுப்பினர்.

தெற்குத் திக்குக்குச் சென்றவர் தவிர, மற்ற மூன்று பிரிவினரும் சீதையைக் காணாது திரும்பினர். தென் திசைக்குச் சென்றவர்கள் அத்திசை முழுதும் தேடியுங் காணாமல், சுயம்பிரபை தங்கியிருந்த பிலத்துக்குள் நுழைந்து, அவளுதவியால் மகேந்திரபர்வதத்தை யடைந்தார்கள். அவர்கள் அம்மலையின் உச்சியிலேறி எல்லாப்பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தும், கடலைத் தவிர வேறொன்றும் தென்படாமையால் மனம் வருந்தி, ஜடாயுவைப் போல் நாமும் மடியக் காலம் வரவில்லையே என்று தம்மை வெறுத்துரைத்தனர்.

அம்மொழியைக் கேட்ட சம்பாதி என்னும் கழுகரசன், தன் தம்பி இறந்ததாகக் கூறியவர் யாவரெனத் தெரிந்துகொள்ள மெதுவாக அம்மலைக் குகையினின்று வெளியே வந்து, "ஐய, என் தம்பி ஜடாயு இறந்த விதத்தைத் தெரிவிக்கவேண்

டும்" என்று அழிந்த சிந்தையனுய்க் கேட்டனன். அதற்கு அவர்கள் நடந்த வரலாற்றைத் தாம் கேள்விப்பட்டபடியே அறிவித்து, அவர்கள் சீதையைத் தேடிக்கொண்டு வந்திருப்பதையும் அவனுக்கு அறிவித்தார்கள். சம்பாதி, தன் தம்பி இறந்ததற்காகக் கண்ணீர் பெருக வருந்தி அனுமான் முதலானோரை நோக்கி, "சூரர்களே, திருமகள் போன்ற சீதையை எடுத்துச் சென்றவன் இராவணன் தான். அவன் இவ்வழியாகப் போகும்போது என் குமாரன் அவனைத் தடுத்தான். அப்போது இராவணன் அவனை மிகவும் வேண்டிக் கொண்டபடியால் அவன் மனமிளகி அவனை விட்டுவிட்டான். உடனே அவன் இலங்கைக்குச் சென்முன்" என்றுரைத்தான். இவ்வித இராம கைங்கரியம் செய்ததால், சம்பாதி பெற்ற வரத்தின்படி கரிந்துபோன அவன் சிறகுகள் வளர்ந்தன. அதனுல் அவன் அவ்விடத்தை விட்டுப் பறந்து போயினன்.

பின்பு அந்த நால்வரும் கடலைக் கடப்பவர் யாவரெனத் தமக்குள் ஆலோசிப்பாராயினர். அப்போது அனுமான், தான் கடப்பதாக எழுந்து கடலைத் தாவுகையில் இடையில் நேரிட்ட இடுக்கண்களைக்களைந்து, இலங்கையையடைந்து இலங்கணியைக் கொன்று, இரவில் சீதையை அசோக

வனத்திற் கண்டனன். அப்போது அவள் நிலைமையை நோக்கிப் பரிதபித்து அவளுக்குக் காவலாக இருந்த அரக்கியர் தூங்குஞ் சமயம்பார்த்து, அப்பிராட்டியைத் தரிசித்துத் தான் இராமதூதன் எனவுரைத்து அதற்கடையாளமாக அவரால் கொடுக்கப்பட்ட கணையாழியையும் கொடுத்து, அவரால் கூறப்பட்ட இரகசியமான விஷயங்களையும் கூறினன். ஜானகி அக்கணையாழியைக் கண்டவுடன் இராமரைக் கண்டதுபோல் பேரானந்தமுற்ருள். இராமருக்குத் தன்னிடத்திலிருந்த நேசத்தை நினைந்து நினைந்து பெருமூச் செறிந்தாள்.

இதற்குள் அனுமான், தான் வந்ததை இராவணனுக்கு அறிவிக்கும் பொருட்டு அந்த அசோக மரக்கிளைகளை ஒடித்துச் சீதைக்குக் காவலாக இருந்த கிங்கரரை அடித்துத் துரத்தினன். அவர்கள் இராவணனிடத்தில் சென்று முறையிட, அவன் முறை முறையாக அரக்கரை அனுப்பினன். அவர்கள் யாவரையும் அனுமான் கொன்று அட்டகாசம் செய்தான். இராவணன் தன் குமாரரில் ஒருவனுகிய அக்ஷயகுமாரனை யனுப்ப; அனுமான் அவனையும் கொன்று ஆரவாரித்தான். கடைசியில் இந்திரஜித்து அனுமானை எதிர்த்துப் போர்புரிந்து, பிரமாஸ்திரத்

தால் அவனைக் கட்டிக்கொண்டுபோய் இராவணன் முன்னிலையில் விட்டான்.

இராவணன் அவனை இகழ்ந்து, 'நீ யார்?' என்று கேட்டான். அதற்கு அனுமான் அவனை ஒரு பத்துத்தலைப் பூச்சியென மதித்து, "நான் உன்னைக்கொல்ல வரும் இராமரது தூதன்" என உரைத்தான். அதைக்கேட்ட இராவணன் சீறி, அவனைக் கொல்லும்படி கட்டளையிட்டான். பக்கத்திலிருந்த விபீஷணர், "தூதனைக் கொல்வது தர்மமன்று" என்று இராவணனைத் தடுத்தார். பின்பு இராவணன், அனுமானை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டுமென எண்ணங்கொண்டு, அவன் வாலில் துணியைச் சுற்றிக் கொளுத்தும்படி ஆக்ஞாபித்தான். அனுமான் தனது வால்முழுவதும் துணிசுற்றிக் கொளுத்தப்பட்டவுடனே மிக்க களிப்புடன் தாவிச் சீதை யிருந்த இடம் தவிர மற்றெல்லாவற்றையும் கொளுத்தி நிர்மூலமாக்கிப் பிராட்டியை வணங்கினான். பின்னர், அவளால் கொடுக்கப்பட்ட சூடாமணியைக் கைக்கொண்டு, அவளிடத்தில் விடைபெற்று மீண்டும் கடலைத்தாவி மகேந்திர பர்வதத்தை அடைந்தான்.

அவ்விடத்தில் அனுமானுடைய வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்த சாம்பவன், நீலன்,

அங்கதன் முதலானோர் அவனுடைய வாயினின்று என்ன பிறக்குமோ என்று மிக்க ஆவலோடு அவன் சென்றுவந்த காரியத்தின் முடிவைக் கேட்டார்கள். அனுமான் இலங்கையில் இராவணனால் சீதை சிறை வைக்கப்பட்டிருப்பதைத் தெரிவித்தான். அவர்கள் குதூகலித்து மாருதியைப் புகழ்ந்து துதித்தார்கள். பின்பு அவர்கள் நால்வரும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, மிகவும் விரைவாக இராமரிருந்த பர்வதத்தை அடைந்தனர். உடனே அனுமான் அவரைத் தொழுது தான் சீதாபிராட்டியைக் கண்டுவந்த செய்தி முதலானவற்றை விளக்கமாகக் கூறினன்.

பிறகு அவன் அவளால் கொடுக்கப்பட்ட சூடாமணியையும் அவரிடத்தில் சேர்ப்பித்தான். அதைக் கண்ட இராமர் சீதையைக் கண்டவர் போல் மகிழ்ச்சியுற்று, அவளிடத்துள்ள காதல் மிகுதியால் அச்சூடாமணியை நோக்கிய வண்ணமாகவே வேறு ஞாபகமின்றி அசைவற்றிருந்தார்.

பின்பு இலங்கைக்குப் போவதற்காக இராகவர் இருவரும், சுக்ரீவன் முதலான வானரசிரேஷ்டர்களும் சாம்பவனும் எழுபது வெள்ளம் வானர சேனைகளும் தம்மைச் சூழ்ந்துவர, அவ்விடத்தை

விட்டுப் புறப்பட்டு வழியில் அனேக காடுகளைக் கடந்து கடற்கரையை அடைந்தனர்.

இராமர் கடற்கரை யடைந்த செய்தியைத் தூதர்களால் கேள்வியுற்ற இராவணன் மந்திராலோசனை செய்யத் தொடங்கினான். அப்போது விபீஷணர், இராவணனை நோக்கிச் சீதையை இப்போதே இராமரிடத்தில் கொண்டுபோய் விட்டு வருவதே அரக்கர் குலத்துக்கு க்ஷேமம் எனப் பற்பல தர்மங்களைப் புகட்டியும், அவன் அவற்றைக் கேளாது அவரைக் கடிந்து, “உனக்கு என் விரோதி மேலானவனாகத்தோன்றினால் நீ அவனிடம் போய்ச் சேர்ந்துகொள்” என்று ஓட்டினான்.

மகா பண்டிதனாகிய அனுமான், அடைக்கலமாக வந்தடைந்த விபீஷணரைக் காக்கும்பொருட்டுத் தன்னை நோக்கிய சீதாராமரது உட்கருத்தையுணர்ந்து, அந்த விபீஷணருடைய நற்குணங்களைப் புகழ்ந்துரைத்தான். உடனே இராமர் விபீஷணருக்கு அபய மளித்து, இலங்காபுரிக்கு அவரே அரசரெனவும் அவ்விடத்திலேயே முடி சூட்டினர்.

பிறகு இராமர் கடலில் அணைகட்டுவதற்காக வருணனை நினைத்தபோது, அவன் வாராமையினால் சினங்கொண்டு ஒரு அக்கினியாஸ்திரத்தை

மந்திரித்துக் கடலைநோக்கி ஏவினர். அந்த அஸ்திரம் கடலைத் தகிக்க, அதனால் வருணன் வருந்தி இராமரிடத்துச் சரண் புகுந்து, அவர் கருத்தின்படி தன் தலைமிசை அணை கட்டிக்கொள்ளுவதற்கு மகிழ்ந்து உடன்பட்டான்.

அப்போது வானர சேனைத் தலைவனான நளன், குரங்குக் கூட்டங்களைச் சேர்த்துக்கொண்டு மலைகளைக் கொணர்ந்து கடலைத் தூர்த்து ஒரு நீண்ட அணையை யமைத்தான். இராகவர் தமது தம்பியோடும் வானரப் படையோடும் கடலைக் கடந்து இலங்கையை யடைந்து சுவேல மலையில் தங்கினர். அதைக் கேள்வியுற்ற இராவணன் தன் மாளிகையின் உயர்ந்த கோபுரத்திலேறி அவர்களைப் பார்த்தான். அவனை இராமரும் சுக்ரீவனோடு கண்ணுற்றார். சுக்கிரீவன் அவனைக் கண்டவளவில் இடிமுழக்கம் போல் கர்ச்சித்து, அங்கிருந்தபடியே தாவி இராவணனது உப்பரிக்கையில் குதித்து, அவன் முடிகள் சிதற அடித்துத் திரும்பினன்.

இராமர் முறைப்படி அங்கதனை இராவணனிடத்தில் தூதாக அனுப்பியும், விதிவசத்தால் அவன் சீதையை விடுவதில்லையென உரைத்து யுத்தத்துக்குத் தயாராயினன். உடனே வானர சேனை

கள் அவன் நகர் முழுதும் சூழ்ந்தன. அப்போது அரக்கர்கள் வானரரோடு போர்புரிய, இராவணன் இராமரோடு சண்டை தொடுத்தான்.

இராவணன் இராமருடைய பாணங்களால் தேர் முதலிய எல்லாவற்றையும் இழந்து உதவி யற்று ஒருவனுகப் பூமியில் நின்முன். அந்நிலைமையைக்கண்ட பெருவீரராகிய இராமர் மன மிரங்கி, அவனை அன்றைக்குப் போரை நிறுத்தி மறுநாள் முழுபலத்தோடு வரும்படி கட்டளையிட் டனர். அதைக்கேட்ட இராவணன் வெட்கித் தலை குனிந்து, தன் அரண்மனையை அடைந்து தனது சகோதரனுகிய கும்பகர்ணனை யுத்தத்துக்கு ஏவி ஞன். அவன் தேவர்களும் நடுங்கும்படி யுத்தஞ் செய்து, இராவணன் தனக்குச் செய்த நன்றி மற வாது செஞ்சோற்றுக் கடன்கழித்து, இராமரது திவ்யாஸ்திரத்தால் விண் ணுலகை அடைந்தான். அதையறிந்த இராவணன், மனம்பதறித் தனது இரண்டாவது குமாரனுகிய அதிகாயனை யனுப்பி ஞன். அவன் இலக்ஷ்மணரோடு யுத்தஞ் செய்யும்போது அவர் ஒரு பிரமாஸ்திரத்தால் அவன் தலையை ஒரு நொடியில் அறுத்துத் தள்ளி ஞர். இராவணன் தன் குமாரன் இறந்ததைக் கேள்வியுற்று, கண்களில் நீர் பெருக ஒன்றுந் தோன்ருதவனுய் வருந்தும்போது, அவனுடைய

மூத்த குமாரனும் இணையற்ற வீரசிகாமணியுமான இந்திரஜித்து போருக்கெழுந்தனன்.

அவன் நெடுநேரம் போர்புரிந்து கை களைத்து, பிறகு ஆகாயத்தில் மறைந்து நாகாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அதனால் இராகவர் இருவரும் பிணிப்புண்டனர். அதையறிந்த கருடாழ்வார் அந்த யுத்தகளத்தையடைய, நாகபாசம் விடுபட்டது. இராம இலக்ஷ்மணரும் எழுந்தார்கள். அவர்களைக்கண்ட வானரப்படைகள் உவகையால் கடல்போல முழங்கின. அந்த ஆரவாரத்தைக் கேட்ட இராவணன் முன்னிலும் அனேககோடி அரக்கரை யுத்தத்துக்கு அனுப்பினான். அவர்கள் யாவரும் சண்டை செய்து மடிந்தார்கள். மறுபடியும் இந்திரஜித்து யுத்தகளத்தை யடைந்து அட்டகாசஞ் செய்து, வானரப்படைகளை வாட்டிப் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்தான்.

அதனால் இராகவர், சாம்பவன், அனுமான், விபீஷணர் ஆகிய நால்வர் தவிர, மற்ற யாவரும் பதைத்துப் பூமியில் சாய்ந்தனர். இரகுநாதர் இலக்ஷ்மணர் மூர்ச்சித்துக் கிடப்பதைக் கண்டு, சிறகிழந்த பறவைபோல் மனம் நொந்து வருந்துவதைக்கண்ட அனுமான், அதனைப் பொறுக்காமல் கடிதிற்சென்று சஞ்சீவி மலையைக் கொண்டு

வந்தனன். அதனால் யாவரும் உறங்கினவர் போல் விழித்து முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகக் கர்ச்சித்தார்கள்.

பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்துச் சென்ற இந்திரஜித்து நிகும்பலை யாகம் செய்யத் தொடங்கினான். அதை யறிந்த விபீஷணர் அநுமான் முதலானோர் அந்த யாகத்தை அழித்தனர். அதனால் இந்திரஜித்து மனம் வெதும்பி, உருத்திரக் கடவுள்போல் சீறி யுத்தகளத்தை யடைந்து, அவனோடெதிர்த்த இலக்ஷுமணரோடு தன்னாலான மட்டும் மாயயுத்தங்களும் மாயக் கொலைகளும் செய்தான்; அனேக தேவதாஸ்திரங்களைப் பிரயோகித்தான். அவைகளொன்றும் பயன்படாமை கண்டு யாவரும் நடுங்கச் சக்ராயுதத்தை விடுத்தான். அது நெருப்புப் பொறிகளைக் கக்கிக்கொண்டு இலக்ஷுமணரைக் கிட்டியவுடன், அவரை நாராயணரெனவே மதித்து வணங்கி நின்றது.

இவ்வாறு அவனுக்குரிய அஸ்திர சஸ்திரங்கள் யாவும் செயலற்றுப் போனமை கண்டு, யுத்தத்தில் வெறுப்புற்று ஒருவருமறியாமல் தன் தந்தையாகிய இராவணனை யடைந்து வாடிய முகத்தோடு நிற்க, இராவணன் என்றும் பார்த்தறியாத தன் குமாரனது மனச்சோர்வை யுணர்ந்து, மனம்

வருந்தி அவனை நோக்கி, "இந்திரனைச் சிறையி லிட்ட ஏந்தலே, உனக்குற்றது யாது?" என்று வினவினன். அதற்கு இந்திரஜித்து, இராவண னிடம் இலக்ஷ்மணருடைய போர்த் திறத்தைத் தெரிவித்து, சீதையை விட்டுவிடுவதே அரக் கருக்கு க்ஷேமம் என்றனன். அதைக் கேட்ட இராவணன் இந்திரஜித்தை வெறுத்துத் தானே போருக் கெழுந்தனன். அப்போது இந்திர ஜித்து இராவணனைத் தடுத்துத் தன்னை மன் னிக்கும்படி வேண்டி, மறுபடியும் யுத்தகளத்தை அடைந்தான். இலக்ஷ்மணரும் மாருதியின் தோளில் எழுந்தருளி அவனோடு தொந்த யுத்தஞ் செய்யத் தொடங்கினர்.

இவ்வாறு இருவரும் இரண்டு உருத்திரர்கள் போர் செய்வதுபோல் ஒருவரையொருவர் வெல் லும் கருத்துடன் போர் புரியுங்கால், இலக்ஷ்ம ணர் ஆக்ரமித்து ஓர் அர்த்தசந்திர அஸ்திரத் தைப் பிரயோகிக்க, அது அவன் தலையை அறுத் துத்தள்ளித் தேவர்களை மகிழ்வித்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இராகவர் இருபுயமும் பூரித்தார்.

இராவணன், தனது வெற்றிக்கு உறைவிட மாகிய குமாரன் இறந்ததைக் கேள்வியுற்று, கண்

களில் நீர் ஆறுகப் பெருக அழுது, பின்பு தேறி எப்போதும் வெற்றிதருவதும் அவனுடைய ஆபத்துக்காலத்தில் கைகொடுப்பதுமான மூல பலச் சேனையிலுள்ள வீரர்களை ஏவினன். இராமர் அவர்கள் யாவரையும் ஏழு நாழிகைக்குள் வதைத்தனர். அப்போது அரக்கர்களில் யுத்தம் செய்யத்தக்க வீரர் யாருமில்லை. அதனல் இராவணன் தேரேறி யுத்தகளத்துக்கு வந்து சேர்ந்தான். இராமர், இந்திரனல் அனுப்பப்பட்ட தேரில் அமர்ந்து இராவணனேடு கடும்போர் புரிந்தார். அப்போருக்கு உவமை கூறுவது இயலாததாகும். இராவணனும் இராகவரும் கை ஓயும்படி நெடுநேரம் கடும்போர் புரிகையில், இராகவர் வெகுண்டு பிரமாஸ்திரத்தை யேவினர்.

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமு முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படா
யெனக்கொடுத்த வரமு மேனைத்
திக்கோடு முலகனைத்துஞ் செருக்கடந்த
புயவலியுந் தின்று மார்பிற்
புக்கோடி யுயிர்பருகிப் புறம்போயிற்
றிராகவன்றன் புனித வாளி.

அந்த அஸ்திரம் இராவணனைத் தேடிவந்து அவன் மார்பிற் புதைய, இடிவிழுந்த மலைபோல்

பூமியில் சாய்ந்தான். அப்போது ஆகாயத்தில் நின்று வேடிக்கைப் பார்த்துக்கொண் டிருந்த தேவர்கள் இரகுநாதருக்குப் பூமாரி பொழிந்து அவரைத் துதித்தனர். சப்தரிஷிகளும் இராமரை வாழ்த்தினர்கள்.

இராவணன் இறந்த செய்தியை யறிந்த அவன் மனைவியாகிய மண்டோதரி, என்றும் யாவரும் அவளைப் புகழுமாறு அவனோடு உடன் கட்டை ஏறினாள். மற்ற அரக்கியர் யாவரும் அழுது ஏங்கினர்.

இராகவர் விபீஷணரைக்கொண்டு இலங்கையிலிருந்த அரக்கர்களுக்கெல்லாம் நீர்க்கடன் கழிக்கச் செய்து, இலங்காபுரியை அவருக்கு முடிசூட்டுவித்து, ஒரு கற்ப காலம் ஜீவித்திருக்கத்தக்க ஆயுளும் ஈந்தார். பின்பு சீதையை அழைத்துவரச் செய்து, அவள் கற்பை யாவரும் அறியச் செய்யும்பொருட்டு அவளை அக்கினியில் மூழ்குவித்து, பிறகு அங்கீகாரஞ்செய்து அவளையும் அங்கிருந்த மற்ற யாவரையும் புஷ்பக விமானத்தில் ஏற்றிக் கொண்டு கிஷ்கிந்தை யடைந்தார். அங்கிருந்த தாரைமுதலான யாவரையும் அழைத்துக்கொண்டு சீதைக்கு வழியிலுள்ள இருஷி ஆசிரமங்களைக் காண்பித்துக் கொண்டு பரத்துவாசர் ஆசிரமத்தை

யடைந்தார். அம்முனிவர் அவர்கள் எல்லோருக்கும் விருந்தளித்தனர். அதை யாவரும் அமிர்தமென உண்ட பிறகு, இராமர் அவரிடத்தில் விடைபெற்றுப் புறப்பட்டுச் சிருங்கிபேரத்தை நோக்கி வருங்கால், தமது வரவுக்குக் காத்திருந்த குகனையும் விமானத்தி லிருத்தி அயோத்தியை நோக்கிச் சென்றார்.

இராமர் பரத்துவாசர் ஆசிரமம் வரையில் வந்து விட்டாரென்பதை அனுமானால் கேள்வியுற்ற பரதன், தன் விரதப்படி அக்கினியில் விழாமல், தனது குல தெய்வமாகிய தமையனை எதிர்கொண்டழைத்து வரும் பொருட்டுத் தம்பி சத்ருக்கனனோடும் தாய்மார்களோடும் வசிஷ்டர் முதலான அந்தணர்களோடும் அவர் வரும் வழியை நோக்கிச் சென்றான். இவ்வாறு பரதன் வருவதைக் கண்ணுற்ற இராமர் மகிழ்வுற்றார். விமானம் சமீபித்தவுடன், பரதனும் சத்துருக்கனனும் தேரைவிட்டிறங்கி, இராமரது இரண்டு திருவடிகளிலும் தமது முடிபட வணங்கினார்கள். இராமரும் தம் கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருக அவ்விருவரையும் எடுத்துத் தழுவினார். பின்பு இராமரும் இலக்ஷ்மணரும் தாய்மார்களையும் வசிஷ்டர் முதலான அந்தணர்களையும் வணங்கினார்கள். சீதை, தாரை முதலான மாதர்கள் சூழ விமானத்தி

னின்றிழிந்து மாமிமார்களை வணங்கினள். இராகவர் அவர்கள் யாவரையும் விமானத்திற் கொண்டு நந்திக் கிராமத்தை யடைந்து, விமானத்தை மந்திரி வசம் ஒப்புவித்து அதைக் கொண்டுபோகச் செய்தனர்.

அவ்விடத்தில் இராகவர் மரவுரி முதலியவற்றை நீக்கி, அரசகோலங் கொண்டு பஞ்சவாத்தியங்களும் ஒலிக்க, சுக்ரீவனும் விபீஷணரும் வெண்கவரி வீச, அனுமான் சந்திரவட்டக் குடை பிடிக்க, பரதன் தேரோட்ட, கடல்போல் நால்வகைச் சேனைகளும் சூழ்ந்துவர, ஓர் அலங்கார மான தேரில் அமர்ந்து அயோத்தி நகரை யடைந்தார். அவரைக் கண்ட அந்நகரத்து ஜனங்கள், சூரியனைக் கண்ட தாமரைபோல் முகமலர்ந்து ஆனந்தக் கூத்தாடினர்கள். இராமர் நல்வேளையில் பட்டணப்பிரவேசஞ் செய்து அரண்மனையை அடைந்தார். அப்போது வசிஷ்ட முனிவர், இராமரைச் சீதாபிராட்டியோடு சிம்மாசனத்தில் அமர்த்தி, புண்ணிய தீர்த்தங்களால் நீராட்டித் திருமுடி புனைவித்தார்.

இராமர் கோசல நாட்டரசாட்சியைக் கைக்கொண்டவுடன், உலகம் முழுதும் மகிழ்வுற்றது. ஏகபத்தினி விரதரான இராமர் அரசாண்ட காலத்தில் கொழுநர் மனைவிமாரையே விரும்பினர்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் எவரும் எளிதில் அடைய லுற்றார். எங்கணும் அந்தணர்களும் அரசரும் பல யாகங்களைக் குறைவரச் செய்தமையால் தேவர்கள் மகிழ்வுற்றனர். சீதை தமது காவலராகிய இராமரது மனமகிழும்படி அவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை ஒழுங்குபெறச் செய்து, அவரையே தெய்வமெனக் கொண்டாடினள்.

இவ்வாறு யாவரும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருங் காலத்தில் சீதை கருவுற்றனள். அப்போது ஒருவன், இராவணனால் அபகரிக்கப்பட்டுச் சிறையிலிருந்த சீதையோடு இராமர் இல்லறம் நடாத்துவது இழிவெனக் கூறியதை அவர் கேள்வியுற்று, 'ஒப்புரவொழுகு' என்னும் நீதியை அனுசரித்துத் தம்பியாகிய இலக்குமணரை அழைத்து, சீதையைக் காட்டில் விட்டுவரும்படி கட்டளையிட்டனர். அவரும் அவ்வண்ணமாகவே சீதையை இரதத்திலேற்றி, அவளுக்கு வனக்காட்சியைக் காண்பிக்க அழைத்துச் செல்பவர்போல் கானகத்தை அடைந்து, அவளை அங்கே தனியாக விட்டு விட்டுத் துயரத்தோடு அயோத்தியை அடைந்தார்.

சீதை தனக்கு நேர்ந்த விபத்திற்குக் காரணத்தை அறியாமல், துணையை விட்டுப் பிரிந்த

அன்னப்பேடுபோல் மதிகலங்கி, கண்களினின்று நீர் ஆறுகப் பெருக அடக்க முடியாத துக்கத்தால் வாய்விட்டு அலறினுள். அந்த அழுகுரலைக் கேட்டு அங்குத் தவஞ் செய்துகொண்டிருந்த வான்மீகி முனிவர் அங்குற்று, ஜானகியைத் தேற்றித் தமது ஆசிரமத்துக்கு அழைத்துச்சென்று ஆதரித்து வந்தனர். அங்குச் சில மாதங்கள் சென்றபிறகு ஜானகி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றனள். வான்மீகிமுனிவர் அக்குழந்தைகளுக்குக் குகன், லவன் என நாமகரணஞ் செய்து, நாளடைவில் அவர்களுக்கு வில்வித்தை முதலிய அரசர்க்குரிய கல்வி புகட்டி, அவற்றில் அவர்களைத் தேர்ச்சிபெறச் செய்தார்.

அயோத்தியில் பரத இலக்குமண சத்துருக்கனர்களுக்கும் குமாரர் பிறந்து இளஞ்சூரியனைப் போல் வளர்ந்து வந்தார்கள். அப்போது இராமர் அசுவமேத யாகஞ் செய்ய எண்ணங்கொண்டு, சீதையைப்போல் ஓர் உருவமைத்து வைத்துக் கொண்டு பத்து அசுவமேத யாகஞ் செய்தனர். அந்த யாகசாலையைக் குசன் லவன் இருவரும் அடைந்து, வான்மீகி இருஷி அவர்களுக்குப் புகட்டியவாறு இராமாயணத்தைப் பாடினர்கள். அதைக்கேட்ட இராமர் பேருவகையுற்று, அவர்கள் மனம் வெறுக்குமாறு பொன் அளிக்கக் கட்

டளையிட்டனர். அதற்கு அப்பாலர்கள், “ காட்டில் தவஞ் செய்யும் எங்களுக்குப் பொருள் வேண்டாம்” என்றுரைத்துப் போயினர்.

பின்பு இராமர், அவர்கள் தமது குலக்குமாரரென அறிந்து, தூதரை அனுப்பிச் சீதையை அழைத்துவரச் செய்தனர். வான்மீகி முனிவர் சீதையை அவள் குமாரர்களோடு அழைத்து வந்து, இராமரது சன்னிதியில்விட்டு அவளுடைய கற்பின் உறுதியைப் புகழ்ந்தனர்.

சீதை மனம் வருந்தி, “ நான் இதுகாறும் கற்புடைமையை எனக்குரிய அரணாகக் கருதி, அதினின்று தவறுதிருந்தது உண்மையாயின், இப்பூமி வெடித்து என்னை ஏற்றுக்கொள்ளல்வேண்டும்” என்றாள். அந்த க்ஷணமே பூமி பிளக்க, ஒரு திவ்ய ஆசனம் தோன்றிச் சீதையை ஏந்தியது. சீதை தன் குழந்தைகளை வான்மீகி முனிவரிடத்தில் ஒப்புவித்துவிட்டு, அந்த ஆசனத்திலமர்ந்து பூமிக்குள் சென்றனள். பூமியின் பிளவும் மூடுண்டது.

இவ்வற்புதத்தைக் கண்ட யாவரும் திடுக்கிட்டார்கள். இராமர் மிக்க சினங்கொண்டு பூமியின் கர்வத்தை அடக்குவதற்காக ஒரு பாணம் தொடுக்கப் புகுந்தனர். அப்போது பிரமதேவர் அங்கு

எழுந்தருளி, சீதை இராமருக்கு முன் வைகுண்டத்தில் இலக்ஷுமி தேவியாக எழுந்தருளி இருப்பதைத் தெரிவித்து, அவர் கோபத்தை மாற்றினர்.

இராமர், தமது புத்திரர்களுக்கும் சகோதரர் புத்திரர்களுக்கும் இராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொடுத்து, தாம் பதின் மூவாயிரவருஷம் பூவுலகில் தங்கித் தருமத்தை அனுஷ்டிக்கும் முறையை உலகத்துக்குப் புகட்டியது போதுமானதென மனதுட்கொண்டு, சீதையின் பிரிவால் துக்கித்தவர் போல் சகோதரரோடு சரயுநதியில் புகுந்தனர். அப்போது இராமர், தாம் பூரண அவதாரம் செய்ததற்கு அடையாளமாகக் கோசல நாட்டிலுள்ள சராசரமனைத்தும் சுவர்க்கத்தை அடையுமாறு அருள்புரிந்து, வைகுண்ட மெய்தி ஆதி சேஷசயனராய் விளங்கலுற்ருர்.

தந்தைசோல் மிக்க மந்திரம் இல்லை.

---

## பலராமாவதாரம்.

இது, மகாவிஷ்ணுவின் பாயலாகிய ஆதி சேஷன் அப்பரந்தாமனது ஒரு கலையோடு உரோகிணி வயிற்றி லுதித்துக் கண்ணபிரானோடு துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்த வரலாறு ஆகும்.

கதையின் வரலாறு.

நீர்வளமும் நிலவளமும் பொருந்திய மதுரா புரியில் சூரசேனர் என்னும் ஓர் அரசர் அரசு



செலுத்தி வந்தார். அவருடைய குமாரர் வசு தேவர். அவருடைய மூத்த மனைவிகளில் ஒருத்தி

உரோகிணி. அந்த மாதுசிரோன்மணியை வசுதேவர், கம்ஸன் என்னும் கொடும் பாதகனுக்குப் பயந்து கோகுலத்தில் மறைத்து வைத்தார். அவருடைய மற்றொரு மனைவி தேவகி. கம்ஸன், வசுதேவர் முதலிய யாதவர்களை வருத்தியதால், அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி மகாவிஷ்ணு அவதாரஞ் செய்யப் புகுவதை அறிந்து, அனந்தன் அவர் அம்சமாகத் தேவகி வயிற்றிற் புக, அக்கரு பகவானுடைய ஆக்ஞையினால் உரோகிணி வயிற்றில் வைக்கப்பட்டது. உரோகிணி அக்குழந்தையைப் பெற்று இராமனெனப் பெயரிட்டனள். அவர் மகாவிஷ்ணு கிருஷ்ணாவதாரம் செய்வதற்குமுன் அவதரித்தமையாலும், வசுதேவரது ஒரு மனைவி யிடத்தில் தோன்றியமையாலும், கிருஷ்ண பகவானுக்குத் தமையனாராகித் துவாரகைக்கு அதிபதியாய், கிருஷ்ண பகவானது சகோதர பலங்கொண்டு பலராமர் எனும் பெயருடன் அரசாண்டு, பின்பு பரஞ்சோதியிற் கலந்து பழைய உருக்கொண்டனர்.

[இவர் சரித்திரத்தைக் கிருஷ்ணாவதாரத்தில் பரக்கக் காணலாம்.]

## கிருஷ்ணாவதாரம்.

இது, பகவான் பூபாரத்தை நீக்கும்பொருட்டும், தர்மஸ்தாபனஞ் செய்யும் பொருட்டும், துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் பொருட்டும் அவதரித்தருளிய வரலாற்றைக் கூறுவதாகும்.

### கதையின் வரலாறு.

திருமகள் நாயகராகிய பகவான் பாற்கடலில் பள்ளிகொண் டிருந்தார். பூவுலகத்தில் கொடியவர்களான அசுரர்களும் கொடுங்கோல் மன்னரும் நிரம்பிச் சாதுக்களை வருத்தினார்கள். அப்பாதகர்களைச் சுமப்பது பூமிதேவிக்கே பெருஞ் சுமையாக இருந்தது. அதனால் பூதேவி ஒரு பசுவின் உருவெடுத்துக் கொண்டு, பிரமதேவரை அடைந்து தன் பாரத்தை நீக்கி அருளவேண்டு மென்று வேண்டினாள். அவர் பூதேவியோடும் மற்ற தேவர்களோடும் பாற்கடல் நாதரைத் துதிக்க அவர், “ நீங்கள் வருந்தவேண்டாம். தேவர்களெல்லாம் யாதவர்களாக அவதரிக்கவேண்டும்; நாம் வசுதேவருக்குமைந்தராக அவதரிப்போம்” என்று திருவாய் மலர்ந்தருளினார். அதைக் கேட்டவுடன் பிரமதேவர், திருவருளைப் போற்றித் தேவர்களை யாதவர்களாக அவதரிக்கும்படி ஆக்ஞாபித்து,

பூமிதேவிக்கும் ஆறுதல் கூறி விடையளித்தார். தேவர்களும் யாதவர்களாக அவதரித்தார்கள்.

இஃதிப்படியிருக்க, மதுராபுரியில் யதுகுலத்தில் தோன்றிய சூரசேன மகாராஜனுக்கு வசுதேவர் முதலான பத்துப் புத்திரர் பிறந்தனர். அக்குலத்திலே தோன்றிய ஆருகன் என்னும் அரசனுக்குத் தேவகன் என்றும் உக்கிரசேனன் என்றும் இரண்டு புத்திரர் இருந்தனர். அவர்களில் தேவகனுக்குத் தேவவான் முதலான நான்கு புத்திரர்களும் தேவகி முதலிய ஏழு புத்திரிகளும் பிறந்தார்கள்.

வசுதேவர் தேவகியை மணந்து அவளுக்களிக்கப்பட்ட ஸ்ரீதனத்தோடு தமது நகருக்கேகினுர். அப்போது தேவகியின் சிற்றப்பன் மகனுகிய கம்ஸன், (கஞ்சன்) மிகவும் உற்சாகத்துடன் தனது உயர்ந்த தேரை அலங்கரிக்கச் செய்து, அதில் அத்தம்பதிகளை அமர்த்தி நால் வகைச் சேனைகளும் சூழ்ந்துவர, தானே அத்தேரைச் செலுத்திப் போயினுன். அம்மகிழ்ச்சி, பாவியாகிய அவனுக்கு நீடிக்கவில்லை. கொஞ்ச தூரம் போவதற்குள் திடீரென்று ஆகாயத்திலிருந்து, "கம்ஸா, நீ ஆனந்தமாகச் சாரத்தியம் செய்கிற தேரிலுள்ள உன் சகோதரியின் எட்டாவது குழந்தையால் நீ மரணமடைவாய். இது நிச்சயம்" என்று ஓர் ஒலி பிறந்தது.

அதைச் செவியுற்ற கம்ஸன் திடுக்கிட்டுத் தேர்த்தட்டினின்று குதித்து, தேவகியைப் பார்த்



துக் காலாக்கினிபோல் புகைந்து யாவற்றையும்

வெறுத்து, தன் இடையிலிருந்த உடைவாளை உருவி அவள் தலைமயிரைப் பற்றி வளைத்து அவளை வெட்டத் துணிந்தனன்.

சாந்தகுண சீலராகிய வசுதேவர், கம்ஸன் ஓங்கிய கையைப்பற்றி, " தயாளுவே, மாதரைக் கொல்வது தர்மமாகுமா? அஃது உன் புகழுக் கழகாகுமா? பூமியில் பிறந்தவை யாவும் அழிவது உண்மையல்லவா? அவ்வித அநித்தியமான உடலைப் போற்றுவதற்காக என்றும் அழியாத பழியைச் சுமப்பது நியாயமா?" என்று பல நீதிகளைப் புகன்றார். அவைகளில் ஒன்றுவது அவன் கோபத்தைச் சாந்தப்படுத்தவில்லை. அதனால் அவன் மறுபடியும் அவளைக் கொல்லத் தொடங்கினான். வசுதேவர் மறுபடியும் அவனைத் துதித்து, " மைத்துன, உன் சகோதரியால் உனக்கு மரணமில்லை என்று நிச்சயமாகத் தெரிந்தும், அவளைக் கொல்லுவதால் நீ அடையும் பயன் யாது? உனக்கு விருப்பமாயின், அவள் வயிற்றிற் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் பிறந்தவுடனே உன்னிடத்தில் ஒப்புவித்து விடுகிறேன். அவைகளை உனதிஷ்டப்படி நடத்துவதில் யாதொரு தடையுமில்லை" என்றனர்.

உடனே கம்ஸனுக்குக் கோபம் தணிந்தது. வசுதேவர் சத்தியசீலர் என்பதை உணர்ந்திருந்த

கம்ஸன், அவர் வார்த்தையை உறுதியாகக்கொண்டு தேவகியை வெட்டாதொழிந்தனன். வசுதேவர் தமது அரண்மனையை யடைந்து தேவகியோடு வாழ்ந்துவருங்கால், அவர் இன்னும் அனேக மனைவியரையும் மணந்து, அவர்களோடு பூக்கொய்தல் புனல் விளையாடல் முதலியன செய்து இன்புற்றிருந்தார்.

அப்போது தேவகி கர்ப்பமடைந்து ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். உடனே வசுதேவர் அக்குழந்தையைக் கரத்திலேந்தித் தாம் கம்ஸனுக்களித்த வாக்குப் பொய்யாகாத வண்ணம் அவனிடத்தில் அதை ஒப்புவித்தார். அவன் அக் குழந்தையின் அழகிய முகத்தைக் கண்டு மனமிரங்கி, ஆகாயவாணி தெரிவித்தபடி அக்குழந்தையால் தனக்கு யாதொரு தீங்கும் நேரிடாதெனக் கருதி, அதைக் கொல்லாமல் வசுதேவரிடத்தில் திரும்பக் கொடுத்து விட்டான்.

இஃது இங்ஙனமாக, ஒரு நாள் நாரதர் கம்ஸனுடைய அரண்மனைக்கு எழுந்தருளினர். கம்ஸன், அவரைக் கண்டவுடன் பணிந்து அவருக்குப் பல்வகை உபசாரங்கள் செய்து துதித்தனன். அவர் கம்ஸனை நோக்கி “வீர, உன்னைப் போன்ற தாராள மனமுடைய அரசர் மிகச் சிலர்.

இப்போது உன்னைச் சூழ்ந்த சுற்றமெனப் படுபவ ராகிய யாதவர் யாவரும் சாதாரண மானிடரல்லர். தேவர்கள் ஒரு காரணமாக இவ்வுருக் கொண் டிருக்கின்றனர். நீ முற்பிறவியில் காலநேமி என் னும் அசுரனுயிருந்தாய்; உன் சுற்றத்தார் அசுரர். அவர்களைச் ஸம்ஹாரஞ் செய்வதாக விஷ்ணு பிர திக்ஞை செய்திருக்கிறார். நீ இதை அறியாமல் உன் பழைய விரோதிகளை உற்றாரெனவும், உன் உறவினரைப் பகைவரெனவும் நினைந்திருக்கிறு யல்லவா? அது உன்னுடைய குற்றமன்று; உன் காலவித்தியாசம். மேலும், தேவகியினது எட்டாம் குழந்தையால் உனக்கு மரணம் சம்பவிக்குமென்று ஆகாயத்தினின்று எழுந்த திருவாக்கின் கருத்தை நீ முற்றும் உணரவில்லை. எட்டாவது குழந்தை என்றால், ஒன்று முதல் தான் எண்ணிவர வேண் டும் என்ற நியதி இல்லை. ஆகாயவாணியின் கருத்தும் அதுதான் என்று சொல்ல முடியாது. காலத்தை அனுசரித்துப் பார்க்குங்கால் எந்தக் குழந்தையாலும் உனக்கு மரணம் நேரலாம். ஆகையால் எக்காரியத்தையும் தொடக்கத்திலேயே ஆராய்ந்து செய்வது தான் அறிவுடைமை" என் றுரைத்து, அவனுடைய மனம் பாவச் செயல்களி லேயே முற்றிலும் புகும்படி போதித்துச் சென் றனர்.

உடனே கம்ஸன், யாதவர் யாவரையும் வெறுத்து வருத்தித் தன்தந்தையையும் இகழ்ந்து, உக்கிரசேன இராஜ்யம் என்னும் பெயரை எடுத்து விட்டு, அதற்குத் தன் பெயரை வைத்ததோடு தேவகி வசுதேவர் இருவரையும் விலங்கிட்டுச் சிறையிலடைத்தும் அதுவரையில் அவர்களுக்குப் பிறந்திருந்த ஆறு குழந்தைகளையும் வாளுக்கிரை யாக்கினன். அப்போது தான் அவன் அதுவரை யில் பிழைத்ததாக நினைந்தான். மகா பாவியாகிய கம்ஸன், அந்தஆறு குழந்தைகளையும் வதைத்தத னல் தன் ஆயுள் விருத்தி யடைந்ததாக நினைந் தானேயன்றி, தன் ஆயுளை எண் கூருக்கி அவற் றில் அறுகூற்றை அதஞ் செய்தானென்பதை உணரவில்லை.

சிறந்த பாகவத சிகாமணியாகிய வசுதேவர், கம்ஸனது கொடுமைக்கு அஞ்சித் தமது மற்ற மனைவியரைக் கோகுலத்தில் மறைத்து வைத்து, தேவகியுடன் சிறையிலிருந்து வருந்தினர். தேவகி மறுபடியும் ஏழாவது தடவை கருவுற்றனள். அதுவே விஷ்ணுவின் ஒரு கலை கொண்ட ஆதி சேஷன். அப்போது பகவான் மாயையை அழைத்து, “பெண்ணே, இப்போது தேவகியின் வயிற்றில் நமது கலையோடு உற்பவித்த கருவை நந்தகோபன் அரண்மனையில் வசுதேவரால்

மறைத்து வைக்கப்பட்ட அவர் மனைவிகளில் ஒருத்தியாகிய உரோகிணியின் வயிற்றில் சேர்ப்பித்துவிட்டு, நீயும் நந்தகோபன் மனைவியாகிய யசோதைக்குப் பெண்ணாகப் பிறக்கவேண்டும். நாம் தேவகியின் உதரத்தில் அவதாரஞ் செய்வோம்" என்று கூறியருளினர்.

மாயை பகவானது ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு அக்கட்டளையை நிறைவேற்றினள். உடனே தேவகியின் ஏழாவது கருப்பம் அழிந்ததெனும் சொல் ஊர்முழுதும் பரவிற்று. அதைச் செவியுற்ற யாவரும் வருந்தினர். பலர், அதற்குக் காரணம் கம்ஸனுடைய கொடுமையேயன்றி வேறன்று என அவனை முன்னிலும் அதிகமாகத் தூஷித்தனர். அப்பால் பகவான், தாம் திரு அவதாரஞ் செய்யும் நிமித்தம் தம்மை எப்போதும் தியானித்துக்கொண்டிருந்த வசுதேவரது ஹிருதய கமலத்தில் அமர்ந்தார். அந்த ஜோதியை அவர் தமது மனத்தினால் தேவகியின் வயிற்றில் அமரச்செய்தனர். ஜகதீசனே அவள் வயிற்றில் அவதரித்தமையால் அத்தம்பதிகள் இருவருக்கும் அடங்காத மகிழ்ச்சியும் பேரானந்தமும் உதித்தன. தேவகியின் தேகம் பூரித்துப் புதிய காந்தியுற்றது. அதனால் கம்ஸன், அக்கருவே தன்னைக் கொல்லப் பிறக்கும் சிசுவென நிச்சயித்து, வெறி

கொண்டவன்போல் தேவகியைக் கொல்லக் கிட்டினன். எங்கும் நிறைந்த பரம்பொருளைப் பற்றினோர்க்கும் ஒருவரால் தீங்கு நேரிடுமோ? கம்ஸனுக்கு இருந்தாற்போலிருந்து கோபமடங்கிற்று. அப்போது கருப்பவதியைக் கொல்வது நியாயமன்று என்ற நீதி அவன் மனதிலுதித்தது. அதனால் அவளைக் கொல்லாது அப்பாற் சென்றனன். ஆயினும், அச்சமிகுதியால் அவ்விருவரையும் முன்னிலும் பதின்மடங்கு கடுங்காவலிலிட்டுச் சதா அவர்கள்மீது கோபமுற்றான். அத்தம்பதிகள் இருவரும், பரந்தாமன் எப்போது தமது துன்பத்தை நீக்கியருளுவாரென்று அல்லும் பகலும் அவர் திருநாமங்களைச் சிந்தித்திருந்தனர். அவர்களுடைய மனதை மகிழ்விக்கவும், பூமியின் பாரத்தை ஒழிக்கவும் திருவுளங்கொண்ட வைகுண்டநாதர், ரோகணிநாளில் நான்கு திருப்புயங்களும் பஞ்சாயுதங்களும் கவுஸ்துவமணியும் பிரகாசிக்க, நீருண்ட மேகம்போலத் திருமேனி விளங்க, இடையில் பீதாம்பரம் இலங்க, தாமரைக் கண்களில் அருள் சுரக்க, தேககாந்தி எங்கும் பரக்க, தேவகிக்கும் வசுதேவருக்கும் அச்சிறைச்சாலையில் ஏகாந்தமாய் நடு இரவில் காட்சி கொடுத்தருளினார்.

அவ்விருவரும் அத்திவ்யமூர்த்தியின் ஸ்வரூபத்தைக் கண்டு பிரமித்து, ஆர்வம் அதிகரிக்க

ஆனந்தக்கண்ணீர் பெருக வினை கருக அவரை நாவாரப் போற்றித் துதித்தனர். அப்போது கடல்வண்ணர் அவ்விருவர்மீதும் அருட்கண் சாத்தி வசுதேவரைநோக்கி, “உத்தம, என்னைஇக் கணமே ஏந்திச்சென்று கோகுலத்தில் நந்தகோபன் மனைவியின் பக்கலில் கிடத்தி, அவள் இப்போது ஈன்ற குழந்தையை இங்கே கொண்டு வருக” என்று திருவாய் மலர்ந்து அக்கணமே ஓர் இளங்குழந்தையாய் விளங்கினர். வசுதேவர் தம் முன்னர் விளங்கிய திருவுருவம் திடீரெனமறைந்ததைக்கண்டு, கண்பெற்றிழந்த பிறவிக் குருடன் போல் கலக்கமுற்றுத் தேறும் வகையறியாது தத்தளிக்குங்கால், அப்பெருமான் திருவருளே ஊன்றுகோலாகக்கொண்டு தேறி, தமக்கிடப்பட்ட கட்டளையைச் செய்யத் துணிந்தனர். ஆனால் அவர் காலில் விலங்குகள் இடப்பட்டிருந்தன. கதவுகளும் பூட்டப்பட்டிருந்தன. கடுங்காவலும் போடப்பட்டிருந்தது. அதனால், அவற்றினின்று நீங்கும் வகை தோன்றாது மனம் திகைத்தனர். அப்போது, பகவானருளால் கால்விலங்குகள் விடுபட்டன. கதவுகளும் படீரெனத் திறந்துகொண்டன. எமதூதர்போன்ற காவலாளரும் நித்திரை மிகுதியால் பிணமெனக் கிடந்தனர். வசுதேவர் தமக்கு வழிவிடுத்த திருவருளைப் பன்முறை சிந்

த்து, தமது இருபுயங்களும் பூரிக்க அக்குழந்தையைக் கைக்கொண்டு, அதைத் தமது ஹிருதய கமலத்தில் இருத்துபவர்போல் மார்போடணைத்துப் பரவசமுற்று, காவற்கூடத்தைக் கடந்து யாதொரு இடையூறுமின்றி அரண்மனையினின்று வெளியே வந்தனர். அப்போது இருள்மிகுந்த யாமமாகையால் அவர் கண்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. மேகங்கள், பகவான் அவதரித்தருளினரெனப் பூரித்துப் புஷ்பங்களை வருஷிப்பனபோல் சிறுதுளிகளைச் சிந்தின. வசுதேவர், பகவான் இட்டதே வழியெனத் துணிந்து, அந்த யாமத்தில் கோகுலத்துக்குப் போகும்வழியை மனதில் நிதானித்துக்கொண்டு அத்திக்கு நோக்கிச் சென்றனர். போகும்வழியில் யமுனநதியைக் கடக்கவேண்டியிருந்தது. அவர் யமுனையிலிறங்கும்போது அதில் ஜலம் கடக்கக்கூடிய அளவாக இருந்தது. அதைக் கடக்கத் தொடங்கினபின், அந்த யமுனை பகவானது பாததாமரைகளைப் பரிசித்துப் புனிதமடைய விரும்பியதுபோல் பெருகத் தொடங்கிற்று. வசுதேவர், தமது கையிலிருந்த சர்வேஸ்வரனைக் குழந்தையென நினைந்து, அதனிடத்து ஏற்பட்ட தமது அன்பின் மிகுதியால் அதை மிகவும் ஜாக்கிரதையாகக் கையிலேந்திச் செல்ல, பிரவாகம் குறையத் தலைப்பட்டது. அத

ஞல் வசுதேவர் கவலையின்றி ஆற்றைக் கடந்து கோகுலத்தை அடைந்தார். அங்கு நந்தகோபன் அரண்மனையைக்கிட்டி உள்ளே புகுந்து பார்க்கையில், யாவரும் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். யசோதையும் கருவுயிர்த்த களைப்பால் இன்னகுழந்தை என்பதுகூட அறியாதவளாய் அயர்ந்து நித்திரை செய்தனள். அதைக் கண்ட வசுதேவர் தமது கரத்திலேந்தியகண்ணனை அவள் பக்கத்தில் வளர்த்தி, தமது மகிழ்ச்சியையும் அவ்விடத்திலேயே விடுத்து, அவள் பக்கத்திலிருந்த மாயையைக் கைக்கொண்டு துக்கசாகரத்திலாழ்ந்து, அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு ஒருவரும் அறியாமல் திரும்பிவந்து காவற்கூடத்தை அடைந்தார். கதவுகளெல்லாம் தாமே பூட்டிக் கொண்டன. விலங்கும் அவரது காலைத் தளைவுற்றது. பரமாத்மாவை விட்டு மாயையைக் கைக் கொண்ட அக்கணமே பரமபாகவதராகிய வசுதேவர்க்கும் இன்பம் நீங்கித் துன்பம் ஓங்கிற்று.

வசுதேவர் அப்பெண்மகவைப் பூமியிற் கிடத்தியவுடனே அக்குழந்தை அண்டமும் வெடிபடும்படி அலறிக் கத்திற்று. அந்த கூக்குரலால் அயர்ந்து நித்திரை செய்த காவலாளர் யாவரும் திடுக்கிட்டு விழித்து, மிகவும் கருத்தாகக் காவல் பூண்டவர் போல் விரைவாக ஓடிக் கம்ஸனிடத்

தில் அதைத் தெரிவித்தார்கள். எட்டாவது குழந்தையால் தனக்கு மரணம் உண்டாகும் என்பதை நினைக்குந் தோறும் உண்டான கவலை மிகுதியால் பொய்யுறக்கங் கொண்டிருந்த கம்ஸனது செவியில் குழந்தை என்ற சொல்பட்டவளவில், அவன் பதறி எழுந்து அக்குழந்தையை மிகவும் ஜாக்கிரதையாக எடுத்துவரச் செய்தனன். தேவகி கம்ஸனை வணங்கி, "அண்ணா, இது பெண் குழந்தையாகையால் இதைக் கொல்வதிற் பயன் யாதுமில்லை. இது ஜீவனோடு வாழுமாயின் தங்கள் புத்திரனுக்கே மணம்புரிவிக்கலாம்" என்றாள்.

கம்ஸன் அவள் வார்த்தைகளைக் காதிற்கொள்ளாது அவள் கையிலிருந்த குழந்தையைச் சடக்கெனப் பிடுங்கி, அதன் காலைப்பற்றித் தலையை பளிக்குப் பாறையில் வீசியடிக்க ஓங்கினான். அக்குழந்தையாகிய மாயை அவன் கையினின்று நழுவி, அவன்புயங்கள் வருந்த விசைத்துதைத்து ஆகாயத்திற் சென்று, "கொலைகாரா, உனக்கு நமன் நான் அன்று. அவன் மற்றோரிடத்தில் வளர்கின்றனன். வீணாக என்னைக் கொல்வதால் நீ அடையும் பயனென்ன? மேலும் என்னைக் கொல்ல உன்னாலாகுமா? நீ என் வசப்பட்டவன் என்பதை அறியவில்லை போலும். அன்றியும், தெய்வ சங்கற்பத்தை மாற்ற ஞானிகளாலும் ஆகா

தெனில் மனிதரிற் பதராகிய நீ மாற்றுவது எப்படி?" என்று பரிகசித்துக் கூறி மறைந்தது.

அதைக் கேட்டவுடன் கம்ஸன் துக்கித்து, தன் முயற்சிகள் எல்லாம் பாழாயின என்று நினைந்து மனம் புழுங்கி, தேவகி வசுதேவர்களை வீணுக வருத்தியதற்காகப் பரிதாபப்பட்டு, அவர்களைச் சிறையினின்று விடுவித்து இத வார்த்தைகள் சொல்லிப் போயினன்.

பிறகு கம்ஸன் தன் மெல்லணையிற் படுத்தான். நித்திரை வரவில்லை. புண்ணில் ஊசியாற் குத்தினதுபோல் மாயை உரைத்தவை அவனுக்கு இன்னும் மிகுந்த திகிலை உண்டுபண்ணின. பிராணபயம் அதிகரிக்க அதிகரிக்க, அவன் மனம் சமாதானம் அடையாமல் மத்தாலுடைந்த தயிர்போலாயிற்று. அதனுல், அவன் தன் மனம் போல் இருண்ட இரவு நீங்கி, எப்போது பொழுது விடியுமென ஏங்கினுன்.

மறுநாள் காலையில் கம்ஸன், தன் அமைச்சரை அழைத்து மாயை தெரிவித்த விஷயத்தை அவர்க் கறிவித்து, அதை நீக்குவதற்குரிய உபாயத்தைக் கண்டு பிடிக்குமாறு உத்திரவிட்டான். அவர்கள் கம்ஸனுக்கு ஏற்ற மந்திரிகளாகையால், அன்றுமுதல் சிசுக்களைக் கொல்லவேண்டுமென்று

புகன்றனர். கம்ஸன் அவர்களுடைய யுக்தியை வியந்து அந்தக்ஷணமே பூதனை முதலான அசுரர்களை ஏவி, உலகிலுள்ள குழந்தைகள் எல்லாவற்றையும் வஞ்சித்துக் கொல்லச் செய்தனன்.

இஃது இவ்வாறாக, கோகுலத்தில் நந்தகோபன் அரண்மனையில் யசோதையின் பக்கத்தில் வசுதேவரால் இடப்பட்ட குழந்தையை யசோதை விழித்துப் பார்த்து, பேரானந்த வாரியில் மூழ்கி நந்தகோபனுக்குத் தெரிவித்தாள். அவனும் முன்செய்த புண்ணியத்தின் பயனால் குழந்தையைக் கண்ணுற்று, தனது நல்வினையே அவ்வுருக்கொண்டதென மனதுட்கொண்டு, ஆனந்தபரவசனாய் அந்தணர்களை அழைத்துப் பணிந்து, அவர்கள் மனம் வெறுக்குமாறு கோதான பூதானங்களைச் செய்து, பகவான் ஜனனத்தைச் சிறப்பித்துக் கொண்டாடினான். கோகுலத்தி லுதித்த பசுக்களுங்கூட மகிழ்ச்சியின் மிகுதியால் முன்னிலும் பன்மடங்கு பால்சுரந்தன வெனில், மானிடரின்உவகையை அளவிட்டுரைத்தல் கூடுமோ? ஒவ்வொருவரும், தமது மகிழ்ச்சியின் பெருக்கத்தால் வீடுகளையும் தெருக்களையும் அலங்கரித்து, பகவான் ஜனனத்தைக் கொண்டாடி, அன்பால் அவருக்கு ஆட்பட்டுத் தம்மை மறந்து, அப்பெருமானைத் தமது கண்ணாரக் கண்டு வினையை ஒழித்

தமையால் கோகுல முழுதும் வைகுண்டமெனவே விளங்கிற்று. நந்தகோபன், அக்குழந்தையைத் தனது இருவினையும் ஒழிக்கப் பிறந்த ஈசனெனக் கொண்டு, அதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து, அதற்குக்கண்ணனெனப் பெயரிட்டு மகிழ்ந்தனன். பகவான் அவதரிப்பதற்கு முன்னமேயே உரோகிணி வயிற்றிலிடப்பட்ட அவர் அம்சமாகிய அனந்தனை அவள் நல்ல முகூர்த்தத்தில் ஓர் ஆண்மகவாக ஈன்று, நந்தகோபனுல்வளர்க்கப் படும்படி விடுத்தனள். நந்தகோபன் அக்குழந்தைக்கு இராமனெனப் பெயரிட்டுக் கண்ணபிரானோடு வளர்த்து வந்தனன். அவ்விரு குழந்தைகளும் சகோதரராகையால் ஒன்றுகூடி, ஆயர் வீடுகளிலுள்ளநெய் பால் தயிர் முதலியவற்றைத் திருடியுண்டு திருவிளையாடல் புரிந்தனர்.

கம்ஸனுல் ஏவப்பட்ட பூதனை, நந்தகோபன் அரண்மனையை அடைந்து, அங்குற்ற குழந்தையாகிய கண்ணபிரானை எடுத்து விஷப்பாலூட்டினள். அதை அறிந்த பரந்தாமன் அப்பாலை அமுதமெனக்கொண்டு உண்ணும்போது அப்பாலோடு அவளுயிரையும் உண்டருளினர். பின்னும் சக்கரமாகவும் மருத மரங்களாகவும் தோன்றிய அசுரர்களையும் குழந்தைப்பருவ விளையாட்டால் கொன்றனர்.

இவ்வாறு அசுரர்களால் தன் கண்போன்ற கண்ணனுக்கு நேர்ந்த இடையூறுகளை அறிந்த நந்தகோபன், அவரிடத்துள்ள புத்திர வாஞ்சையால் அவரது மகிமையறியாது, அவருக்கு நேரும் இடையூற்றை ஒழிப்பவன்போல் கோகுலத்தை விட்டுப் பிருந்தாவனத்தில் குடிபுகுந்தனன். அவ்விடத்தில் பகவான் கோபாலர்களோடு பசுக்களை மேய்த்து விளையாடுவது வழக்கம். அப்போது அவர், கன்ருகவும் கொக்காகவும் மலைப் பாம்பாகவும் தோன்றிய அசுரரைக் கொன்றனர்.

அவர் ஐந்தாம் வயதுக்குள் செய்தருளிய அற்புதத் திருவிளையாடலைக் கண்ணுற்ற பிரமதேவர் களித்து, பின்னும் அவருடைய அரிய திருவிளையாடல்களைக் கண்டானந்திக்கும் பொருட்டு யமுனை தீரத்தில் மேய்ந்துகொண்டிருந்த அனேக ஆன் கன்றுகளையும் அவற்றை மேய்த்த இடைச் சிறுவர்களையும் ஒருவரும் அறியாதபடி மறைத்தனர். அதையறிந்த கிருஷ்ண பகவான், அக்கன்றுகளாகவும் அச்சிறுவர்களாகவும் உருக்கொண்டருளினர்.

வாசுதேவர், இவ்வாறு பல கன்றுகளாகவும் சிறுவர்களாகவும் அவரவர் வீடுகளிலும், யமுனை தீரத்திலும் விளங்குவதைக் கண்ட பிரமதேவர், வியந்து தாம் கவர்ந்து சென்ற சிறுவர்களையும்

கன்றுகளையும் வெளிப்படுத்தியருளி, அவருடைய ஒப்பற்ற ஆற்றலைப் புகழ்ந்து துதித்தனர்.

இத்தகைய நாட்களில் ஒரு நாள், பலராமரும் கிருஷ்ண பகவானும் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது தானுகாசுரன் என்னும் அசுரன் கழுதையாக அங்கு வர, அவனை வதைத்தனர். பின்னர், வெகு காலமாகத் தனது விஷ வாடையால் யாவற்றையும் உயிர் துறக்கச் செய்த காளியன் என்னும் அரவைக்கொன்று, பலராமரையும் ஆயர் குமாரரையும் மகிழ்வித்தனர். அன்றியும், பட்ட மரங்களும் தளிர்க்கும்படி புல்லாங்குழல்ஊதியும், கோவியர் துகிலெடுத்தொளித்தும் பசியான் மெலிந்த கோபாலர்க்கு வேள்வி மங்கையரால் உணவளிப்பித்தும், மழையால் வருந்திய பசுக் கூட்டங்களைக் கோவர்த்தன கிரியைக் குடையாகக்கொண்டு காப்பாற்றியும், நந்தகோபனைஎடுத்துச் சென்ற அசுரனைக்கொன்று அவனை விடுவித்தும் திருவிளையாடல்கள் புரிந்தனர்.

பின்பு கண்ணபிரான், தம்மிடத்தன்பு பூண்ட கோவியரை மணந்து சங்கசூடனைக்கொன்று காளையுருவெடுத்துக் கோவியரை வருத்திய அசுரன் ஒருவனை மாய்த்தார்.

இவ்வாறு கண்ணபிரான் பலராமரோடு பல திருவிளையாடல்கள் புரிந்து வருங்கால், நாரத

முனிவர் கம்ஸனை யடைந்து, பகவான் தேவகி வயிற்றில் அவதரித்து நந்தகோபன் மனையில் கண்ணபிரானுக வளர்வதையும், அவர் அம்சமே பலராமராக உரோகிணி வயிற்றில் அவதரித்து அக்கண்ணபிரானுக்குத் துணையுற்றிருப்பதையும் அறிவித்து, அப்பாதகனுல் ஏவப்பட்ட அசுரர் யாவரும் அவரால் மாய்க்கப்பட்டன ரென்பதை யும் அவனுக்குத் தெரிவித்தனர். அதைக்கேட்ட கம்ஸன் தனது இரு கண்களும் சிவப்பேறக் கோதித்து, வாளை உருவிக்கொண்டு வசுதேவரைக் கொல்லச் சென்றனன். அப்போது நாரதர் அவ னைத் தடுத்து, வீணுக அவரைக்கொன்று பழிக் குப் பாத்திரனுவதிலும் கண்ணபிரானையும் பல ராமரையும் கொல்வதே புகழுடையதென அவ னுக்கு இனிமையாகக் கூறி அவனுடைய கோபத் தைச் சாந்தப் படுத்திச் சென்றனர்.

கம்ஸன் இராமகிருஷ்ணர்களைக் கொல்வதற் குப் பின்னும் அநேக அசுரரை ஏவ, அவர்களும் வதைக்கப்பட்டனர். இவ்வாறு அவன் செய்த உபாயங்களெல்லாம் பயனற்றுப் போயினமை யால், ஒரு யாகம் செய்யத் தீர்மானித்து அவன் அரசாட்சிக் குட்பட்ட யாவர்க்கும் திருமுகம் அனுப்பும்போது நந்தகோபனுக்கும் தெரிவித்து, அவனை அவசியம் அந்த யாகத்துக்கு வந்து சேரும்படியாகவும் அறிவித்தான்.

இதை அறிந்த கண்ணபிரான், கம்ஸனைக் கொல்வதற்கு முன் அவனைச் சூழ்ந்த அசுரர்களை வதைக்க வேண்டுமென்ற தம் எண்ணத்தை நிறைவேற்றி விட்டபடியால், நந்தகோபனை அழைத்துத் தமது அவதாரத்தின் நோக்கத்தைத் தெரிவித்து, கம்ஸனைக் கொல்வதற்குரிய காலம் கிட்டியதையும் உரைத்து, கம்ஸன் அறிவித்ததே காரணமாகக் கொண்டு நந்தகோபனோடும் பலராமரோடும் மதுராபுரிக்கு எழுந்தருளினார். அங்குக் கிருஷ்ணபகவான், கம்ஸனது வஸ்திரத்தை வெளுக்கும் கர்வத்தால் தம்மையும் பலராமரையும் இகழ்ந்த ஒரு வண்ணானைக் கொன்று, தம்மையும் பலராமரையும் பூஜித்த சுதர்மா என்னும் பூவாணிகனைப் புகழ்ந்து வரமளித்தனர்.

இவ்வாறு இரண்டொரு நாள் அப்பட்டணத்தில் திருவிளையாடல் புரிந்த பின்பு, வாசுதேவர்கள் இருவரும் கம்ஸனுடைய அரண்மனையை நோக்கிச் செல்லுங்கால், அவனுக்கு வழக்கமாகச் சந்தனம் எடுத்துச் செல்லும் கூனியைச் சந்தித்தனர். அவள் தான் எடுத்துச் சென்ற சந்தனத்தை உள்ளன்புடன் அவர்களுக்கு அர்ப்பணஞ் செய்தாள். அவ்விருவரும் அப்பரிமள மிகுந்த சந்தனத்தைப் பூசி மகிழ்ந்த பின், கண்ணபிரான் அவள் கூனை நிவர்த்தித்தருளினர். பிறகு அவர் யாக

சாலைக்குட் புகுந்து, எவரும் எடுப்பதற் கரிதாக அங்கு வைக்கப்பட்டிருந்த பெரிய வில்லை விளையாட்டாகக் கைக்கொண்டு அதை முறித்தெறிந்தனர். அதைக் கண்டு அங்குற்ற வீரர் யாவரும் பற்பல ஆயுதங்களைக் கொண்டு போர்புரியத் தொடங்கினர். அப்போது பலராமரும் கண்ணபிரானும் முறிந்த வில்லின் ஒவ்வொரு துண்டையும் கைக் கொண்டு அவ்வீரர்கள் யாவரையும் மடித்தனர்.

இதனையறிந்த கம்ஸன் மனம் பதைத்தான். அப்போது அவனுக்கு அனேக துர் நிமித்தங்கள் தோன்றின. க்ஷணத்துக்கு க்ஷணம் அவனுக்கு அச்சம் அதிகரித்தது. ஆயினும் பொங்கியகோபத்தால் தன் கேட்டை அறியாமல், சாணூரன் முஷ்டிகன் என்னும் இரண்டு மல்யுத்தம் புரியும் வீரர்களை அழைத்து, மறுநாட் காலையில் மற்போருக்கு ஆயத்தமாகும்படி கட்டளை யிட்டனன். அப்படியே மறுநாட் காலையில் அவர்கள் தயாராக மல்யுத்த சாலையில் வந்து நின்றார்கள். கம்ஸன் தனது காலத்தை யுணர்ந்து காலனை அழைப்பவன்போல், இராம கிருஷ்ணர்களை வரவழைத்தான். அவர்கள் வரும்போது அரண்மனை வாயிலில் அவர்களை குவலயாபீடமென்னும் யானை எதிர்க்க, கண்ணபிரான் அதனைக் கிழித்

தெறிந்து அதன் நீண்ட கொம்புகளோடு மல் யுத்த சாலையிற் புகுந்தார். கண்ணனைக் காணுத போதே திகிலுற்றிருந்த கம்ஸன், அன்று அவ ரைக் கண்டவுடன் சிங்கத்தைக் கண்ட யானையாயி ஞன். அப்போது பலராமர் முஷ்டிகனேடும் கிருஷ்ணர் சாணூரனேடும் எதிர்த்து, யாவரும் கண்டதிசயிக்கும்படி மல்யுத்தம் புரிந்து, இரண்டு புலிகள் இரண்டு காட்டுப் பசுக்களை வாயிற் கவ்விச் செல்வனபோல், இருவரும் அவ்விரு மல்லர்களை யும் இறுகப் பிடித்துத் துவைத்து வதைத்து வெளிப்பட்டனர். அங்கிருந்தோர் யாவரும் அவ் விருவரையும் புகழ்ந்தார்கள். கம்ஸனே பொருமை மிகுந்து தன் ஏவலாளரை அனுப்பி, வசுதேவரது புத்திரர்களைப் பட்டணத்தை விட்டுத் துரத்தவும், நந்தகோபனைச் சிறைப்படுத்தவும், தேவகி வசு தேவர் உக்கிரசேனர் ஆகிய மூவரையும் கொல் லும்படியும் கட்டளையிட்டான். அதைக் கேள்வி யுற்ற கண்ணபிரான் வெகுண்டு பலராமரோடு ஆகாயத்தில்தாவிக் கம்ஸனுடையசிம்மாசனத்திற் குதித்தார். கம்ஸன் தனக்கு எமன் வந்துவிட்டா னென்பதை உணர்ந்து, சிம்மாசனத்தை விட்டுக் குதித்து ஆயுதபாணியாக எதிர்த்தான். இச்சை யளவில் எக்காரியத்தையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல கண்ணபிரான், அவன் ஆயுதங்களைச்

சின்னாபின்னப்படுத்தி, அவன் தலைமயிரைப் பிடித் திழுத்து அடித்துக்கொன்றார். அதன் பிறகும் அவருக்குக் கோபம் அடங்காமல் அவனை அந்த யுத்தகளம் முழுவதும் இழுத்தெறிந்தார். அதைக் கண்ட அவன் சகோதரர்கள் உடல் பதைத்து வெகுண்டு கண்ணபிரானை எதிர்க்க, பலராமர் தமது ஆயுதமாகிய கலப்பையால் அவர்களை வளைத்து ஓரிடத்திற் சேர்த்து உலக்கையால் அடித் துக் கொன்றனர்.

பின்பு இராம கிருஷ்ணர்கள் இருவரும், தமது தாய் தந்தையராகிய தேவகி வசுதேவர் இரு வரையும் அடைந்து, அவர்களைச் சிறையினின்று விடுவித்து வணங்கி நின்றனர். அவ்விருவரும் தமது திவ்ய குழந்தைகளைத் தழுவி உச்சிமோந்து தேகம் பரவசமுற்றனர்.

கண்ணபிரான் நந்தகோபனையும் யசோதை யையும் அழைத்து, அவர்கள் தம்மையும் பலரா மரையும் வளர்த்ததற்கு அவர்களுக்குப் பலராம ரோடு வந்தனமளித்து,வேண்டியபொருளைஉதவித் தமது பிரிவால் வருந்தாவண்ணம் அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களது இருப்பிடத்துக் கேகச் செய்தனர்.

வசுதேவர் தமது மைந்தர்களிருவருக்கும் உபநயனம் செய்வித்து, முறைப்படி சாந்தீப முனி

வரிடம் கல்விகற்குமாறு அனுப்பினர். அவ்விருவரும் அறுபத்து நான்கு நாட்களில் அறுபத்து நான்கு கலைகளையும் கற்றுணர்ந்தார்கள். இவ்வாறு கற்கத் தக்கன யாவையும் கற்றுணர்ந்து, அவ்விருவரும் குருகுலவாசத்தினின்று தமதிருப்பிடத்துக் கேகுங்கால், தமது குருவை அடுத்து அவருக்குத் தக்ஷிணையாகக் கொடுக்கத் தக்கது யாதெனவினவினார்கள். அம்முனிவர் முற்றத்துறந்த துறவியாயினும், அவருடைய மனையாளின் விருப்பத்தின்படி இறந்துபட்ட தமது குமாரனைத் திரும்ப அழைத்துக் கொடுப்பதே சிறந்த குருதக்ஷிணையென்று கூறினர். வாசுதேவர்கள் இருவரும் உடனே கடலிற் புகுந்து, அம்முனிவரது புத்திரனைக் கொன்ற அசுரனைக் கொன்று, எமனிடத்திலிருந்த அந்த உயிரைப் பெற்று, அப்புத்திரனைக் கொணர்ந்து குருவுக்குத்தக்ஷிணையாகக் கொடுத்து, அவரிடத்தில் விடைபெற்று மதுராபுரியை அடைந்தார்கள்.

முன்பு கண்ணபிரானையும் பலராமரையும் விட்டுப் பிரிந்த நந்தகோபன் முதலானோர், அக்குமாரரது பிரிவால் உண்டாகிய துயரத்தை நீக்கும் வகையறியாது, வருந்துவதை உணர்ந்த கிருஷ்ணபகவான் தமது தமையனாரோடு அங்கெழுந்தருளி, பல மாதங்கள் அங்கேயே தங்கியிருந்து, அவர்களை ஆற்றுவித்து அவ்விடத்தை

விட்டு நீங்கும்போது, உத்தவன் என்னும் தமது மந்திரியை அங்கிருத்தி அவர்களைத் தேற்றச் செய்தனர். பின்பு கண்ணபிரான் மதுரையை அடைந்து, கூனியின் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்து, தமது அத்தை குமாரர்களாகிய பாண்டவர்கள் தந்தையை இழந்து வருந்துவதைக் கேள்வியுற்று, அவர்களுக் குதவியாய் அக்குரூரனை அனுப்பினர்.

கம்ஸன் இறந்ததைக் கேட்டுப் பலராம கிருஷ்ணர்களிடத்தில் பொருமையுற்ற அசுரர்களிற் சிறந்தவனாகிய சராசந்தன் அவ்விருவரையும் எதிர்க்க, அவர்கள் அவனோடு பதினேழு தடவை யுத்தஞ்செய்து,பதினேழு தடவைகளிலும் அவனை ஜயித்து, அவனால் சில காரியங்களாக வேண்டியிருந்தமையால் உயிர்கொடுத்துத் துரத்தினர். அதனால் சராசந்தன் மானக்கேடுற்று அவனுடைய தோழனாகிய காலயவனனை யுத்தத்துக்கு அனுப்பினான். கிருஷ்ணபகவான் அவனை முசுகுந்த சக்கரவர்த்தியால் கொல்வித்து, அச்சக்கரவர்த்திக்கு மோக்ஷமளித்து, தாமும் தமது சுற்றத்தாராகிய யாதவர் அனைவரோடும் மதுராபுரியை விட்டுத் துவாரகைக்கு எழுந்தருளினர்.

அங்கு, பலராமர் கண்ணபிரானோடு அரசு செலுத்தி வருங்கால், பலராமர் ரேவதியையும்,

கிருஷ்ணபகவான் குண்டினபுரத் தரசனுன பீஷ்ம மகாராஜனுடைய புத்திரியாகிய ருக்மணியையும் மணம் புரிந்தனர். ருக்மணியைக் கண்ணபிரான் கைக்கொண்டதில் பொருமையுற்ற சிசுபாலன் சராசந்தன் முதலான துஷ்டர்களும் ருக்மணியின் தமையனுன ருக்மியும் எதிர்க்க, பலராமரும் கண்ணபிரானும் அவர்களை யுத்தத்தில் முறியடித் துத் துவாரகையை யடைந்தனர்.

பின்னளில் ருக்மணிதேவி பிரத்யும்னன் என் னும் மன்மத ரூபியான ஓர் ஆண் குழந்தையைப் பெற்ருள். அக்குழந்தையைச் சம்பராசுரன், கிருஷ்ணர் மீது கொண்ட பொருமையால் கடலிலெறிந்து விட்டான். அப்போது அக் குழந்தையை ஒரு மீன் விழுங்கிற்று. பின்பு அக் குழந்தை, பகவானருளால் அம்மீனின் வயிற்றி னின்று வெளிப்பட்டுச் சம்பராசுரனைக் கொன்று, தனது தாய் தந்தையரை அடைந்து அவர்களை மகிழ்வித்தது.

பின்பு கிருஷ்ணபகவான் சத்தியபாமையை மணந்து, அவள் பிதாவைக்கொன்ற சத்தன்வனைச் சங்கரித்தார்; அதன்பின் காளிந்தி முதலான ஐந்து மாதர்களையும் மணம் புரிந்தார். அப்போது பூமி தேவியின் புத்திரனுகிய நரகாசுரன் மன்னுயிர்களை வதைத்து நிகரற்றுத் திரிந்தனன். கிருஷ்ணபக

வான் சத்தியபாமையால் அவனைக் கொல்லு வித்து, அவன் வேண்டுகோளின்படி அவன் பெயர் இன்றும் நிலைத்திருக்குமாறு தீபாவளிப் பண்டிகையை உற்பத்தி செய்தருளினார். ஒரு சமயத்தில் சத்தியபாமை பாரிஜாத புஷ்பத்துக்காகப் பிணங்க, அளகாபுரியிலிருந்த பாரிஜாத விருக்ஷத்தைக் கொணர்ந்து அவள் நந்தவனத்தில் நாட்டினார். பின்பு கண்ணன், தம்மை நெடுநாளாகப் பக்தி செய்துவந்த பதினாறாயிரம் கன்னிகைகளை மணந்து, அவர்கள் ஒவ்வொருவரும் பத்துக் குழந்தைகளை அடையுமாறு அருள் புரிய, அவர்கள் சந்ததியும் விருத்தி யடைந்தது.

இஃது இவ்வாறாக, குண்டினபுரத் தரசனாகிய ருக்மியானவன் தன் குமாரிக்குச் சுயம்வரம் நாட்டினன். இதை அறிந்த பல தேசத்தரசர்களும் அங்குச் சென்றனர். அவர்களில் கண்ணபிரான் புத்திரனாகிய பிரத்யும்னனும், பலராமரது உதவியோடு தனது அம்மான்மகள் சுயம்வரத்துக்குச் சென்றிருந்தான். அப்பெண் சசிதேவி வெளிப்பட்டாற்போலக் கையில் மணமாலையேந்தி, சுயம்வர மண்டபத்தை யடைந்து அவள் தன் மனதுக் குகந்தாரை நோக்குங்கால், பிரத்யும்னனது பெருவனப்பு அவள் மனதைக் கவர்ந்தது. அதனால் அவள் கண்கள், அவளது மனம்

சென்ற விடத்தைத்தேடி அவன் புயத்தில் பதி வுண்டன. அப்போது அவள் உள்ளக் குறிப்பை யுணர்ந்த பிரத்யும்னன், "மகனறிவு தந்தை அறிவு" என்றபடி அம் மாதுசிரோன்மணியைக் கவர்ந்து சென்றனன். தந்தைக்கும் குமாரனுக்கும் இதுவே தொழிலாயிற்றென்பதை அறிந்த ருக்மி, வடவாமுகாக்கினிபோல் கொதித்து அவனோடு போருக்கெழுந்தனன். அப்போது பலராமர் ருக் மியை எதிர்த்துப் போர்புரிந்து, அவனை அப்போ ரில் மாய்த்தனர். பிறகு பிரத்யும்னன் அப்பெண் மணியை மணந்து வாழ்ந்துவருங்கால், அவ னுக்கு அநிருத்தன் என்னும் ஒரு மைந்தன் பிறந் தான். அப்புத்திரன் தக்க பருவம் அடைந்து, பாணாசுரன் புத்திரியாகிய உஷை என்பவளை இர கசியமாக மணம்புரிந்து, அவள் அரண்மனையி லேயே தங்கியிருந்தான். அதை அறிந்த பாணா சுரன் அவனைச் சிறையிலிட்டனன். அப்போது கண்ணபிரான் அவ்வசுரனோடு போர்தொடுத்து, அவனுக்கு உதவிபுரிந்த பரமசிவன் முதலானோ ரது வலிமையை மாற்றி, அவனது ஆயிரந்தோள் களில் நான்கு தோள்கள் தவிர மற்றவை யாவற் றையும் அறுத்துத்தள்ளி, அவன் பிரகலாதர் வமி சத் தோன்றலாதலின் அவனைக் கொல்லாது விடுத்து, அநிருத்தனைச் சிறை மீட்டு வந்தனர்.

ஒருநாள் கண்ணபிரான், மிக்க பலங்கொண்ட ஒரு கோம்பி ஒரு கிணற்றில் கிடப்பதைத் தமது குமாரர்களால் அறிந்து, அதை அக்கிணற்றி னின்று எடுத்தெறிந்தார்; அக்கோம்பி பரந்தாம னது திருமேனியின் பரிச விசேஷத்தால் தேவ ஞகி வானுலகிற் சென்றது. அவ்வற்புதக் காட்சி யைக் கண்ணுற்ற குமாரர்கள், அதன் வரலாற்றைத் தெரிவித் தருளுமாறு தம் தந்தையை வேண்டினர் கள்; அதற்கு அவர், நிருகன் என்னும் அரசன், தான் ஓர் அந்தணனுக்குக் கொடுத்த பசுவை அறி யாமல் மற்ருேர் அந்தணனுக்கும் கொடுக்க, அதனுல் சினந்து சபித்த அவ்வந்தணனது சாபத்திஞல் அவன் அவ்வுருவை யடைந்தான் என்று உரைத்தனர்.

ஓரிளவேனிற் காலத்தில் பலராமர் கோகு லத்தை அடைந்து, நந்தகோபன் முதலாயிஞரை மகிழ்வித்து அங்குச் சிலகாலம் தங்கி இருந்தார். அப்போது ஒரு நாள் அவர் யமுனையில் உல்லாச மாக நீராடுவதற்கு எண்ணி யமுனையைத் தன் னிருப்பிடத்துக்கு அழைத்தார். பலராமர் அந்நதி தமது அழைப்புக் கிணங்காமை கண்டு அதைச் சினந்து தமது கலப்பையால் வார, நதியாகிய யமுனுதேவி வருந்தி அவர் மனதின்படி அவரால் குறிக்கப்பட்ட இடத்துக்குச் சென்று, அவருக்குக்

காணிக்கையாக இரண்டு நீல நிறமான ஆடைக ளளித்து, அவரை நீராட்டி மகிழ்வித்துச் சென்ற னள்.

இவ்வாறு பலராமர் அரசாண்டு வருங்கால், குருநாட்டரசனுன பவுண்டர னென்பவன் விஷ் ணுவின் பஞ்சாயுதங்களையும் தரித்து, தானே வாசுதேவனென விளம்பரம் செய்து ஒரு தூதனை அனுப்பி, "கண்ணபிரான் பஞ்சாயுதங்களையும் நீக்கவேண்டும் அல்லது இப்போதே என்னுடன் யுத்தத்துக்கு வரவேண்டும்" என்று தெரிவித்து வரச் செய்தான். கண்ணபிரான் புன்னகை கொண்டு, அவனுடன் போர்புரிந்து தமது சக்ரா யுதத்தால் அவனை வீழ்த்தினர்.

கண்ணபிரானுடைய குமாரர்களில் சாம்ப வன் என்பவன் ஒருவன். அவன் துரியோத னன் புத்திரியாகிய இலக்ஷணை என்பவளைச் சுயம்வரத்தில் கைக்கொண்டு வரும்போது கௌர வர்களாகிய துரியோதனுதியர் அவனை எதிர்த்தார் கள். அவனுக்குத் துணையாகச் சென்ற பலராமர், கௌரவர்களையும் அவர்களுடைய நகராகிய ஹஸ் தினபுரத்தையும் தமது கலப்பையால் வாரிக் கவிழ்க்க எத்தனிக்கையில், கௌரவர் அவரை வணங்கி வேண்டிக் கொண்டனர். அவர் கோபம் அடங்கிச் சாம்பவனுக்கு இலக்ஷணையை மணம் புரிவித்து அழைத்துச் சென்றனர்.

பாண்டவ சகாயரான கிருஷ்ணபகவான், அக்கினி பகவானது வேண்டுகோளின்படி அர்ச்சுனனால் காண்டவ வனத்தை அக்கினிக்கிரையாக்கி, அவன் சூலை நோயை நீக்கினர். அப்போது அவ்வனத்தில் தீயிலிருந்து அர்ச்சுனனால் காப்பாற்றப்பட்ட மயன், பாண்டவர்களுக்கு இந்திரப்பிரஸ்தத்தில் ஒரு திவ்ய அரண்மனையை நிர்மாணஞ் செய்து கொடுத்தனன். பாண்டவர்கள் அந்நகரில் குடியேறி அவ்வரண்மனையில் வசிக்குங்கால், அவர்களுக்கு இராஜசூயயாகம் செய்யும் விருப்பம் உதித்தது. அப்போது கண்ணபிரான் வீமனால் சராசந்தனைக் கொல்வித்து, அவனால் சிறையிடப்பட்டிருந்த அரசர் யாவரையும் விடுவித்துப் பூமியை மகிழ்வித்தார். பீமனால் சராசந்தன் கொல்லப்பட்டமையால் பாண்டவர்கள் எல்லா அரசர்க்கும் தலைமை பூண்டு, இராஜசூயயாகத்தைப் பூர்த்திசெய்து அது இடையூறின்றி முடியுமாறு காத்தருளிய கண்ணபிரானுக்குத் தருமபுத்திரர் பாதபூஜை செய்தனர். அப்போது அந்தச் சபையில் வீற்றிருந்த சிசுபாலன் அதைப் பார்க்கப் பொறுமல் வாசுதேவரை நிந்திக்கத் தொடங்கினன். பூபாரம் நீக்குவதற்காகவே கிருஷ்ண பகவான் அவதரித்தவராகையால், அவனைக் கொல்வதற்கு

அதுவே நல்ல தருணமெனக் கருதி, அவ னுடைய நிந்தனையால் கோபங் கொண்டவர் போல் அவனைப் போருக்கழைத்து, தமது சக்ரா யுதத்தால் அவன் கழுத்தை யறுத்துத் தள்ளினர்.

இவ்வாறு பகவான் பாண்டவரது அன்பால் கட்டுண்டு இந்திரப் பிரஸ்தத்திலிருக்கும்போது, சௌனகாதிபதியாகிய சாலுவன் ருக்மணியின் விவாக காலத்தில் பலராமரால் தோல்வியடைந்த வுடன் தவஞ் செய்து, ஒரு இருப்புக் கோட்டை யைப் பெற்று அதில் மானமிகுந்த வீரர்களைக் கொண்டு துவாரகைக்கு வந்து சேர்ந்தான். இதை அறிந்த துவாரகாநாதரான கிருஷ்ணர் துவார கையை அடைந்து அவனோடு யுத்தஞ் செய்து, அவனையும் அவன் கோட்டையையும் அழித்தார். அவனழிவுற்றதைக் கேட்ட தந்தவக்ரன் கண்ண பிரானை எதிர்க்க, அவனையும் மாய்த்தனர்.

ஒருகால் அருச்சுனன் தீர்த்த யாத்திரை செய்துகொண்டு துவாரகையை அடைந்து, பரந் தாமன் தங்கையாகிய சுபத்திரா தேவியை மணம் புரிய எண்ணங்கொண்டு அவரைத் துதித்தான். தமது அடியாரது வேண்டுகோளை முடிப்பதே கருமமாகக்கொண்ட கண்ணபிரான், அவன் எண் ணப்படி சுபத்திரா தேவியை அவனுக்கு மணம் புரிவித்து, உதவியற்ற பாண்டவர்க்குத் தாம் உதவி

புரியக் கடமைப் பட்டவரென்றும் உலகுக் கறிவித்தனர்.

அப்பால் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பாரதப்போர் மூண்டது. அதில் கிருஷ்ண பகவான் பார்த்தனுக்குச் சாரதியாகி, அவனுக்குக் கீதையை உபதேசித்து அவனைத் தமது உத்தமோத்தம சிஷ்யனாகக் கொண்டு, பாண்டவர்களுக்குச் சகாயமாய்ப் பதினேழுநாள் சண்டையையும் முடித்துப் பூபாரம் போக்கினர். பதினெட்டாம் நாள் பாக்கியிருந்த துரியோதனன் போர் செய்கையில், பல்வலனைச் சங்கரித்துத் தீர்த்த யாத்திரைக்குச் சென்றிருந்த பலராமர் அவ்விடத்துக் கெழுந்தருளினர். அப்போது வீமன் கண்ணபிரானருளால் துரியோதனனை மாய்க்க, பலராமருக்குச் சற்று மனத்தாங்கல் உண்டாயிற்று. அதை அவர் ஒருவாறு தாமே சமாதானஞ் செய்துகொண்டு, 'விதி வலிது' எனத் துவாரகையை அடைந்தார்.

கிருஷ்ண பகவான் பாண்டவர்களுக்கு ஹஸ்திநபுரத்தில் பட்டாபிஷேகம் செய்வித்துத் துவாரகைக்கு எழுந்தருளினர். அவருடைய ஒரு சாலை மாணாக்கராகிய குசேலர் என்பவர் பகவானை அடுத்துத் தமது வறுமையை ஒழிக்கக் கருதி துவாரகைக் கேகினர். அவர் எண்ணத்தை அறிந்த கண்ணபிரான், இந்திரனும் அடைவதற்

கரிய பெருஞ் செல்வம் அவருக்குப் பெருகுமாறு அருள்புரிந்தார்.

பின்பு கண்ணபிரான் ஒரு சூரிய கிரகணத் தன்று சியமந்த பஞ்சகத்துக்கு ஸ்நானத்துக்குச் சென்றபோது, கோவியர்களுக்கு ஞானேபதேசம் செய்து மோக்ஷ மடைவித் தருளினுர்.

ஒரு நாள் வசுதேவர் கம்ஸனுல் கொல்லப் பட்ட ஆறுகுழந்தைகளையும் நினைந்து தேவகி யோடு துக்கப்பட்டார். உடனே பலராம கிருஷ் ணர்கள் இருவரும் அக்குழந்தைகளைக் கொணர் ந்து தமது பெற்ருேர் முன்விட்டு அவர்களை மகிழ்வித்தனர்.

பின்பு கிருஷ்ணபகவான், மிதிலாபுரி அரச ஞன ஜனகனும் தேவனென்னும் அந்தண னும் தம்மிடத்தில் உத்தம பத்தி பூண்டிருத்தலை யுணர்ந்து, அவ்விடத்துக்கு எழுந்தருளி அவர் கட்கு ஞானேபதேசம் செய்தருளினுர்.

அக்காலத்தில் விருகாசுரன் என்னும் அசு ரன் பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்து, அவன் கைபட்ட இடமெல்லாம் தகிக்கப்பட வேண்டு மென்று வரம் பெற்ருன். அவ்வரத்தைப் பரிசோ தித்துப் பார்ப்பதற்குப் பக்கத்தில் பரமசிவனைத் தவிர வேருெருவரும் காணப் படாமையால், அவர் திருமுடியில் கையை வைக்கத் தொடங்கி

னன். அப்போது கிருஷ்ணபகவான் தமது மாயையால் அவனை வஞ்சித்து, அவன் கையை அவன் தலையிலேயே வைத்துக்கொள்ளும்படி செய்து அவனை எரித்தனர்.

ஒருநாள் ஓர் அந்தணன் தனக்குப் பிறந்த குழந்தைகள் யாவும் இறந்ததைக்கண்டு மனம் வருந்தினன். கடைசியில் அவன் மனைவி பத்தாவது கருப்பமடைய, அக்குழந்தையையாவது காப்பாற்றிக் கொடுக்கும்படி அர்ச்சுனனை வேண்டினன். அவனும் அப்பார்ப்பனியைக் காத்து நிற்கும்போதே பூமியில் தோன்றிய குழந்தை மறைந்தது. அதனல் பார்த்தன் தன்னையும் தன் வலிமையையும் வெறுத்து, அக்கினியில் மூழ்கி உயிரை விடத் துணிந்தான். இதை அறிந்த கண்ணபிரான் அங்குற்று, அருச்சுனனைத் தேற்றி அவனேடு பாற்கடலுக்குச் சென்று, அங்குப் பள்ளிகொண்டிருந்த பத்மநாபனைத் தரிசித்து, குழந்தைகளை மீட்டுக் கொணர்ந்து மறையோனுக் களித்தனர்.

இவ்வாறு கண்ணபிரான் பலவகையான திருவிளையாடல்கள் புரிந்து பூபாரம் நீங்கியதெனக் கண்ட அளவில், யாதவர்களை முன்போல் தேவர்களாக்கி,விண்ணுலகுக்கு அனுப்பித் தாமும் தமது சோதிக்கெழுந்தருளத் திருவுளம் கொண்டார்.

அப்போது யாதவர்களும் கர்வமுற்று அந்தணர்களையும் அவமதிக்கத் தொடங்கினர். அதனுல் முனிவர்கள் அவர்களைச் சபித்து, அவர்கள் அழிதற்குக் காரணமான ஒரு இருப்புலக்கையை உற்பத்தி செய்தனர். அதை யாதவர்கள் அராவி அப்பொடிகளைக் கடலோரத்தில் கொட்டிவிட்டார்கள். அப்பொடிகளெல்லாம் கோரைகளாக உயர்ந்து வளர்ந்தன. அதில் மிஞ்சிக்கிடந்த ஓர் இருப்புத்துண்டை ஒரு மீன் விழுங்கியது. அம்மீனை ஆகாரத்துக்காகப் பிடித்த ஒரு வேடன் அதன் வயிற்றிலிருந்த அவ்விருப்புத் துண்டை எடுத்து, தனது அம்பின் நுனியில் பொருத்தி வைத்தனன்.

இஃதிங்ஙனமாக, யாதவர்களில் உத்தமர் யாவரும் ஞானசாஸ்திரம் கற்கத் தொடங்கினர். வசுதேவர் நாரதரிடத்தில் தத்துவோபதேசம் பெற்ருர். உத்தவர் கண்ணபிரானிடத்தில் யோகஞானங்களை உணர்ந்தனர். அவ்வுபதேசத்தைப் பெற்றபின் உத்தவர் நைமிசவனத்தை அடைந்து தவஞ் செய்யத் தொடங்கினர்.

கிருஷ்ணபகவான் முனிவர் சாபம் சமீபித்ததை அறிந்து, அதை ஏற்றுக்கொள்ள யாதவரும் தாமும் முன்னிற்க வேண்டுமென்று உத்தவருக்குரைத்து, துவாரகையிலுள்ள யாதவர் யாவரும் தம்மிடத்துள்ள பொருள்கள் எல்லாவற்றையும்

தானஞ்செய்து புண்ணிய நீராடினுல் எவ்வகைத் தோஷமும் நீங்குமென விளம்பரஞ் செய்வித்தனர்.

யாதவர் அவ்விதமாகவே தமது பொருளைத் தானமிட்டு, கடற்கரை யடைந்து நீராடி விரத முதலியன அனுஷ்டித்து வருங்கால், மாயனுர் சூழ்ச்சியால் அவர்கள் யாவருக்கும் மதுவில் விருப்பமெய்த, அதை யாவரும் மிகுதியாகப் பானஞ் செய்து மதிமயங்கி, கலகம் விளைத்துச் சண்டையிட ஆரம்பித்தனர்.

அப்போது அவர்களிடத்தில் ஆயுதங்க ளில்லாமையால் அங்கு இருப்புத்தூளால் முளைத்திருந்த கோரைகளைப் பிடுங்கி, ஒருவரையொருவர் அடித்துக் கடைசியிலே யாதவர் யாவரும் மாண்டனர். இதைக்கேட்ட பலராமர் தமது பழைய உலகமாகிய வைகுண்டத்தை யடைந்தார்.

அதனுல் கண்ணபிரான் துவாரகையின் அரசாட்சியைக் கைக்கொண்டார். அப்போது பரந்தாமனுகிய கிருஷ்ணபகவான் தமது வைகுண்டத்தை யடையக் கருதி, கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த ஒரு காட்டில் உள்ள அரசமரத்தடியில் தமது திருத்தாளில் சிலம்பும், இடையில் பீதாம்பரமும்,மார்பில் ஆரங்களும்,காதுகளில்குண்டலங்களும் உடையவராய், சதுர்ப்புயங்களும் பஞ்சா

யுதமும் துலங்க வீற்றிருந்தார். அந்த வைபவத்தைக் கண்ட தேவர்கள் யாவரும் துதித்தனர். கண்ணபிரான் முனிவர் சாபம் நெருங்கியதை உணர்ந்து, தமது திருவுருவைக் கருதினவராக அமர்ந்திருந்தார். முன்பு மீன் வயிற்றினின் றெடுத்த இரும்பினுல் செய்யப்பட்ட அம்பை யுடைய வேடன் பகவானை வெகு தூரத்திலிருந்து கண்ணுற்முன். அப்போது, பகவானுடைய தோற்றம் அவனுக்கு மானைப்போல் காணப்பட் டது. அதனுல் அவன் தன் கையிலிருந்த அந்த அம்பைப் பகவானது பாதத்தை நோக்கி ஏவி ஞன். அதுகாரணமாக அப்பெருமான் வருந்தி யவர்போல் திருவிளையாடல் புரிந்து, தமது தேர்ப் பாகனுகிய தாரகனை அழைத்து, அர்ச்சுனனிடத் தில் அன்று முதல் ஏழாம் நாளில் துவாரகை கடலில் மூழ்கப் போவதால் அங்குள்ளவர்களை ஹஸ்தினபுரத்துக்கு அழைத்துச் செல்லுமாறு அறிவிக்கும்படி உத்திரவிட்டு, பிரமதேவர் முத லான தேவர்களின் வேண்டுகோளுக் கிரங்கித் தம்முடைய வைகுண்டத்திற்கு எழுந்தருளி ஞர்.

அந்தை அறிந்த வசுதேவரும் தேவகி தேவி யும் கண்ணபிரானது மனைவிமார்களும் அக்கினி யிற் புகுந்தனர்.

தாரகனுல் கிருஷ்ணபகவானது திருவிளை யாடலை உணர்ந்த அருச்சுனன், அந்த க்ஷணமே துவாரகையை அடைந்து லோகநாதரைத் தரிசிக் கப் பெருமையால் வருந்தி, துக்கசாகரத்தில் மூழ் கிப் பின்பு பகவானுல் உபதேசிக்கப்பட்ட கீதையின் மகத்துவத்தால் அத்துக்கத்தை ஒழித்து, அங் கிறந்தவர்களுக் கெல்லாம் ஈமக்கடன் செய்வித்து, அங்குள்ளோரை அஸ்தினபுரத்துக்கு அழைத் துச் சென்றனன். குறிப்பிட்ட நாளில் கடல் பொங்கித் துவாரகையை அடைந்து, கிருஷ்ண பகவான் அரண்மனை தவிர மற்ற யாவற்றையும் மூழ்குவித்தது. முன்பு இறந்தோர் யாவரும் தேவ லோகத்தில் முன்போல் தேவர்களாக விளங்கி னர். பூமிதேவியுங் களிப்புற்றனள்.

(கிருஷ்ணுவதாரக் கதைகளை முற்றும் சொல் லப்புகின் இச்சிறு புத்தகம் ஒரு பெருங்காவிய மாகுமென அஞ்சி அவற்றை மிகச் சுருக்கினேன்.)

கெடுப்பதொழி.

---

## கற்கியவதாரக் கதை.

இது, விஷ்ணுமூர்த்தி ஒரு திவ்ய குதிரையின் உருவெடுத்துச் சாதுக்களைக் காத்தருளுவரென்ப தைக் கூறுவது.

கதையின் வரலாறு.

இக்கலியுக முடிவில் பூவுலகில் நான்கு வேதங்களும் மறைந்து, நான்கு வருணங்களும் ஒன்ருகி, நான்கு ஆசிரமங்களும் ஒழியவே, யாவரும் அறத்தை மறந்து ஒருவருக்கொருவர் தீங்கிழைப்பதே தொழிலாகக் கொள்வர். அப்போது அரசர்களும், எமன் பல உருவங்கள் எடுத்தாற் போல உயிர்களை வாட்டி, ஒருவர் பூமியை ஒருவர் கவர்ந்து போர் புரிந்து மாள்வர். இதைக் காணும் பூமிதேவி இயல்பாகவே தன் பாரம் ஒழிகின்றதென உவகை பூத்து நகையாடுவாள். மானிடரும் எமனொருவன் இருக்கிருனென்பதை மறந்து, தாமே சிரஞ்சீவியென்னும் கருத்துடையராய்ப் பொருளாசை மேலிட்டுப் பேராசைக் கடலில் மூழ்குவர்.

அப்போது கருணுகரரான திருமால், நீர்வளமிகுந்த சம்பலக் கிராமத்தில் தேவர்களும் புகழும் படியான தவப்பேற்றையுடைய அந்தணர் சிகாமணியாகிய விஷ்ணுவேதியனிடத்தில் ஒரு குதிரை முகத்தினராக அவதரிப்பார். அவ்வுருக்கொண்ட காருண்ய மூர்த்தி, வேதத்தைக் குதிரையாகக்கொண்டு எழுந்தருளி கையில் வாளேந்தி, அரசரெனப் பேர்படைத்து மனிதரை வேட்டையாடும் வேடுவர்போன்ற பாதகரைச் சங்



கரித்தருளுவார். அப்போது அவ்விறைவன் அணிந்து வரும் திருத்துழாய் மாலையின் திரு மணம் வீசப்பெற்ற பாக்கியசாலிகளே ஞானிக ளாகி அவர் பாதத்தை யடைந்து நித்தியாநந்தம் அடைவர். அல்லாதார் இதை அடுத்துச் சுழன்று வரும் முதல் யுகமாகிய கிருதயுகத்தில் பிறந்திடுவர்.

இவ்வாறு விஷ்ணுமூர்த்தி, சாதுக்களைக் காக் கும் பொருட்டு அவ்வச்சமயத்துக் கேற்ற உரு வோடு அவதரிப்பதும் துஷ்டரைச் சங்கரிப்பதும் ஆன்மாக்களிடத்து அவர் கொண்டுள்ள கருணை யின் மிகுதியால் நிகழ்வனவே யன்றி வேறல்ல. அவரது திருவிளையாடல்களை ஆராயுங்கால், அவர் துஷ்டரிடத்தும் கருணையோடு நான்குவித உபா யங்களையும் செய்தருளிய பின்புதான், தாம் அவ தரித்த கருமத்தைப் பூர்த்தி செய்தருளுகிறார் என் பது நன்கு விளங்கும். அக் கருணைக் கடலின் திரு விளையாடல்களை அவர் செய்தவாறு எடுத்துரைப் பது எளிதான காரிய மன்று. அத் திருவிளை யாடல்களைக் கற்றும் கேட்டும் பிறர்க்குரைத்தும் வாழு நாளே நல்ல நாளாகும். அவ்வாறு செய்யப்படும் அன்பினால் விளையும் இன்பமே பேரின்ப மெனப்படும்.

[illegible]நோபட வோழுகு.

முற்றும்.

183883

Printed at The B. N. Press, Mount Road, Madras.

# OUR OWN PUBLICATIONS.

**Moral, Religious and Patriotic Instruction Series.**

| Fully Illustrated. | RS. | A. | P. |
|---|---|---|---|
| *மஹான்களின் சரிதம்—மலர் I | 0 | 2 | 6 |
| *மஹான்களின் சரிதம்—மலர் II | 0 | 3 | 0 |
| *மஹான்களின் சரிதம்—மலர் III | 0 | 4 | 0 |
| *மஹான்களின் சரிதம்—மலர் IV | 0 | 6 | 0 |
| *மஹான்களின் சரிதம்—மலர் V | 0 | 7 | 0 |
| மஹான்களின் சரிதம்—மலர் VI (In the Press) | | | |
| தசாவதாரம் (10 படங்களுடன்) | 0 | 8 | 0 |
| உலகநீதி— நீதிபோதக் கதைகள் | 0 | 2 | 0 |
| ஆத்திசூடி— நீதிபோதக் கதைகள் | 0 | 2 | 6 |
| *லீலாவதி கணித வாய்பாடு | 0 | 1 | 0 |
| *மணி பாலர் 1-வது வகுப்பு - (77 அழகிய படங்கள் அடங்கியது.) | 0 | 2 | 6 |
| தமிழ்ப்பாட புத்தகம் I-2-வது வகுப்பு | 0 | 3 | 0 |
| * ஷை V — I Form | 0 | 6 | 0 |
| * ஷை VI — II Form | 0 | 7 | 0 |
| * ஷை VII—III Form | 0 | 9 | 0 |

* இக்குறியிட்டவைகள் சென்னைத் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.

**T. K. SUBRAMANIAM & SON.**

***Educational Publishers,***

***Dabir West Street,***

***KUMBAKONAM.***